9/7
22 AUG 1938
MADRAS

Regd. No. M. 2569

ஹிபாஜத்துல் இஸ்லாம்

حفاظة الاسلام

மலர் 9 | செந்தமிழ் மாத சஞ்சிகை | இதழ் 8

HIFAZATH-UL-ISLAM

ஹிஜ்ரி 1357, ஜமாதுல் ஆகிர்மீ
1938ஆம் ஆகஸ்டு மீ

1. அல்குர்ஆன் ... 201 2. அல்ஹதீது ... 204
3. நமது முஸ்லிம் வீருகள் ... 206
4. மனைவிகளின் அடிமைகள் ... 210
5. உலக வினோதம் ... 213
6. தமூஜன் ஜங்கீஸ்கான் சரிதை வரலாறு ... 215
7. இஸ்லாத்தில் வியாபாரம், கைத்தொழிலின் சிறப்பு ... 219
8. ஆப்பிரிக்க காட்டுமிராண்டிகள் ... 222
9. பொதுவுடமையும் இஸ்லாமும் ... 224
10. மேனாட்டு யாத்திரையின் பயன் .. 231
11. சதிபதிகளின் கடமைகள் ... 235
12. இஸ்லாமிய ஒற்றுமையும் ஜனாப் ஜின்னாவும் ... 238

சென்னை
ஹிபாஜத்துல் இஸ்லாம் சங்கத்தாரின்
வெளியீடு

S.R. SARMA

ஹிபாஜத்துல் இஸ்லாம்

சந்தா விபரம்

இந்தியா, ஸிலோன், பர்மா முதலிய உள் நாடுகளுக்கு ...	ரூபா	3	0	0
பிணங்கு, சிங்கப்பூர், மலாயா முதலிய வெளிநாடுகளுக்கு	,,	4	0	0
தனிப் பிரதி ...	,,	0	4	0

ஒரு வருஷத்திற்கு குறைந்து பத்திரிகை அனுப்பப்படமாட்டாது.

நிபந்தனைகள்

1. சந்தாதாரர்களாகச் சேருகிறவர் முன்பணம் செலுத்தியாவது, வி. பி. யிலாவது பத்திரிகையைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

2. சந்தாதாரர்கள் கடிதம் எழுதும்பொழுதும், மணியார்டர் அனுப்பும்பொழுதும் தங்கள் சந்தா நம்பரை அவசியம் குறிப்பிடவேண்டும். பதிலறிய விரும்புவோர் ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

3. ஒரு வருஷத்திற்கு இடையில் சந்தாதாரராகச் சேருவோர் இஷ்டப்பட்டால் முந்திய மாதங்களின் சஞ்சிகைகளையும் கிரயங்கொடுத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

4. விஷயதானஞ் செய்ய விரும்புங் கனவான்கள் எளிய நடையில் ஒரே பக்கத்தில் மிகத் தெளிவாக எழுதி அனுப்பவேண்டும்.

5. மததூஷணையான விஷயங்களும், வீண் தர்க்கங்களை யுண்டு பண்ணும் வியாசங்களும், ஆளைக்குறித்துத் தாக்கி எழுதும் வியாசங்களும், பத்திரிகையின் நோக்கத்திற்கு மாறுபாடான வியாசங்களும் பிரசுரிக்கப்படமாட்டா.

6. எந்த வியாசத்தையும் நிறுத்திக்கொள்ளவும், திருத்திக்கொள்ளவும், சுருக்கிக்கொள்ளவும் ஆசிரியருக்கு உரிமையுண்டு.

மானேஜர்,

"ஹிபாஜத்துல் இஸ்லாம்" ஆபீஸ்,

43, போஸ்டாபீஸ் தெரு,

G. T., மதராஸ்.

Regd. No. M. 2569

22 AUG 1938
MADRAS

ஹிபாஜத்துல் இஸ்லாம்

حفاظة الاسلام

மலர் 9 | செந்தமிழ் மாத சஞ்சிகை | இதழ் 8

HIFAZATH-UL-ISLAM

ஹிஜ்ரி 1357, ஜமாதுல் ஆகிர் ௴
1938 ௵ ஆகஸ்ட் ௴

1. அல்குர்ஆன் ... 201 2. அல்ஹதீது ... 204
3. நமது முஸ்லிம் வீருகள் ... 206
4. மனைவிகளின் அடிமைகள் ... 210
5. உலக வினோதம் ... 213
6. தமூஜன் ஜங்கீஸ்கான் சரிதை வரலாறு ... 215
7. இஸ்லாத்தில் வியாபாரம், கைத்தொழிலின் சிறப்பு ... 219
8. ஆப்பிரிக்க காட்டுமிராண்டிகள் ... 222
9. பொதுவுடமையும் இஸ்லாமும் ... 224
10. மேனாட்டு யாத்திரையின் பயன் .. 231
11. சதிபதிகளின் கடமைகள் ... 235
12. இஸ்லாமிய ஒற்றுமையும் ஜனாப் ஜின்னாவும் ... 238

சென்னை
ஹிபாஜத்துல்இஸ்லாம் சங்கத்தாரின்
வெளியீடு

SARMA

ஹிபாஜத்துல் இஸ்லாம்

சந்தா விபரம்

இந்தியா, ஸிலோன், பர்மா முதலிய உள் நாடுகளுக்கு ...	ரூபா	3	0	0
பினங்கு, சிங்கப்பூர், மலாயா முதலிய வெளிநாடுகளுக்கு	"	4	0	0
தனிப் பிரதி ...	"	0	4	0

ஒரு வருஷத்திற்கு குறைந்து பத்திரிகை அனுப்பப்படமாட்டாது.

நிபந்தனைகள்

1. சந்தாதாரர்களாகச் சேருகிறவர் முன்பணம் செலுத்தியாவது, வி. பி. யிலாவது பத்திரிகையைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

2. சந்தாதாரர்கள் கடிதம் எழுதும்பொழுதும், மணியார்டர் அனுப்பும்பொழுதும் தங்கள் சந்தா நம்பரை அவசியம் குறிப்பிடவேண்டும். பதிலறிய விரும்புவோர் ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

3. ஒரு வருஷத்திற்கு இடையில் சந்தாதாரராகச் சேருவோர் இஷ்டப்பட்டால் முந்திய மாதங்களின் சஞ்சிகைகளையும் கிரயங்கொடுத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

4. விஷயதானஞ் செய்ய விரும்புங் கனவான்கள் எளிய நடையில் ஒரே பக்கத்தில் மிகத் தெளிவாக எழுதி அனுப்பவேண்டும்.

5. மததூஷணையான விஷயங்களும், வீண் தர்க்கங்களை யுண்டு பண்ணும் வியாசங்களும், ஆளைக்குறித்துத் தாக்கி எழுதும் வியாசங்களும், பத்திரிகையின் நோக்கத்திற்கு மாறுபாடான வியாசங்களும் பிரசுரிக்கப்பட மாட்டா.

6. எந்த வியாசத்தையும் நிறுத்திக்கொள்ளவும், திருத்திக் கொள்ளவும், சுருக்கிக்கொள்ளவும் ஆசிரியருக்கு உரிமையுண்டு.

மானேஜர்,

" ஹிபாஜத்துல் இஸ்லாம் " ஆபீஸ்,

43, போஸ்டாபீஸ் தெரு,

G. T., மதராஸ்.

حفاظة الاسلام

ஹிபாஜத்துல் இஸ்லாம்

நிச்சயமாக நாம் அ(ந்த இஸ்லாம் மதத்)தைக் காப்பாற்றுவோம். (குர்ஆன்)

ஆசிரியர் :—மௌலவி A. R. அப்துர்றஹீம் ஸாஹிப் (பாக்கவி)

மலர் 9	ஹிஜ்ரி 1357 ஜமாதுல் ஆகிர் மீ 1938ஆு ஆகஸ்டு மீ	இதழ் 8

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
22 AUG 1938
MADRAS

அல்குர்ஆன்

(அளவற்ற) அருளாளனும் (நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் (திரு) நாமத்தால் (இதனை ஆரம்பிக்கிறேன்.)

தௌபா(வை ஒப்புக்கோள்வதெல்லாம்) அறியாமையினால் தீமையைச் செய்து, பின்னர் சமீப(கால)த்தில் தௌபாச் செய்தவர்களுக்குத்தான். ஆகவே, அல்லாஹ் அவர்கள் மீது தௌபாவை ஒப்புக்கொள்வான். மேலும் அல்லாஹ் (மிக)அறிந்தவனாக(வும் மிக) விவேகியாக(வும்) இருக்கிறான்.

தௌபா என்பதற்கு இரண்டு விதமான பொருள்களுண்டு. மனிதன் தௌபாச் செய்வது ஒருவகை, அல்லாஹ் தௌபாச் செய்வது ஒருவகை. மனிதன் தௌபாச் செய்வது என்பதற்கு, அவன் செய்த பாவ வினையை நினைத்து வருந்தி ஆண்டவனிடம் மன்னிப்புத் தேடுதல் என்பது கருத்து. ஆண்டவன் தௌபாச் செய்தல் என்பதற்கு அடியார்கள் தங்களது பாவ வினைகளுக்காக வருந்தித் தன்னிடம் பாவ மன்னிப்புக் கேட்பதை அங்கீகரித்து, அவைகளுக்காக அவர்களை தண்டிக்காமல், விட்டு விடல் என்பது கருத்து. தவிர, அல்லாஹுதஆலாவினது திரு நாமங்களில் "தவ்வாப்" என்பதும் ஒன்று. அடியார்கள் செய்யும் தௌபாக்களை அங்கீகரிப்பதில் மிகத் தீவிரமானவன்; அதிகமாக மன்னித்து அங்கீகரிப்பவன் என்பது இதன் கருத்து. ஆனால் அல்லாஹுதஆலா தௌபாவை ஒப்புக்கொள்பவன் என்றால், தௌபாச் செய்கிற ஒவ்வொருவரையும் மன்னித்து, தௌபாவை ஒப்புக்கொள்ள வேண்டும் என்பது அவன் கடமையல்ல. ஆதலால், இறைவன், தௌபாவை அங்கீகரிக்கும் சந்தர்ப்பம் எது என்பதை இந்த ஆயத்தில் விளக்கிக் கூறி இருக்கிறான். அதாவது, பாவத்தை அறியாமையினால் செய்யவேண்டும், அப்புறம் சமீப காலத்திற்குள்ளாக தௌபாச் செய்யவேண்டும். இவ்விரு நிபந்தனைகளின் பேரிலேயே

தௌபா ஒப்புக்கொள்ளப்படும். அறியாமை என்பதற்கு கல்வி இல்லாமை, படிப்பு இல்லாமை என்பது கருத்தல்ல. ஏனெனில், அல்லாஹு தஆலாவிற்குத் திருப்தியான காரியம் எது ? அதிருப்தியான காரியம் எது என்பதைத் தெரிந்து கொள்வது அடியார்களது கடமையாகும். அதனைத் தெரிந்து கொள்ள முயலாமல் இருந்து கொண்டு பாவத்தைச் செய்தால், தெரியாமல் செய்ததாக ஏற்படாது. தெரிந்து கொள்ள முயலாமலிருந்தது ஒரு பாபமாக இருக்கிறது. இதனால் தான் படித்தவனையும், படியாதவனையும் பாவத்தைச் செய்தால் அவனை அறிவிலி, முட்டாள் என்று கூறப்படுகிறது. ஆகவே, இந்த இடத்தில் அறியாமை என்பதற்கு முட்டாட்டன்மை, அறிவின்மை, அசிரத்தை, பின்வரும் காரியத்தை முற்கூட்டியே ஆலோசனை செய்யாமை என்பது கருத்து.

நிற்க, சமீப(கால)த்தில் தௌபாச் செய்கிறவர்கள் என்ற வாக்கியத்திலுள்ள "சமீபகாலம்" என்பதற்கு மரணம் வருவதற்கு அதாவது ஆன்மா பிரியும்போது தொண்டைக் குழியிலிருந்து வரும் ஒருவகைச் சப்தம் தோன்றுவதற்கு முன் என்பது கருத்து. இவ்வுலகத்தின் இன்பம் சொற்பமானது என்பதாகத் திருகுர்ஆனிலேயே கூறப்பட்டிருக்கிறது. அத்துடன் இம்மை மறுமை ஆகிய இரண்டையும் சீர்தூக்கிப் பார்க்கும்போது இவ்வுலகத்தின் ஜீவியமே மிகச் சுருக்கமாக இருப்பதாலும், இதன் ஆயுள் முடிவுள்ளதாக இருப்பதாலும் ஒவ்வொரு மனிதரது ஜீவியமும் மிகவும் சொற்பமாகவே இருக்கிறது. தவிரவும், இவ்வுலகில் எத்தனையோ மக்கள் பிறந்து ஒரு காலம் வரை ஜீவித்திருந்து விட்டு அப்புறம் இறந்து போகிறார்கள். உலகில் இதுவரை பிறந்து இறந்தவர்களைக் கணக்கிட்டுக் கூறவும் முடியாது. உலகத்தின் ஜீவியமே சுருக்கமாக இருக்கும்போது அதில் பிறந்து இறந்து போகிற ஒவ்வொரு மனிதரின் ஜீவிய காலமும் மிகவும் சொற்பமானதாகையால் "மரணம்" என்பதைச் சமீபகாலம் என்பதாக திருகுர்ஆனில் சமிக்ஞையாகக் கூறப்பட்டிருக்கிறது.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு வபாத்தின் வேளை வந்தபோது ஹஜ்றத் ஜிப்ரயீல் (அலை) அவர்கள் பிரசன்னமாகி "முஹம்மதே றப்பு தங்களுக்கு சலாம் சொல்கிறான். எவர் தனது மரணத்திற்கு ஒரு ஜும்ஆ விற்கு முன்னதாக தௌபாச் செய்கிறாரோ அவரது தௌபாவை நான் ஒப்புக்கொள்வேன் என்பதாக அறிவிக்கிறான்" என்று கூறினார்கள். அதற்கு நாயகம் (ஸல்) அவர்கள் "ஒரு ஜும்ஆ அதிகம்" என்பதாகக் கூறினார்கள். அப்பொழுது ஜிப்ரயீல் (அலை) அவர்கள் சென்று திரும்பவும் வந்து, "தனது மரணத்திற்கு ஒரு நாளிகைக்கு முன்னதாக எவர் தௌபாச் செய்கிறாரோ அவரது தௌபாவை அங்கீகரிப்பேன் என்பதாக அல்லாஹுத ஆலா கூறுகிறான்" என்பதாக அறிவித்தார்கள். அதற்கு நாயகம் (ஸல்) அவர்கள் "ஒரு நாளிகை அதிகம்" என்பதாகக் கூறினார்கள். மறுபடியும் ஜிப்ரயீல் (அலை) அவர்கள் சென்று திரும்ப வந்து "அல்லாஹுத அலா தங்களுக்கு சலாம் சொல்கிறான். ஒரு நாளிகை அதிக காலம் என்றிருந்தால், மரணமடைபவனின் ஆன்மா தொண்டைக் குழியில் வந்து, நாவால் மன்னிப்புக் கேட்க இயலாதவனாகி, தனது பாவங்களுக்காகத் தன் மனத்தில் வருந்தி, என்னிடம் வெட்கப் படுவானாயின் அவனது பாவங்களை நான் மன்னித்து விடுவேன் ; அவனது பாவங்களை நான் பாராட்டமாட்டேன் என்பதாகக் கூறுகிறான்" என்னச் சொன்னார்கள். அப்பொழுது நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் "நிச்சயமாக அல்லாஹ் தனது அடியானது தௌபாவை அவன் மூச்சுத் திணறுமலிருக்கும்வரை அங்கீகரித்துக் கொள்வான்" என்பதாகக் கூறினார்கள். என்று ரிவாயத்துச் செய்யப்பட்டிருக்கிறது. மூச்சுத் திணறுதல் என்பதற்கு ஆன்மா தொண்டைக்கு வந்துவிடல் என்பது கருத்து. இச்சந்தர்ப்பத்தில்தான் மரணமடைபவர் தனக்கு மறு உலகில் சம்பவிக்கப் போகிற இன்ப துன்பத்தைப் பார்த்துக் கொள்வர். ஆகவே, மனிதனுக்கு மரணம் வரும் சமயம் வரை தௌபாச் செய்யச் சந்தர்ப்பம் இருக்கிறது என்ற விஷயம் இந்த ரிவாயத்திலிருந்தும், திருகுர்ஆன் ஆயத்திலிருந்தும் தெரிய வருகிறது. ஆயினும், தௌபாச் செய்வதை நாம் அலக்ஷியமாக நினைத்து ஒத்திப் போடுவது கூடாது. ஏனெனில், மரணம் வருவதற்குரிய காலத்தை மனிதராகப் பிறந்த நாம் எவ்விதத்திலும் முற்கூட்டியே உணர்ந்துகொள்ள முடியாது. ஆதலால், சன்மார்க்க நெறியில் செல்ல இறைவனது கிருபையை அடைய, பாபத்திலிருந்து விடுபட விரும்புகிற ஒவ்வொருவரும் தவறுதலாகப் பாவத்தைச் செய்து விட்டாலும்

உடனே மறு க்ஷணத்தில் தௌபாச் செய்து (அதனை மன்னிக்கத் தேடி) விடவேண்டும்.

ஆனால், ஒரு விஷயத்தை மட்டும் அவர்கள் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். தௌபாச் செய்வது உண்மையாகவே, அந்தரங்க சுத்தியாகவே இருக்கவேண்டும். வெளிக்கோலத்தில், வாயளவில் "தௌபா" என்று சொல்லி விட்டால் அது தௌபாவாகாது, அதனை இறைவன் அங்கீகரிக்கவுமாட்டான். இதனாற்றான், இந்த ஆயத்தின் இறுதியில் "மேலும், அல்லாஹ் (மிக) அறிந்தவனாக (வும் மிக) விவேகமுள்ளவனாக (வும்) இருக்கிறான்" என்று கூறப்பட்டிருக்கிறது. அதாவது, அந்தரங்க சுத்தியாக, உண்மையாக தௌபாச் செய்வதை அறிந்து கொள்பவன் என்பது கருத்து. தவிர, குற்றம் செய்தோர் தங்களது குற்றத்தை உணர்ந்து உண்மையாகவே பச்சாதாபமடைவார்களாயின் அவர்களை விவேகிகள் தண்டிக்கமாட்டார்கள். குற்றத்தை உணர்ந்ததே அவருக்குத் தக்க தண்டனை என்றும், குற்றத்தை உணர்த்துவதற்காகவே தண்டனை ஏற்பட்டதென்றும் கூறுவர். இவ்விஷயத்தையும் இறைவன் நன்குணர்ந்தவன் என்பதற்காகவே "விவேகமுள்ளவன்" என்று கூறப்பட்டிருக்கிறது.

உண்மையாக, அந்தரங்க சுத்தியாக தௌபா செய்தல் என்பதற்கு நான்கு அம்சங்களிருக்க வேண்டும். இந்நான்கு அம்சங்களில்லையேல் அந்தத் தௌபா உண்மையான தௌபா என்று எண்ணுவதற்கிடமில்லை. (1) தான்செய்த குற்றத்தை உணர்ந்து மனதார வருந்தவேண்டும். அதாவது பச்சாதாபப்படவேண்டும். (2) குற்றஞ் செய்வதை உடனே விட்டுவிட வேண்டும். (3) இனிமேல் மீண்டும் அதனைச்செய்வதில்லையென்ற உறுதி வேண்டும். (4) இவ்வாறு செய்த உறுதியும் பச்சாதாபமும் அல்லாஹுதஆலாவை வெட்கி, அஞ்சிச் செய்யவேண்டும். பிறருக்கு அஞ்சியோ, வெட்கப்பட்டோ செய்யலாகாது. இந்நான்கு அம்சங்கள் எதில் இருக்கிறதோ அதுதான் உண்மையான தௌபா. 'தௌபத்தே நஸூஹா' என்பது இதற்குத் தான் பெயர்.

ஹஜ்ரத் ஹஸன்பஸரீ (றஹ்.) அவர்கள் "நமது 'இஸ்திஃபார்'களுக்கே (பிழைபொறுக்தேடும் பிரார்த்தனைகளுக்கே) இஸ்திஃபார் செய்யவேண்டியது அவசியமாக இருக்கிறது" என்பதாகக் கூறி இருக்கிறார்கள். ஹஸன்பஸரீ (றஹ்.) அவர்கள் இமாம் அபூஹனீபா (றஹ்.) அவர்கள் காலத்திலிருந்தவர்கள். அந்த முற்காலத்தில்வாழ்ந்த ஜனங்கள் பாவம் பழி ஆகியவைகளில் அதிகம் ஈடுபட்டிருந்ததையும், தௌபாச் செய்தவர்கள் மீண்டும் மீண்டும் பாவத்திலீடுபடுவதையும் கண்ட இமாம் ஹஸன்பஸரீ (றஹ்.) அவர்கள் இவ்வாறு கூறி இருக்கிறார்கள் என்றால், இக்காலத்திலுள்ள நம்மவர் எப்பொழுதுமே பாவத்தில் மூழ்கி இருப்பதைக் குறித்து என்னென்றுரைப்பது? இனிப் பாவம் செய்வதில்லை என்று மன்னிப்புக் கேட்டு விட்டு அதனைத் திரும்பச் செய்தால் முன்னர் மன்னிப்புக் கேட்டது பொய்யுரைத்ததாகவே ஏற்படுகிறது. பொய்யுரைப்பது குற்றம். ஆகவே, இந்தப் பொய்க்காகவும் மன்னிப்புக் கேட்கவேண்டிய அவசியம். இதனைக் குறித்துத் தான் இமாம் ஹஸன்பஸரீ (றஹ்.) அவர்கள் "நம்முவடைய இஸ்திஃபார்களுக்காக நாம் இஸ்திஃபார் செய்வது அவசியமாக இருக்கிறது" என்று கூறியுள்ளார்கள்.

மேலும், இக்காலத்தில் தொழுகை முடிந்து சலாம் கொடுத்தவுடன் "அஸ்தஃபிருல்லாஹ்" "அஸ்தஃபிருல்லாஹ்" என்று மூன்று முறை கூறுகிறார்கள். அப்புறம் ஓதும் துஆக்களிலும் பாபமன்னிப்புக் கேட்கிறார்கள். திக்ரு மஜ்லிசில் 11 முறை 25 முறை என்று 'இஸ்திஃபார்' செய்கிறார்கள். இவ்வாறு செய்தும் பலர் பாபங்களை மீண்டும் மீண்டும் செய்வதானது இறைவனைப் பரிகசிப்பதற்கு ஒப்பாகவே இருக்கிறது. ஆகவே, தௌபா இஸ்திஃபார் செய்பவர்கள் தாங்கள் கூறுவதை உணர்ந்து பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும். மஸ்ஜிதுகளிலும், 'ஜாவியாக்களிலும் இஸ்திஃபார் செய்துவிட்டு, வெளியில் வந்தபின் மீண்டும் பாவத்தைச் செய்தால் அது ஆண்டவனைப் பரிகசிப்பதற்கொத்த செய்கையேயாகும். இதனால் அவர்கள்மீது அல்லாஹ்வின் கிருபையுண்டாகாமல் கோபம் தானுண்டாகும். ஆகவே, நம்மவர் தங்களது ஒவ்வொரு காரியத்தையும் உணர்ந்து செய்வதுடன், இவ்வுலகில் நமக்குத் தௌபாச் செய்வதற்குக் கிடைத்துள்ள அரிய சந்தர்ப்பத்தைத் தவறவிடாமல் உண்மையான, அந்தரங்க சுத்தியான முறையில் தௌபாச் செய்து ஆண்டவனது கிருபை 'றஹ்மத்'திற்கு ஆளாகுவார்களாக. எல்லாம்வல்ல இறைவன் தௌபாச் செய்ய நமக்கு நல்லுதவிபுரிந்து இம்மையிலும் மறுமையிலும் நம்மை ஆட்கொள்வானாக. ஆமீன் யாறப்பல் ஆலமீன்.

அல்ஹதீது

இரண்டு விதமான பேராசைக்காரர்களுக்கு ஒருபோதும் வயிறு நிறம்புவதில்லை. (அதாவது, கல்வியுள்ளவர்கள் இன்னும் செல்வமுள்ளவர்கள் என்பதாக நபிகள்நாயகம் (ஸல்.) அவர்கள் கூறியிருக்கிறார்கள். (பைஹக்கி).

கல்வியும் செல்வமும் எவ்வளவு கிடைத்தாலும் "போதும்" என்ற திருப்தியுடன் எவரும் இருந்துவிட மாட்டார்கள். ஆனால், கல்வியோ ஆத்மாவிற்குரிய செல்வம். பணமோ ஸ்தூலத்திற்குரிய செல்வம். இவ்விரு வகைச் செல்வத்தில் எது இருந்தாலும் மரியாதையும் கண்ணியமும் ஏற்படுவதால், உலகில் கல்வியையும், செல்வத்தையும் விரும்பாதாரில்லை. ஒருவர் எவ்வளவுதான் ஏழையாக இருந்தாலும், அவர் எவ்வளவு தரித்திரத்தில் ஈடுபட்டிருந்தாலும் அவரிடம் கல்விமட்டு மிருக்குமாயின் அவரிடம் பலர் செல்வதையும், பலருக்கு அவர் உபகாரியாக இருப்பதையும் நாம் காண்கின்றோம். தவிரவும், கல்விப் பிரியர் எவ்வளவு சிரமத்திலிருந்தாலும் அவர் அறநூல்களை, அறிவு நூல்களைப் பார்த்துவிட்டால் அதனை எவ்விதத்திலாவது வாங்கிவிடவேண்டும், அதனை முழுவதும் படித்துவிடவேண்டும் என்று விரும்புவதையும், கிரயத்திற்கு வாங்கப் பணமில்லாவிடினும் இரவலாக வாங்கியேனும், அல்லது கடனுக்குக் கிடைக்குமானால் கடனாக வாங்கியாவது அதனைச் சொந்தப்படுத்தி கொள்ள முயலுவதையும், அப்புத்தகம் கைக்குக் கிடைத்து விடில் எவ்வளவு அவசரமான அலுவல்களிருந்த போதிலும், உண்ண உணவிற்கு வழியில்லாதிருந்தாலும் அதனைக் கருத்துடன் படிப்பதையும், அதிலுள்ள விஷயஞானத்தை உணர்வதையும், தனது அறிவைப் பெருக்கிக் கொள்வதையும் மட்டும் விடுவதில்லை. தவிரவும், தனக்குப் புதிதாக ஒரு விஷயம் புரிந்து விட்டால், ஒரு அறிவு கிடைத்துவிட்டதற்காக அவருக்கு உண்டாகும் சந்தோஷத்திற்கு அளவிருப்பதில்லை. இது சம்பந்தமாக சொல்லப்படும் கதையொன்றை இவ்விடத்தில் குறிப்பிட விரும்புகிறோம்.

முற்காலத்தில் பாரசீக தேசத்தில் ஒரு கணித சாஸ்திரி இருந்தார். அவர் கணித சாஸ்திரத்திற் கரை கண்டவர். என்றாலும், ஒரு கணக்கு அவருக்குப் புரியவில்லை, எந்நேரமும் அதனைப்பற்றிய சிந்தையாகவே இருந்தார். ஒருநாள் அவர் குளிக்கச் சென்றிருந்த போது அக்கணக்கு அவருக்குச் சரியாக வந்து விட்டது. ஆகவே, அவர் சந்தோஷத்தின் மேலீட்டால் ஸ்நான அறையைவிட்டு வெகு தூரத்திற்குத் தன்னை மறந்து ஓடிவிட்டார். அப்புறம் அவருக்கு தான் நிர்வாணமாக இருப்பது தெரிந்து தனது செய்கைக்கு வெட்கப்பட்டாராம். அக்காலத்தில் ஸ்நான அறைக்குள் ஜனங்கள் தனித்தனியே சென்று ஸ்நானம் செய்வதும், அதுசமயம் அறையில் துணி கட்டிக் கொள்ளாமல் நிர்வாணமாகவே ஸ்நானம் செய்வதும் வழக்கமாயிருந்தது. எனவே, தனக்குத் தெரியாதிருந்த ஒரு அறிவு தனக்குக் கிடைத்ததுபற்றி அவர் அடைந்த சந்தோஷத்தினால் அவர் தனது சுய உணர்வையும் மறந்து வெளியிற் சென்றார். இதுபோல, செல்வத்தை, பொருளை, பணத்தைச் சம்பாதிப்பவர்கள் நாடோறும் அபிவிருத்தியடைந்து லக்ஷாதிபதியானாலும், அதற்குமேல் கோடீஸ்வரரானாலும் பணம் சம்பாதிக்கவேண்டும் என்ற ஆசையை விட்டு விடுபவராக இருப்பதைக் காண்கின்றோமில்லை. பணம் பெருகுகிற அளவிற்கு அவரது தொழிலும், முயற்சியும் பெருகிக்கொண்டே போவதை நாம் பார்க்கிறோம். ஒருவருக்குத் திடீரென ஒரு பெருந்தொகை கிடைத்து விட்டால் சந்தோஷத்தின் மேலீட்டால் அவர் இருதயம் வெடித்து இறந்து போனதாகவும் கூட சில சமயங்களில் பத்திரிகைச் செய்திகள் அறிவிக்கின்றன. எவ்வாறாயினும், கல்வியும் பொருளும் மனிதருக்குக் கிடைக்கும் பாத்தியங்களில் சிறந்தவை. இவை இரண்டுமிருந்தால் மற்றைய கண்ணியம், மரியாதை ஆகிய

வைகள் தானுகவரும். எனவே, மனிதராகப் பிறந்த எவரும் மரியாதையையும், கண்ணியத்தையும் விரும்புவதியல்பு.

ஆனுல், இவ்விரு செல்வமும் சரியானவழியில், சன்மார்க்கநெறியில் உபயோகிக்கப்பட்டால்தான் கண்ணியமும் மரியாதையும் உண்டு. ஆனுல், துன்மார்க்க வழியில் செலவு செய்யப்படின், அதனுல் இம்மையிலும் மறுமையிலும் அகௌரவமும் கண்ணியக் குறைவும்தான் ஏற்படும். ஏனெனில், படிக்காத ஒருவர் ஒரு குற்றத்தைச் செய்தால், அதனை ஜனங்கள் வெகு எளிதில் மன்னித்துவிடுவர்; தனக்குப் படிப்பில்லை என்பதை குற்றவாளி தனக்கு ஒரு புகலாகக் கூறிவிடலாம். என்றுலும், படித்த ஒருவர் குற்றம் செய்திடில் அதனை ஜனங்கள் மன்னிப்பதுமில்லை, அவர் தனக்குத் தெரியாது என்று புகல் கூறிக் கொள்ளவும் முடியாது. இது போல பணம் படைத்த ஒருவர் ஒரு துன்மார்க்கச் செய்கையைப் புரிந்து விட்டாலும் பொது ஜனங்கள் மன்னிப்பதில்லை. இவ்வளவு பணமிருந்தும், பெரிய குடும்பஸ்தராக இருந்தும் இவர் இப்படிச்செய்கிறுரே என்று மக்கள் கூறுவதை நாம் பார்க்கிருேம். ஆகவே, கல்வியும் செல்வமும் மனிதரைக் கண்ணியப்படுத்தவும், அகௌரவம் செய்யவும் ஏற்ற சாதனங்களாக இருப்பதால் இதனை உபயோகிக்கும் விஷயத்தில் மிக ஜாக்கிரதையாக இருக்க வேண்டியதவசியமாக இருக்கிறது. இவ்விரு பாக்கியங்களைப் பெற்றவர்களுக்கு மறுமையில் கௌரவம் கிடைப்பது போல, வேதனையும் கிடைப்பதற்கு ஹேதுவு மிருக்கிறது. துன்மார்க்கத்திலீடுபட்ட செல்வந்தரையும், கல்வியைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளாத அறிஞர்களையும் குறித்து ஹதீதுகளில் மிகப் பயங்கரமான செய்திகள் கூறப்பட்டிருக்கின்றன. படித்த ஒருவர் துஷ்டராக இருந்தால் அவரால் உலக மக்கள் எத்துணை கஷ்டத்திற்குட்பட நேரிடும் என்பதை நினைக்கும்போது மயிர்கூச்செறிகின்றது. இக்காலத்தில்கூட ருசியாவில் ராஸ்புத்தீன் என்ற பாதிரியின் துஷ்டத்தனத்தால் ரஷ்ய அரசகுடும்பத்தினர் சுட்டு சாம்பலாக்கப்பட்டனர். பொதுஜனங்களுக்கும் மதத்தின்பால் துவேஷமுண்டாகி ருசியா தேசத்தில் கிறிஸ்துவ மதத்திற்குப் பெரும் எதிர்ப்பேற்பட்டு, மாதா கோவில்களெல்லாம் நாடகக் கொட்டகைகளாகவும், தொழிற்சாலைகளாகவும் மாற்றப்பட்ட செய்தி பத்திரிகைகளில் வெளிவந்திருக்கின்றன. மதக்கல்வியைக் கற்றவர்கள் நிலைமைதான் இவ்வாறு என்பதில்லை, லௌகிகக்கல்வியைப்படித்தவர்களாலும் பெரிய அனர்த்தங்க ளேற்படுகின்றன. இப்பொழுது உலகிலேற்பட்டுள்ள யுத்தங்களுக்கும், மக்கள் விஷவாயுவினுலும், வெடிகுண்டுகளாலும் மடிவதற்கும் முக்கிய காரணம் லௌகிகக் கல்வியை அதிகமாகக் கற்றவர்கள் ஆட்கொல்லி ஆயுதங்களைப் புதுப்புது முறையில் கண்டுபிடித்து, பேராசைபிடித்த, நாட்டாசை பிடித்த, பதவி ஆசைபிடித்த வெறியர்களான பணக்காரர்களிடம் அவைகளை ஒப்புவித்ததால் குற்றமற்ற ஏழைகளும் சாமானியர்களும், அவர்களது ஆயுதங்களுக்கு இரையாகி மடிவதையும், அங்கஹீனர்களாகுவதையும் நாம் இப்பொழுது பார்க்கிருேம். நவீனக்கல்வியிற் கைதேர்ந்த பண்டிதர்களான மேனுட்டு அறிஞர்கள் ஆட்கொல்லிக் கருவிகளைக் கண்டு பிடிக்கும் விஷயத்தில் தங்கள் கல்வியை உபயோகிக்காமல் நல்ல விஷயங்களில் உபயோகித்திருப்பார்களாயின், உலகம் எவ்வளவு க்ஷேமத்தை அடைந்திருக்கும்? உலக மக்கள் எவ்வளவு சௌகரியத்தை அடைந்திருப்பர்? பணக்காரக்கும்பல்கள் தங்கள் பேராசையை விட்டொழித்து நாடெங்கும் வாழக் கேடொன்றுமில்லை என்றபடி ஏழைகளையும், மற்றவர்களையும் ஆதரித்திருப்பார்களாயின் லக்ஷக் கணக்கில் குற்றமற்றவர்கள் மடிய ஹேது வேற்பட்டிருக்காதல்லவா? பணம் படைத்த ஜப்பான் இப்பொழுது சீனுவின்மீது படை யெடுத்து நாடுநகரங்களையும், பெண்டுகளையும், இளைஞரையும், முதியோரையும் அழித்து வருவதற்குக் காரணம் யாது? பணம் படைத்தவர்களுக்கு வயிறு நிறம்பாமலிருப்பதனுலல்லவா? இதனுற்றுன், நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் பணக்காரர்களுக்கும் கல்விப் பிரியர்களுக்கும் வயிறு நிறம்புவதில்லை என்று கூறியதுடன், அதனை நல்லவழியிற் பிரயோஜனப் படுத்திக் கொள்ளாதவர்களுக்கு மறுமையில் கடுமையான வேதனைகளிருக்கின்றனவென்றும் எச்சரிக்கை செய்திருக்கிருர்கள். ஆகவே, இறைவன் இவ்விரு பாக்கியங்களில் எதை எவருக்களித்தாலும் அவர்கள் சன்மார்க்க நெறியில் ஈடுபட நல்லுதவி செய்வானுக. நம்மவரிலுள்ள அறிஞர்களும் செல்வந்தர்களும் தங்களுக்குக்கிடைத்த இப்பாக்கியத்தைச் சரியான வழியில் உபயோகப் படுத்துவார்களாக.



நமது முஸ்லிம் லீகுகள்

இந்தியாவிலுள்ள முஸ்லிம்களது தேசிய ராஜீய உரிமைகளைக் காப்பதற்கென்று சுமார் 32 ஆண்டுகளுக்கு முன்னர் அகில இந்திய முஸ்லிம் லீக் ஸ்தாபிக்கப்பட்ட விபரம் அன்பர்களறிந்ததேயாகும். நமது உரிமைகளுக்காகப் போராடவேண்டிய முக்கிய சந்தர்ப்பங்கள் ஏற்பட்ட போதெல்லாம் அகில இந்திய முஸ்லிம் லீகும், மாகாண லீகுகளும் சுறுசுறுப்பாக வேலை செய்து வந்திருக்கின்றன. இதுபொழுது கிராமங்களிலும், ஜில்லாக்களிலும்கூட லீக் சபைகள் ஏற்படுத்த வேண்டும் என, அகில இந்திய முஸ்லிம் லீக் மகா சபையில் தீர்மானிக்கப்பட்டதற்கேற்ப, இறைவன் கிருபையால் இந்தியாவிலுள்ள முஸ்லிம் கிராமங்களிலெல்லாம் பிரைமரி லீகுகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. ஜில்லா லீகுகளும் அமைப்பட்டிருக்கின்றன. இதற்கு முன் முஸ்லிம்களுக்கென அகில இந்திய முஸ்லிம் லீகும், மாகாண முஸ்லிம் லீகுகளும் இருந்தாலும் முஸ்லிம்களில் படித்தவர்களும், நகரங்களில்வாழும் சில தனவந்தர்களும்தான் லீக் சபைகளுக்கு அங்கத்தினராக இருந்தனர். அதன் நிர்வாகப் பதவிகளெல்லாம் அவர்கள் கைகளிலேயே இருந்தன. முக்கிய சந்தர்ப்பங்களில் நிர்வாக சபைகளைக் கூட்டுவதும், தங்களுக்கு உசிதமாகத் தோன்றும் தீர்மானங்களைச் செய்வதும், அரசாங்கத்திற்கு மனுக் கொடுப்பதும், கவர்னர்களையும் வைசிராயையும், இதர முக்கிய உத்தியோகஸ்தர்களையும் அவர்கள் பேட்டி காணுவதுமாக இருந்தனர். ஆனால், இந்தியாவிலுள்ள ஹிந்து சமூகத்தார் முஸ்லிம்களுக்கு ராஜீய சுதந்திர உரிமைகளை நியாயமான முறையில் அளிக்க விரும்பாத சமயத்திலும், இதர முக்கிய சமயங்களிலும் முஸ்லிம் லீகுகள் இந்திய முஸ்லிம்கள் சார்பாகப் போராடின. தன்சக்திக்கேற்றவாறு வெற்றியும் அடைந்தன. இந்திய முஸ்லிம்களின் அபிப்பிராயத்தைத் தன்பக்கல் இழுப்பதற்காக பெரிய கிராமங்களிலும், தக்க ஊர்களிலும், நகரங்களிலும், பட்டினங்களிலும் முஸ்லிம் பொதுக் கூட்டங்களைக் கூட்டிப் பிரசங்கங்களைப் புரியச் செய்து முஸ்லிம்களின் ஆதரவையும் அடைந்துவந்தன. சுருங்கக்கூறுமிடத்து, அகில இந்திய முஸ்லிம் லீக் நிர்வாகிகள் விருப்பத்தை ஏனைய முஸ்லிம்கள் ஆதரிக்க வேண்டிய நிலைமையிருந்துவந்தது. அவர்கள் தவறு செய்தால் அதன் பயனையும் எல்லா முஸ்லிம்களும் அடைய வேண்டியதாக இருந்தது.

ஆனால், இதுபொழுது நிலைமை வேறு விதமாக மாறிவிட்டது. பிரைமரி லீகுகளும், ஜில்லா லீகுகளும், மாகாண லீகுகளும் ஏற்படுத்தப்பட்டும், தேர்தல் மூலமாகவே உத்தியோகஸ்தர்களும், நிர்வாகிகளும், தெரிந்தெடுக்கப்படுவதாலும், ஜில்லா லீகுகளுக்கும், மாகாண லீகுகளுக்கும் அங்கத்தினர் பதவிகள்கூட முறையே பிரைமரி லீகுகளாலும், ஜில்லா லீகுகளாலும் தெரிந்தெடுக்கப்பட வேண்டியதிருப்பதாலும் முஸ்லிம் பொது ஜனங்களது அபிப்பிராயமே அகில இந்திய முஸ்லிம் லீகிலும், மாகாண லீகு

களிலும் வோங்கி நிற்குமென்பதிலேய மில்லே. படித்த வகுப்பாரிடமும், நகரங் ளில் வாழும் சில தனவந்தர்களிடமும் இருந்த அதிகாரம் இதுபொழுது முஸ்லிம் பொது ஜனங்களிடம் மாற்றப்பட்டிருக் கிறது. முஸ்லிம் பொது ஜனங்களது அபிப்பிராயத்திற்கு விரோதமாக லீகு கள் இனி எதையும் செய்ய முடியாது. ஆனல், பொது ஜனங்களுக்கு விஷ யத்தை அறிவித்து அவர்களுக்கு நல்ல ஆலோசனைகளை எடுத்துரைத்து, உசித மான தீர்மானத்தைச் செய்யப் படித்த வர்களுக்கு இன்னமும் உரிமை இருந்து கொண்டுதானிருக்கிறது. எதேச்சாதி காரமாகக் காரியங்களைச் செய்ய இனி அவர்களால் முடியாது என்பதுதான் இப்பொழுது முஸ்லிம் லீகில் செய்யப் பட்ட புதிய சீர்திருத்தத்தின் பயன்.

எனவே, பிறைமரி லீகுகளும், ஜில்லா லீகுகளும், மாகாண லீகுகளும் தங்களுக் குக் கிடைத்துள்ள உரிமைகளை நேரா யனமுறையில் உபயோகித்து, அகில இந் திய முஸ்லிம் லீக் ஸ்தாபிக்கப்பட்ட தன் நோக்கத்தைச் சீரிய முறையில் நிறை வேற்றி, முஸ்லிம்களுக்கு நன்மை செய்வ தும், முஸ்லிம்களது தேசிய ராஜிய உரிமைகளைப் பாதுகாப்பதும் அவசிய மாகும். இவ்வித நிலைமையில் சமீபத் திய சில நாட்களாக முஸ்லிம் லீகுகள் அவ்வளவு உற்சாகமாக வேலைசெய்வ தைக் காணும் என்று கூற நமக்கு விசனமாக இருக்கிறது. நமது அகில இந்திய முஸ்லிம் லீக் தலைவர் ஆலீஜனப் முஹம்மது அலீ ஜின்னவிற்கும் காங் கிரஸ் தலைவர்களுக்குமிடையில் வகுப்புச் சமரசம் சம்பந்தாக பகிரங்கச் சம் பாஷணை ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து நமது லீக் அபிமானிகள் உரக்கத்திலீடு பட்டு விட்டார்களென்றே தோன்று கிறது. வகுப்புச் சமரசம் ஏற்பட்டாலும் சரி, சமரசம் ஏற்படாவிட்டாலும் சரி, முஸ்லிம் லீக்குகள் தங்களது வேலைகளைச் செய்துக்கொண்டே இருக்கவேண்டும். வகுப்புச் சமரசத்திற்காக வென்றே, காங்கிரஸுடன் உடன்படிக்கை செய்வ தற்காகவென்றே முஸ்லிம்லீக் ஏற்படுத் தப்படவில்லே. முஸ்லிம்களது முன்னேற் றத்திற்கு, தேசிய ராஜ்ய உரிமைப்பாது காப்பிற்குமென்றே ஏற்படுத்தப்பட்டது. ஆதலால், வகுப்புச் சமரச சம்பாஷணை வெற்றியடைந்தாலும் சரி தோல்வி யடைந்தாலும் சரி லீக் சபைகள் தங்க ளது காரியங்களை விடாமற் செய்து கொண்டே இருக்கவேண்டும். பாருங்கள் காங்கிரஸ் கமிட்டிகள் இச்சம்பாஷணை களை முன்னிட்டு தங்களது காரியங்களைச் செய்யாமல் அயர்ந்து நின்று விடவில்லே. போதாக் குறைக்கு காங்கிரஸ் பொது ஜனத் தொடர்புப் பிரசார வேலே நிற் கவுமில்லே. இவ்வித நிலைமையில் முஸ் லிம் லீகுகள் உறங்குவதானது முஸ்லிம் லீகின் நோக்கத்திற்கே முற்ற முற்ற விரோதமான பயனைத்தரும் என்று எச் சரிக்கிறோம்.

தவிரவும், தலைவர்களது சம்பாஷ ணையை நினைத்துக்கொண்டு லீக் பிரை மரி சபைகளும் மற்ற சபைகளும் ஒய்ந்தி ருப்பதைப் பார்த்தால், ஒருவேளை லீகுக் கும் காங்கிரஸுக்கு மிடையில் வகுப்புச் சமரசமேற்பட்டுவிட்டால், பிரைமரி லீகு கள் இனிதேவை இல்லை என்றுக் கூறி, அவைகளைக் கலைத்து விடவேண்டும் என் றுங்கூடக்கூற முன்வந்துவிடுவார்களோ என்று நாம் ஐயமடைகின்றோம். முஸ் லிம் லீக் பிரைமரி சபைகளும், ஜில்லா சபைகளும் ஏற்படுத்தப் படுவதையும், கிராமங்களிலெல்லாம் லீக் உணர்ச்சி ஏற்பட்டிருப்பதையும் கண்டுதான் காங் கிரஸ் வாதிகள் சமரசப் பேச்சுக்களை ஆரம்பித்திருக்கின்றனர். ஆகவே, அந்தச் சபைகளை நம்மவர் ஒழித்து விட்டாலும், அல்லது வேலை செய்யா மல் விருதாவாக வைத்திருந்தாலும் காங்கிரஸ் வாதிகள் சமரசத்திற்கு வரப் போவதில்லை. இவர்களைத்தவிரவுள்ள இதரர்களும் முஸ்லிம்களை லக்ஷியம்

செய்யமாட்டார்கள். இதுபொழுது சமரசம் ஏற்பட்டாலும், அந்தச் சமரசத்தை அவர்கள் மதித்து நேர்மையாக நடந்து வருவதும்கூட முஸ்லிம் லீக் பிரசாரமும், அதன் வேலைகளும் நாட்டில் ஓங்கி இருக்கும் அளவிற்குத்தான் இருக்கும். ஆகவே, முஸ்லிம்கள் தங்களது தேசிய ராஜிய உரிமைகளைப் பெறுவதற்கும், இனிமேல் புதிய உரிமைகளை அடைவதற்கும், இதுகாறும் பெற்றிருக்கும் உரிமைகளைக் காப்பாற்றிக்கொள்வதற்கும் பிரைமரி சபைகளும், ஜில்லா சபைகளும் அவசியம் இருக்கவேண்டியதாக இருக்கிறது. அதுவும் பெயருக்கு மாத்திரம் இல்லாமல் உண்மையிலேயே கிரியாம்சையில் இருக்க வேண்டும். அதாவது, முஸ்லிம்கள் கல்வி தொழில் முதலியவைகளில் பின்னடைந்திருப்பதால் அவர்கள் இத்துறைகளில் முன்னேற்றமடைவதற்கான நிர்மாண வேலையிலீடுபட்டு நிரந்தரமான ஸ்தாபனங்களை ஏற்படுத்த வேண்டும். முஸ்லிம்களுக்குள் இருந்துவரும் தலைமைப் பதவி ஆசையை ஒழித்து பொதுஜனத் தொண்டு செய்வதில் அவர்களுக்கு விருப்பமுண்டாகும்படிச் செய்யவேண்டும். முஸ்லிம்களில் ஒற்றுமை, சகோதரத்துவம், சகிப்புத்தன்மை முதலியவைகளேற்படுத்த முயலவேண்டும். எல்லாவற்றிலும் முக்கியமாக முஸ்லிம்களுள் மார்க்க பக்தியை உண்டாக்க வேண்டும். முஸ்லிம்களுக்கு இப்பொழுதிருந்து வருகிற செல்வாக்கும், இதற்குமுன் இருந்த செல்வாக்கும் அவர்களது மார்க்கபக்தியின் பயனேயாகும். முஸ்லிம் பொது ஜனங்கள் தொழுகை, நோன்பு, ஜக்காத்து முதலியவைகளை அலக்ஷியம் செய்தும், மார்க்கக் கல்வியைக் கற்காமலும், இதர முக்கிய சன்மார்க்க கிருகைகளிலீடுபடாமலுமிருந்தால், அவர்களை முஸ்லிம் அல்லாதார் வெகு சுலபமாக ஏமாற்றித் தங்களுக்குக் கீழ்படுத்திக்கொள்ள முடியும். இதனுற்றுன், காங்கிரஸ்காரர்கள் ஏற்படுத்தி இருக்கும் வார்தா கல்வித்திட்டத்தில் மதக்கல்வியை வேண்டுமென்றே கைவிட்டிருக்கின்றனர். இத்திட்டத்தில் மார்க்கக் கல்வியை முக்கியமாக கைவிட்டதற்கு காந்தியார் கூறும் சமாதானம் தேன் சொட்டுவதுபோல் வெளிக்குத் தோன்றினுலும், அதற்குள் பாஷாணம் மறைந்திருக்கிறது என்பதை அறிவித்துக்கொள்கிறேம். அக்கல்வித் திட்டத்தின்படி அவர்கள் இயற்றியுள்ள பாடப் புத்தகங்கள் இன்னமும் பிரசுரமாகாமலும், ஸ்கூல்களில் பாடங்களாக வைத்துப் போதிக்கப்படாமலும் இருந்தும், மதக்கல்வியை வேண்டுமென்றே கைவிட்டதாக காந்தியார் பகிரங்கமாக ஒப்புக்கொண்டு, அதற்கு சமாதானம் கூறவும் முன்வந்து விட்டதால், இனி அத்திட்டத்தைக் குறித்து முஸ்லிம்கள் தங்களுடைய ஆக்ஷேபனையைக் கூறுமல் இருக்க வேண்டியதில்லை. மத சுதந்திரம் அளிப்பதாகவும், முஸ்லிம்களின் கல்வி, கலை, ஆசாரம், பாஷை முதலியவைகளைக் காப்பதாகவும் காங்கிரஸ் காரர்கள் கூறிக்கொள்வதானது எவ்வளவு ஹம்பக்கான வாதமென்பது இதிலிருந்து விளங்க வில்லையா? கல்வி கற்கவேண்டிய வயதில், முஸ்லிம்களது மார்க்கக் கல்வியைக் கற்பிக்காமலும், அவர்களை இளமையிலேயே மார்க்க அனுஷ்டானத்தில் பழக்காமலும் விட்டுவிட்டால், அப்புறம் பெரியவர்களான பிறகு, தொழில் முறைகளைச் செய்ய வேண்டுமென்ற நோக்கம் வந்த பிறகு அவர்கள் மார்க்கக் கல்வி கற்பது குதிரைக் கொம்புதான். "ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது" என்பதற்கிணங்க, பள்ளி மாணவர்களாக இருக்கும்போது, மார்க்க அனுஷ்டானத்தில் பாலர்களை பழக்காவிடில் பாலியர்களான பின் அவர்கள் மார்க்கக் கிரியைகளை எங்கே அனுஷ்டிக்கப் போகின்றனர். ஒருபோதும் அனுஷ்டிக்கமாட்டார்கள். இதற்கு உதாரணம் கூறவேண்டிய

தில்லை. உதாரணம் கூறவேண்டுமானு லும் அதிக தூரம் போகவும் வேண்டிய தில்லை. சாதாரணமாக தாய் பாஷையை யும் மார்க்கக் கல்வியையும் கற்றிருக்கும் வாலிபர்களையும், ஆங்கிலக் கல்வியில் S. S. L. C. வரையிலும், அதற்குமேல் காலேஜிலும் கல்வி கற்ற முஸ்லிம் வாலி பர்களையும் நாம் சீர்தூக்கிப் பார்த்தால் முஸ்லிம்களது மார்க்க பக்தியும், மார்க்க அனுஷ்டானமும் எவ்விதம் அடிபட்டு வருகின்றன என்பது விளங்காமற் போகாது. ஆங்கிலங் கற்றவர்களில் அநேகர் நல்லவர்கள்தான். அவர்களிற் சிலர் தொழுகை நோன்பு முதலிய அனுஷ்டானங்களை விடுவதில்லை. சிலர் மார்க்க பக்தியில் மற்றவர்களைப் பார்க்கி னும் எத்தனையோ மடங்கு அதிகமாக இருக்கின்றனர். என்றாலும், மார்க்க பக்தி இல்லாதவர்களும், மார்க்க அனுஷ் டானமற்றவர்களும், நாஸ்தீகம் பேசு பவர்களும்தான் மெஜாரிட்டியாக, ஏன்? முக்கால்வாசிப் பேருக்கு அதிகமாக இருக்கின்றனர். இதுபோல, பிரைமரிப் படிப்புடன் நின்றுவிட்டவர்களை, ஆங்கி லம் கற்காமல் தாய் பாஷைக் கல்வியை மட்டும் கற்றவர்களைக் கவனித்தால், அவர்களிலும் மார்க்க பக்தியற்றவர்க ளும், நாஸ்தீகம் பேசுபவர்களும், மார்க்க அனுஷ்டானமற்றவர்களும் இல்லாம லில்லை. என்றாலும் மிகக் குறைவு? கால்வாசிக்கும் குறைவாகத்தான் அவர் களிருப்பார்கள். பிரிட்டிஷ் அரசாங் கத்தார் முஸ்லிம்களுக்கென தனிப் பள்ளிக்கூடங்களையும், வேதபாடங்களை யும் ஹைஸ்கூல்களையும், காலேஜ்களை யும் ஏற்படுத்திக்கொடுத்து, முஸ்லிம் உபாத்தியாயர்களையும், இன்ஸ்பெக்டர் களையும் பிரத்தியேகமாக வைத்திருக்கும் போதே நிலைமை இவ்வாறிருந்தால், இனிவரும் காந்தியார் கல்வித்திட்டத்தின் மூலமாக மதக் கல்வியை அடியுடன் கை விட்டு மார்க்கக் கல்வியை இளமையிற் கற்றுக்கொள்ள வசதி ஏற்படாமலும், மார்க்கானுஷ்டான பயிற்சியில்லாமலும் முஸ்லிம் இளைஞர்கள் வளர்ந்தால் பிற் காலத்தில் இஸ்லாம் இந்தியாவை விட் டுத் தானுக ஓடிவிட வேண்டிய நிலை மையே ஏற்பட்டுவிடும். இவ்விதம் மறை முகமாக, நயவஞ்சகமாக, முனைபிக் தன மாக இஸ்லாத்தை ஒழிப்பதற்கு ஹிந் துக்கள் திட்டம் போட்டு வேலை செய் வதைக் கண்டித்து முஸ்லிம்களைத் தட்டி எழுப்பி, அவர்களது மதம் கலை ஆசா ரம் ஆகியவைகளைக் காக்க முயல்வது முஸ்லிம் லீக் சபைகளல்லவா? அச் சபைகள் எப்பொழுதும் நமக்கு இருந்து வரவேண்டியது அவசியமல்லவா? முஸ்லிம் சிறுர்களுக்கு மார்க்கக் கல் வியைக் கற்றுக்கொடுப்பது பெற்றோர் களது மதக் கடமையாகும். பிரிட்டிஷ் அரசாங்கத்தார் மத சுதந்திரம் அளித் திருப்பதாகக் கூறி, இஸ்லாம் மதக் கட்டளைகளை மீறிநடக்கும் முஸ்லிம்களை இஸ்லாம் மதத்தில் கூறப்பட்ட சட்டப் படி கண்டிக்காமல் விட்டுவிட்டதால் இந் நாட்டிலுள்ள முஸ்லிம் இளைஞர்களது நிலை இவ்வளவு மோசமாகிவிட்டது. முஸ் லிம்கள் சுயராஜ்யம் வேண்டும், சுயேச்சை வேண்டும் என்று கோருவ தெல்லாம் முஸ்லிம்களது மதம், கலை, பாஷை, ஆசாரம் ஆகியவைகளுக்கு பிரிட்டிஷ் அரசாங்கத்தில் போதியளவு பாதுகாப்பில்லை என்பதற்காகத்தான். காந்தியார் திட்டமோ இருக்கிற அற்ப சொற்ப வசதிகளையும் அடியுடன் கெல்லி எரிந்து விடுவதாக இருக்கிறது. முஸ்லிம் களது மார்க்கத்திற்கு துரோகம் செய்ய ஹிந்துக்கள் தங்களது மெஜாரிட்டி பலத்தை ஆதரவாகக்கொண்டு, தங் களாலான சூழ்ச்சிகளை எல்லாம் செய்து வருகின்றனர். ஆகவே, சகோதர முஸ்லிம் கள் காந்தி-ஜின்ஞ சம்பாஷணையையோ, ஜின்ஞ-போஸ் கூடிப் பேசுவதையோ, ஜின்ஞ-ஜவ்ஹர் கடிதப் போக்கு வரத்துகளையோ கவனியாமல், காரி யத்திலேயேகண்ணுக இருந்து, முஸ்லிம் களில் நிர்மாண வேலையைச் செய்வார்க ளாக.

மனைவிகளின் அடிமைகள்

புருஷர்கள் தங்கள் மனைவியருக்குத் தங்களை அடிமைகளாக்கிக் கொள்ளலாகாது. தங்களது சுய அதிகாரத்துடன் வாழ்க்கையை நடத்தவேண்டும். ஆனால், மனைவியரைத் திருத்துவதற்கு எப்பொழுதும் முயன்றுகொண்டே இருக்கவேண்டும். சில மனைவியரிடத்தில் அநேக கெடுதல்களிருக்கின்றன. அவைகளால் சமயத்தில் புருஷர்களுக்கும் பிள்ளைகளுக்கும் பெரிய நஷ்டங்கள் உண்டாகிவிடும். ஆதலின், கணவனாக இருப்பவர்கள் இக்கெடுதல்களைத் திருத்திக்கொண்டே இருப்பது அவசியமாகும். உங்களது மனைவியர் நற்குண வதிகளாகவும், சுறுசுறுப்புள்ளவர்களாகவும், கஷ்டத்தைச் சகிப்பவர்களாகவும், உங்களுக்குக் கீழ்ப்படிபவர்களாகவும், உங்கள் மக்கள்பால் அளவற்ற அன்புள்ளவர்களாகவும் இருக்கலாம். இந்நற்குண நன்னடக்கைகளைப் பார்த்து ஒவ்வொருவரும் அவர்களைப் புகழலாம். என்றாலும், தங்களை மற்றவர்கள் புகழ்வதை அவர்கள் கேட்டு, அவர்களில் துணிவு உண்டாகி, தங்கள் மணாளர்களது காரியங்களில் அனாவசியமாகத் தலையிடக்கூடும். தங்கள் மணவாளர்கள் தங்கள்பால் பிரியமாக இருக்கிறார்கள்; தங்களை மதிக்கின்றனர் என்பதை உத்தேசித்து சில மூடத்தனமான காரியங்களைச் செய்து விடும்படி தங்கள் கணவன்மார்களை நிர்ப்பந்திக்கக்கூடும். புருஷனுக்குக் கீழ்ப்படிவது பெண்டாட்டியின் கடமை என்பதைக் கொஞ்சமும் கவனியாது பெண்டாட்டியின் கட்டளைகளை ஏன்? எதற்காக? என்று விசாரிக்காமல் அதற்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும் என்பதாக அவர்கள் எதிர்பார்க்கக் கூடும். இவ்விதமான நிலைமை ஏற்பட்டுவிட்டால், இவ்விதத் தோரணையில் மனைவியர் நடந்துகொண்டால், அந்நடத்தைக் கண்டிக்கத்தக்கது என்பதிற் சந்தேகமில்லை. ஸ்திரீகளுக்குச் சம்பந்தமில்லாத காரியத்தில், அவர்கள் தங்கள் புருஷர்கள் செய்யுங் காரியங்களில் தலையிட அவர்களுக்கு எவ்விதத்திலும் உரிமை இல்லை. ஒருமுறை யான் எனது நண்பருடன் பேசிக்கொண்டிருந்தபோது அவரை நோக்கி "நீங்கள் அந்தப் புத்தகத்தை அதிகம் தூற்றுகிறீர்கள், அதனை ஒருமுறை நீங்கள் படித்துப் பார்த்து, அப்புறம் அது கெட்டதா, நல்லதா என்ற அபிப்பிராயத்திற்கு வாருங்கள்; இதுதான் நியாயமான முறை" என்று கூறினேன். அப்பொழுது அவரண்டையிலிருந்த அவர் மனைவி என்னிடம் "அவர் அப்புத்தகத்தை ஒருபோதும் படிக்க மாட்டார்" என்றனள். உடனே, நான் அவளை நோக்கி "ஒரு புத்தகத்தைப் படித்துப் பார்க்காமல் அது சம்பந்தமாக நல்லதாகிய அல்லது கெட்டதாகிய அபிப்பிராயங்கொள்ள அவருக்கு எவ்வித உரிமையுமில்லை" என்று பதிற் கூறினேன். அதற்கவள் "ஆம், உண்மைதான்; நீங்கள் கூறுவது சரியே. ஆனால், அவர் எனது அனுமதி இல்லாமல் எந்தப் புத்தகத்தையும் படிக்க முடியாது" என்றனள். எனது நண்பரின் குடும்ப வாழ்க்கையை நீங்கள் சிந்தித்துப் பாருங்கள்.

பெண்டாட்டி சொற்படி நடக்கும் ஆடவர்கள் சிருஷ்டிகளிலெல்லாம் கேடு கெட்டவர்கள். இவ்விதமான மனிதர்கள்மீது எவருக்கேனும் நம்பிக்கை வருமா? இத்தகைய பேர்வழிகளது வாக்குறுதி, வாக்குத்தத்தம், சொல், செயல் எதற்கும் உறுதி இருக்கமாட்டாது. அவரது கடிவாளம் எப்பொழுதும் அவரது மனைவியரின் கைகளிலேயே இருக்கும். அவள் இஷ்டப்பட்டபடி அவர்களைத் திருப்பி விட முடியும். சில சமயங்களில் அந்த ஸ்திரீகள் பழி வாங்க வேண்டும் என்ற நோக்கத்தால் தங்கள் கணவன்மார்களைக்கொண்டு மிகவும் அக்கிரமமான, அநியாயமான, மடத்தனமான காரியங்களையும் செய்வித்து விடுகின்றனர். இத்தகைய புருஷர்கள் சீமான்களா யிருந்தாலென்ன? படித்தவர்களாயிருந்தாலென்ன? அவர்களுக்கு மரியாதையோ கௌரவமோ அவர்களது அயலகத்தார், உற்றார், உறவினர், வேலைக்காரர், முதலிய எவரிடத்திலும் இருக்கமாட்டாது. இத்தகைய மனிதர்கள் எந்த வஸ்துவையும் என்னுடையது என்று சொல்லிக்கொள்ள முடியாது. ஏனெனில், எல்லாக் காரியத்திலும் இவர்கள் தங்கள்

மனைவியரின் தயவை நாடவேண்டியவர்கள். இத்தகையமனிதர்கள் தூக்குமரத்திலிடப்பட்டோ, அல்லது சமுத்திரத்தில் ஆழ்த்தப்பட்டோ அழிக்கப்படத் தகுந்தவர்களாவார்கள்.

ஆயிரக்கணக்கான வீடுகள், குடும்பங்கள் இத்தகைய முறையற்ற கணவர்களால் நாசமாகப்போனது நமக்குத் தெரியும். இவர்கள் தங்களை மிகக்கீழான புருஷர்களாக மதித்துக் கொண்டிருக்கிறார்கள். தங்களது மனைவியரின் நியாயமான, அநியாயமான எல்லாக் கட்டளைகளையும் ஏன்? எதற்காக? என்றில்லாமல் மூச்சுப்பேச்சின்றி நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள். எந்தநேரமும் தங்கள் மனைவியருக்குப் பயந்துகொண்டிருக்கின்றனர். ஆதலின், உங்கள் மனைவியர்களுக்குச் சம்பந்தமில்லாத உங்கள் காரியங்களில் அவர்கள் தலையிடுவார்களாயின், உடனே, நீங்கள் அவர்களைத் தடுத்துவிட வேண்டும்; இக்காரியங்களில் நீங்கள் தலையிட வேண்டியதில்லை என்று கண்டிப்பாகக்கூறிவிட வேண்டும். இவ்விதமான கண்டிப்பான பதங்களை உபயோகிக்க உங்களுக்கு ஆரம்பத்தில் ஒருவித சிரமம் தோன்றலாம், அவ்வாறு கூற உங்களுக்கு வருத்தமாக இருக்கலாம். இருந்த போதினும் ஒரு சொற்ப சிரமத்தை நீங்கள் பாராட்டாமலிருப்பது, உங்கள் வாழ்நாள் முழுவதிலும் உங்களுக்குக் கிடைக்கும் சுகத்திற்கு முன் ஒரு பொருட்டல்ல. ஆரம்பத்திலேயே, முளையிலேயே இதனை நீங்கள் கிள்ளிவிடவில்லையானால், உங்கள் ஆயுள் பரியந்தம் உங்கள் மனைவியரிடத்தில் நீங்கள் அவதிப்பட வேண்டியது தான்.

தங்களின் பிரியமுள்ள, அன்பிற்குரிய மனைவியரின் மனத்தைப் புண்படுத்த, வருத்தப்படுத்த, அவர்களது சொற்களை மறுக்க விரும்பாத, தைரியமற்ற அநேக கனவான்களை நாம் பார்த்திருக்கிறோம். தங்களது அதைரியமான, முட்டாட்டனமான இக்கோழைத் தனத்தின் பயனை கணவன் மனைவி ஆகிய இருவரும் தங்களது வாழ்நாள் முழுவதும் அனுபவிக்க நேர்ந்து விடுகிறது; இருவரது மணவாழ்க்கையும் ருசியற்றதாகி விடுகிறது; கஷ்டமானதாகி விடுகிறது. கொஞ்சம் கவனித்துப் பாருங்கள். உய்த்துணருங்கள். உங்களது குழந்தை நோயாளியாகிவிட்டால், தாயானவள் அவர்களை மடியில் வைத்து, தனது கையாலேயே கசப்பான மருந்தைக் கொடுத்து விடுகிறாள். குழந்தை அழுவதையோ ஓலமிடுவதையோ அவள் லக்ஷியம் செய்வதே இல்லை. ஆனால், குழந்தைகளது ஒரு சொட்டு கண்ணீர் கீழே விழுவதைத் தாய்க்காரி சகிக்கமாட்டாள். அப்படி இருந்தும் அவளே தனது கையால் கதற, கதற, கசப்பான ஔஷதத்தைக் கொடுத்து விடுகிறாள். இது போல நீங்களும், உங்கள் மனைவியர்கள் உங்கள் காரியங்களில் தலையிட்டால் குறித்த காலத்தில் அவர்களைத் தடுத்துவிடுவது அவசியமாகும். உங்களது தொழிலில, அலுவலில் அவர்களுக்குச் சம்பந்தமில்லை. உங்கள் உடலில்தான் அவர்களுக்குச் சம்தமிருக்கிறது.

"உங்களது மனைவியரின் மீது நீங்கள் எவ்விதத்திலும் அக்கிரமஞ் செய்ய வேண்டும்; அவர்களது விருப்பங்கள், அவர்களது எண்ணங்கள் ஆகியவற்றை நீங்கள் அலக்ஷியம் செய்யவேண்டும்" என்பது நமது நோக்கமல்ல. அவர்களை நீங்கள் நம்பாதீர்கள் என்று நாம் சொல்லவில்லை. தங்கள் கணவன்மார்களது காரியங்களில் அவர்கள் தலையிடக்கூடாது என்பதுதான் நமது நோக்கம். தனது கனவனுக்குக் கீழ்ப்படிவது ஸ்திரீயின் கடமையாக இருக்கிறது. கணவன் தனது குடும்பத்திற்குத் தலைவன். ஆதலின், அவனது கட்டளைதான் குடும்பத்தில் நடைபெற வேண்டும். அவ்வாறில்லாவிடில் இரட்டை ஆட்சியினால் குடும்ப நாசம் வந்து சேரும்.

மதம், சட்டம், ஆசாரம் ஆகியவைகள் ஆடவனை அவனது குடும்பத் தலைவனாக, எஜமானனாக அதிகாரியாக நியமித்திருக்கின்றன. ஆகவே, அவன் தனது அதிகாரத்தை, உரிமைகளை கைகழுவி விட்டு விட்டால் மிகக்கேவலமானவனாக, பழிக்கப்பட்டவனாக ஆகிவிடுவான். அதன் பயனை அவன் அவசியம் அனுபவிக்க நேரிடும். அவனது பலஹீனத்தாலும் முட்டாள் தனத்தாலும் குடும்ப நாசமும் அழிவும் அவசியம் வரும்.

கணவன் மனைவி ஆகிய இருவருக்கிடையில் அபிப்பிராய பேதமேற்பட்டால், இவ்விருவரும் எவ்விதமாக நடந்து கொள்ளவேண்டும். மனைவி தனது கணவனிடம் ஒரு காரியத்தைச் சாதித்துக்கொள்ள விரும்புவாளாயின், கணவனது அபிப்பிராயம் தனது நோக்கத்திற்கு மாறாக இருப்பதுடன் நியாயமானதாகவும் சரியானதாகவும் இருக்கிறதென்பதை உணருவாளாயின், இதனை மாற்றிவிடமுடியாது என்று அவள் கருதுவாளாயின், அவள் தனக்கு உதவி

யாக இதர சக்திகளையும் சேகரிக்கிருள். தனது கணவனின் பெற்ருேர்கள், உற்ருர் உறவினர், பந்துமித்திரர் ஆகியவர்களிடம் "இந்தக் காரியத்தை இப்படிச் செய்யவேண்டும் என்று நான் விரும்புகிறேன்; எனது பர்த்தா இவ்விதமாக நினைக்கிருர்; எனது கருத்தை நீங்கள் ஆதரிப்பீர்களென்று நான் எண்ணுகிறேன்.'' என்று கூறுகிருள். இக்காலத்தில் ஸ்திரீகள் ஒன்றைக்கூறினுல் அதனை ஆம், மெய்தான் என்று கூறி ஆமோதிப்பது சகஜமாகி விட்டது. ஆதலின், அந்த ஜனங்களும் பழக்கத்தை அனுசரித்து அல்லது தன்மையைக் கருதி அந்த ஸ்திரீயின் கருத்தை ஆதரித்துப் பேசி விடுகிருர்கள். இவ்விதமாக அந்த ஸ்திரீ தனது கணவனின் பந்துமித்திரர்களின் ஆதரவைப்பெற்று தனது வீட்டிற்குத் திரும்ப வருகிருள். தனது கருத்தைப் பிடிவாதமாகவும், உறுதியாகவும் வற்புறுத்தத் தொடங்குகிருள். அத்துடன் தனது பர்த்தாவிடம் "பாருங்கள், உங்களது உற்ருர் உறவினராகிய இன்னின்னுர் எனது அபிப்பிராயத்தை அங்கீகரிக்கின்றனர்; உண்மையில் எனது அபிப்பிராயம்தான் சரியானது; ஆகவே, எனது சொற்கேளுங்கள்.'' என்று கூறுகிருள்.

இதற்குப்பிறகு கணவன் தனது மனைவியின் அபிப்பிராயத்தைத் தழுவி நடக்கவில்லையாயின், அப்புறம் சண்டை சச்சரவுதான். ஒரு குடும்பத்தில் தம்பதிகளிருவருக்குமிடையில் தகராறு வருவது அக்குடும்பத்தின் நாசத்திற்குக் காரணமாகி விடுகிறது. பெண் சாதியின் பேச்சை அவசியம் கேட்கத்தான் வேண்டும். ஆனுல், அவளது அபிப்பிராயம் தவருனதாக இருந்தால், தக்க காரணங்களைக்கூறி அவளுக்கு விளங்க வைத்துவிட வேண்டும். அதிலும் அவள் கேட்காவிடில், கணவன் கட்டளைப்படி தான் நடக்கவேண்டும் என்று நிர்ப்பந்தித்துவிட வேண்டும். அவ்வாறு செய்யாவிடில், கணவனுக்கு எவ்வித மரியாதையும், அச்சமும் இருக்கமாட்டாது; ஸ்திரீதான் வீட்டிற்குச் சர்வாதிகாரியாகி விடுகிருள். ஆனுல், வீட்டிலுள்ள சாமான்ய காரியங்கள், உதாரணமாக சமையல் செய்யல், உணவுகளைத் தயாரித்தல், வீட்டுக் கோப்புகளை ஒழுங்கு செய்யல், சிறு வேலைக்காரர்களை மேல்பார்வை செய்யல், அவர்களிடம் வேலை வாங்கல் முதலிய காரியங்களை மனைவிதான் பார்த்துக்கொள்ள வேண்டும். அதுதான் முறையுமாகும்.

இவ்விதமான காரியங்களில் கணவன் தலையிடுவதற்கு அத்துணை அவசியமுமில்லை. ஆனுல், நாம் செய்யவேண்டிய தொழிலென்ன? எந்த வேலையைநமது ஜீவியத்திற்குரியதொழுகக் கொள்ளலாம்? எந்த ஊரில் நாம் குடியிருக்கவேண்டும்? நமது வாழ்க்கை முறை எவ்வாறிருக்க வேண்டும்? மாதச்செலவு எந்த அளவிற்கிருக்க வேண்டும்? குழந்தைகளை எந்த ஸ்கூலில் விடவேண்டும். இவ்விதமான காரியங்களெல்லாம் கணவனைச் சார்ந்தவை. இவைகள் பெரும்பாலும் கணவனுக்குத் தான் சம்பந்தப்பட்டவை. ஆதலின், இவைகளில் கணவனுக்குத் தான் பூரண அதிகாரமிருக்கிறது. அவனது அபிப்பிராயப்படி தான் இவைகள் நடைபெற வேண்டும். இவ்விஷயங்களில் மனைவி தலை யிடுவாளாயின், அப்புறம் தம்பதிகளுக்கிடையில் ஒருபோதும் அன்பு இருக்க மாட்டாது. அக்குடும்பத்தில் சமாதானம், அமைதி என்பது என்றென் றைக்குமாக நீங்கிவிடும். எவ்வாருயினும், இத்தியாதி காரியங்களில் தலையிட மனைவிக்குச் சந்தர்ப்பம் அளிக்கவேகூடாது. இவைகளை அவள் உணர்ந்துகொள்ளவும் முடியாது. அவ்வாறு தலையிட அனுமதிப்பதற்கு அழிவு என்பது தான் அர்த்தம்.

குறிப்பு:—இவ்வியாசம் ஒரு ஆங்கில நூலாசிரியரால் எழுதப்பட்டது. மேனுட்டில் ஸ்திரீ சுதந்திரம் தாராளமாக வழங்கப்பட்டுள்ள நிலைமையில் அங்குள்ள தம்பதிகள் நிலைமையை இவ்வியாசகர்த்தா நன்கு விளக்கியுள்ளார். இது போன்ற நிலைமை இந்நாட்டிலும் எங்கும் வியாபித்திருக்கிறது என்று சொல்ல முடியாவிட்டாலும், இந் நிலைமை நமது நாட்டிலும் பரவாமலில்லை. நம்மிலுள்ள பலரது நிலைமையும் இதனை ஒத்தே இருக்கின்றன. ஆகவே, தாம் பத்திய வாழ்க்கை நடத்துவோர் இவ் வியாசக் கர்த்தா கூறியுள்ள அறிவுரைகளை, ஆலோசனைகளை நன்கு கவனித்து நடந்து கொள்வார்களாக.

(ப. ர்.)

உலக விநோதம்

ஒருபோதும் விழிக்காத ஸ்திரீ.

இருபத்தாறு வயதையுடைய ஒரு வனிதை வெஸ்ட்பீல்ட் என்றஇடத்தில் நித்திரை வியாதியால் பீடிக்கப்பட்டிருக்கிறாள். மேனாட்டு வயித்தியர்கள் சென்ற 10 ஆண்டுகளாக அவளுக்கு சிகிச்சை செய்தும், அவளை நித்திரையிலிருந்து எழுந்திருக்கச் செய்ய முடியவில்லை. ஆகவே, அவளுக்கு வயித்தியஞ் செய்தவர்களெல்லாம் "இந்த ஸ்திரீ துயில் எழுவாள் என்ற நம்பிக்கை இல்லை" என்ற முடிவுக்கு வந்திருக்கிறார்கள்.

இவளது பெயர் ஹெலன். இவள் 16 வயதுள்ள பாலியையாக இருந்தபோது ஒருநாள் ஒருமோட்டார் விபத்தில் சிக்குண்டாள். அப்பொழுதிருந்து அவள் பூரணமாக ஸ்மரணையற்றிருக்கிறாள். சில சமயங்களில் பாதி ஸ்மரணையற்றவளாக இருக்கிறாள். டாக்டர்கள் பல விதமான சிகிச்சை முறைகளைக் கையாண்டும் வெற்றியடையாததால், இறுதியாக சங்கீதக் கருவிகள் மூலமாக அவளை எழுந்திருக்கச் செய்ய வேண்டும் என்றும் முயன்றனர். அவளுக்குச் சமீபத்தில் ஒரு வீணை வைக்கப்பட்டிருக்கிறது. அதன் மிருதுவான, இன்பகரமான தொனியினால் இனியகீதங்கள்பாடப்பட்டன. என்றாலும், அவளுக்கு இதனாலொன்றும் பயனேற்படவில்லை.

பத்து வருஷங்களாக முயற்சி செய்தபின் இப்பொழுது டாக்டர்கள் "இவளது நிலைமையில் எவ்விதமான வித்தியாசமும் இதுவரை ஏற்படவில்லை, இனி எதிர்காலத்திலும் ஏதேனும் வித்தியாசப்படும் என்ற நம்பிக்கைக்கும் இடமில்லை" என்று ஏகமனதாக அபிப்பிராயங் கூறுகின்றனர். "மோட்டார் பஸ்ஸில் மோதியதின் காரணமாக அவளது மூளையில் உபாயமாக காயமேற்பட்டு விட்டது; அதற்கப்புறம் அது நன்றாகப் புண்ணாகி விட்டது." என்று கூறுகின்றனர்.

இதுவரை, அச்சிறுமியை அவளது விதவைத் தாய் தனது இல்லத்தில் வைத்துப் பாதுகாத்து வந்தாள். ஆனால், அவ்வேலையால் அதற்கேற்படும் செலவுகளைச் சகிக்கமுடியவில்லை. ஆதலால் ஸ்மரணையற்ற அந்நோயாளியை ஒரு பொது ஸ்தாபனத்திற்கு அனுப்பப் பட்டிருக்கிறது. சிக்காகோவிலுள்ள பீட்டரேஷியா மீகாயர் என்பவளுக்கும் இதேமாதிரியான நித்திரை வியாதி ஏற்பட்டிருக்கிறது. அவளைப் பார்க்கினும் இவள் (ஹெலன்) இரண்டு மடங்கு முந்தி விட்டாள். என்றாலும், பீட்டரேஷியா சமீப காலத்தில் தான் இறந்து போனாள்.

என்றாலும், அமெரிக்காவிலுள்ள 15 வயதுள்ள மற்றொரு மாணவிக்கும் இதே விதமான நோய் வந்தது. அவளது பெயர் ஜோன் ஜான்ஸன் என்பது. ஆனால், அவள் தனது வகுப்பில் இருந்து கொண்டிருக்கும் போது சில தினங்களுக்கு முன் ஒருநாள் திடீரெனப் பலமுறை சப்தமிட்டு தும்மினாள். உடனே, ஸ்மரணையற்று விழுந்தாள், அந்தக்ஷணம் முதல் அவளது நாடியில் ஜீவியத்திற்குரிய அடையாளம் எதுவும் காணப்படவில்லை. டாக்டர்கள் இவளைப் பரிசோதித்து சிக்காக்கோவிலிருந்த பீட்டரேஷியா மீகாயர் என்பவளுக்கு ஏற்பட்ட அதே வியாதி இவளுக்கும் இருப்பதாகக் கூறி இருக்கின்றனர்.

அந்தகர்களின் சொர்க்கம்

யுகோஸ்லாவியாவில் பதர்நேக் என்பதாக ஒரு கிராமம் இருக்கிறது. இக் கிராமத்தை ஒன்பது வருஷங்களுக்கு முன் அலக்ஜாண்டர் மன்னர் நிர்மாணித்து, சென்ற மகாயுத்தத்தில் அடிபட்டு கண் இழந்த கபோதிச் சிப்பாய்களை இங்கு குடியேற்றினர். அரசாங்கத்தார் இச்சிப்பாய்களுக்காக கிராமப் பகுதியிலுள்ள வளம் பொருந்திய ஒரு இடத்தைத் தெரிந்தெடுத்து, அங்கு கிராம முறைப்படி, சுகாதாரமும் வசதியுமுள்ள வீடுகளைக் கட்டிக் கொடுத்திருப்பதுடன், விசாலமான, செழிப்பான பூமியையும் அங்கு வசிப்பவர்களுக்கென ஒதுக்கி வைத்துமிருக்கின்றனர். விவசாயத்திற்குரிய கருவிகள், கால்

நடைகள் முதலிய சகலமும் அங்கு தயாராக இருக்கின்றன.

இவ்வந்தரர்களுக்கு இன்னும் அதிகமான வசதியும் சௌகரியமும் இருக்க வேண்டும் என்பதற்காக, அவர்களில் விவாகம் செய்து கொள்ளத் தகுதியானவர்களுக்கு விவாகம் செய்து வைக்கவும், அலக்ஜாண்டர் மன்னர் ஏற்பாடு செய்தார். ஆகவே, விவாகத்திற்கு மணமகள் தேவை எனப் பத்திரிகைகளில் விளம்பரம் செய்யப்பட்டது. இவ்விளம்பரங்கள் பத்திரிகைகளில் வெளியான சில காலத்திற்குள் நூற்றுக்கணக்கான அழகிய யுவதிகள் விவாகம் செய்துகொள்ள முன்வந்தனர். அக்கிராமத்திற்குத் தலைவனாக நியமிக்கப்பட்டிருப்பவர் இப்பெண்களை நேரில் பார்த்து, தெரிந்தெடுத்து, இவ்வந்தக சிப்பாய்களுக்கு விவாகம் செய்வித்தார்.

இக்கிராமத்திலுள்ள ஸ்திரீ புருஷர் ஆகிய இருசாராரும் நிலத்தை உழுதல், மிருகங்கள் பக்ஷிகளை வளர்த்தல் ஆகிய வேலைகளை மனப்பூர்வமாக, சந்தோஷமாகச் செய்கின்றனர். இவர்களுக்கென அரசாங்கம் பிரத்தியேகமாக ஒரு மார்க்கட்டையும் ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது. அதில் இக்கிராமத்தில் விளையும் தானியங்களும் இதர சாமான்களும் விற்பனையாகின்றன. இக்கபோதிகள் மிகச் சந்தோஷமாக வாழ்ந்து வருகின்றனர். இங்கு சண்டை சச்சரவு, பிணக்கு என்பது எதுவுமில்லை. இன்றுவரை எவரும் தனது மனைவியை விவாக பந்தத்திலிருந்து பிரித்துவிடவேண்டும் என்று விரும்பவில்லை. எந்த மனைவியும் தனது புருஷனைவிட்டுப் பிரிந்து போகவேண்டும் என்று நினைக்கவுமில்லை. தனது புருஷன்மீது குற்றங் குறைகளைக் கூறவுமில்லை.

இக்கிராமம் நிர்மாணிக்கப்பட்டு ஒன்பது வருஷங்கள் பூர்த்தியாகிவிட்டன. இங்குள்ளவர்கள் நூற்றுக்கதிகமான குழந்தைகளை பெற்றுவிட்டனர். இக்குழந்தைகளும் தங்கள் பெற்றோர்களுடன் மிகவும் அமைதியாகவும், கவலை இல்லாமலும் வசித்து வருகின்றனர்.

நூதனமான தீவு

பியாஜீமா என்பது ஜப்பான் தீவுகளில் ஒன்று. இவ்வழகிய சிறு தீவில் விரல்விட்டெண்ணி விடக்கூடிய சில வீடுகள் தானிருக்கின்றன. ஆனால், இவைகள் பார்ப்பதற்கு அழகாயும் ரம்மியமாயுமிருக்கும்படி கட்டப்பட்டிருக்கின்றன. இவ்வீடுகளின் நாற்புறங்களிலும் செழிப்பான பசுந்தோட்டங்கள் நிறைந்துள்ளன.

இத்தீவிலுள்ள ஜனங்கள் நூதனமான, நிகரற்ற ஒரு சட்டத்தை அனுசரித்தொழுகி வருகின்றனர். அங்குள்ள எவரும் அத்தீவில் வசிக்கும் எப்பிராணியையும் பக்ஷியையும் அறுக்கக்கூடாது; எந்த மரத்தையும் செடியையும் வெட்டவோ, பிடுங்கவோ கூடாது. இதிலும் ஆச்சரியமென்னவென்றால், இத்தீவிற்குள் எவரும் பிரசவிக்கவோ, மரிக்கவோ கூடாது. கர்ப்ப ஸ்திரீகளுக்கு மாதம் நிறைந்து, பிரசவத்திற்கான சமயம் நெருங்கிவிட்டால், அந்த ஸ்திரீகள் இத்தீவை விட்டு வெளியிற் சென்று தூரத்திலுள்ள வேறு எங்கேனும் பிரசவக் காரியங்களை முடித்துக்கொள்ள வேண்டும். இது போலவே எவரேனும் நோய் வாய்ப்பட்டு, குணமடைவதற்கு வழியில்லை என்றேற்பட்டு மரணத்திற்கான அறிகுறிகளும் தென்பட்டால், அவரை இத்தீவைவிட்டு வெகு தூரத்திற்கு அப்புறப்படுத்திவிடவேண்டும். ஆகவே, இத்தீவு எவ்விதமான துக்கத்திற்கும் விசனத்திற்கும் பயப்படாமல் இருக்கிறது. துக்கம் விசனம் என்பன இத்தீவிற்குத் தெரியாது என்று கூறுவது மிகையாகாது. ஆகவே, நல்ல ஸ்திதியிலும், சந்தோஷத்திலும் இருப்பவர்களுக்குத் தான் இது ஏற்ற இடம். இங்கு ஒருவர் கஷ்டப்படுகிறார், துயரடைகிறார் என்ற செய்தியே கிடைப்பதில்லை. அவ்வாறான மனிதர் இங்கு காணப்படுவதுமில்லை. இவ்வித நிலைமை மனிதர்களுக்கு மட்டுமில்லை, இங்குள்ள ஆகாயத்தில் பறவைகள் சுயேச்சையாக, எவ்வித பயமின்றிப் பறந்து திரிகின்றன. மான் கவலையின்றி நடமாடுகிறது. சுருங்கக் கூறுமிடத்து, எல்லா மிருகங்களும் பக்ஷிகளும் க்ஷேமமாக சவுக்கியமாக வாழ்கின்றன. இந்தத் தீவை ஒரு சிறிய சொர்க்கம் என்று கூறுவது பொருந்தும் என அம்மக்களால் கூறப்படுகிறது.

தமூஜன் ஜங்கீஸ்கான் சரிதை வரலாறு

இவ்வுலகில் மூவர் மிகவும் பராக்கிரமசாலிகளாக இருந்திருக்கின்றனர் என்பது உலக சரித்திரத்திலிருந்து தெரிய வருகிறது. முதலாமவர் மகா அலக்ஜாண்டர், இரண்டாமவர் ஜங்கீஸ்கான், மூன்றாமவர் நெப்போலியன். இம் மூவரும் முன் வைத்த காலை பின் வைக்காதவர்கள்; எதுவரினும் தங்களது நோக்கம் சித்தியடைய வேண்டும் என்று உயிருடன் விளையாடுபவர்கள். இவர்களது அருஞ்செய்கைகள் மனித ஜீவியத்திலேயே அநேக மாறுதல்களைச் செய்து விட்டன; நாகரீகத்தின் போக்கு வெகு விரைவில் முன்னேறிற்று; உலக முன்னேற்றம் உச்ச ஸ்தானத்தில் வந்தது. ஜங்கீஸ்கான் காலத்தில் ஏற்பட்ட பெரும் மாறுதல்களினால் ஐரோப்பியர்கள் நன்மையடைந்து விட்டனர். ஆனால் ஆசியா வாசிகள் அதன் நன்மைகளை இழந்து விட்டது பெரும் துர்அதிர்ஷ்டமாகும். ஆசியா அவைகளைப்பயன்படுத்திக்கொண்டிருந்தால், இன்று ஐரோப்பாவிற்கு ஜீவிய ஊற்றாக இருக்கிற தற்போதைய மேனாட்டு நாகரீகம் இன்று நமது வீடுகளில் இருந்திருக்கும். இப்பொழுதுமேனாட்டுநாகரீகத்தை ஆசியா கொஞ்சங் கொஞ்சமாகக் கைப்பற்றிக் கொண்டிருக்கிறது. விசாலமான இந்தக்கண்டம் உலக நாகரீகத்தின் அந்தஸ்துகளைத் தன் கைவசப் படுத்திக் கொண்டிருக்கிறது. ஆகவே, ஜங்கீஸ்கானின்ஜீவியத்தையும், ஜங்கீஸின் காலத்தையும் பற்றி நீங்கள் மேலெழுந்தவாரியாக ஒரு பார்வை செய்வது ருசிகரமாக இருக்கும் என்று நம்புகிறோம்

ஜங்கீஸ்கான் மிகப் பயங்கரமான மனிதர். இவருக்குச் சரித்திரத்தில் நிகரானவர் எவரும் இல்லை. ஒரு மனிதர்தனது ஐம்பதுவயதுவரை இருக்கிற இடமே தெரியாமலிருந்து அப்புறம் கிளப்புகிறார். இவ்விதமாக முன்னேற்றமடைந்த மனிதர் சரித்திரத்திலேயே கிடையாது. இவர் தாத்தாரிய வம்சத்திலுள்ள ஒரு தற்குறி, படிக்காத மனிதர். இனி வருகிற 20வருஷகாலத்திற்குள், பூகோளத்தையே அவர் ஜெயித்துவிடுவார் என்பதை மனத்திற்கூட, கனவிற்கூட நினைத்திருக்கமாட்டார். அதுவும் அவரது ஜீவியத்திற் சிறந்த பாகமாகிய முற்பகுதியில் இந்த நினைப்புக்கூட தோன்றி இராத நிலைமையில். உண்மையில் இவ்வகிலத்தில் மிகப்பிரம்மாண்டமான ஒரு பகுதியை அவர் ஜெயித்து விட்டார். அதுவும் தனது குதிரைவீரர்களின் உதவியினால் மூன்று பெரிய வல்லரசுகளை, சக்கரவர்த்திகளை அதாவது சீனதேசத்திலுள்ள கிழக்கு சின் சக்கரவர்த்தியையும், மேற்கு ஸூங் சக்கரவர்த்தியையும், குராசானிலிருந்த பலமான அரசாங்கமாகிய கார்ஜம் சக்கரவர்த்திகளையும் தலைகீழாகப் புரட்டி விட்டார்.

பிறப்பிடம்

மங்கோலியாவில் பாயிக்கல் என்று ஒரு ஏரி இருக்கிறது.இது ஒரு அழகிய ஏரி. இவ்வேரி மனித உற்பத்திக்கு முதலாவது வீடு என்று சொல்லப்படுகிறது. இதிலிருந்து ஒரு நதி உற்பத்தியாகிறது. அதற்கு "ஒனான்" நதி என்று பெயர். நமது ஜங்கீஸ் இதே நதிக்கரைக்குப் பக்கத்தில்தான் பிறந்தார். இப்பிரதேசம் சரித்திர விசேஷமுள்ளது. கி.பி. முதலாவது நூற்றாண்டில் இங்கிருந்து "ஆம்லான்" (ஜெர்மனியர்கள்) என்ற ஜாதியினர் கிளம்பி நான்காவது நூற்றாண்டிற்குள் ஐரோப்பாவில் பாவி விட்டனர். ஆறாவது நூற்றாண்டில் துருக்கியர் கிளம்பி ஆசியாவைப் மூடிக்கொண்டனர். பன்னிரண்டாவது நூற்றாண்டில் மொகல் வம்சத்தினர் கிளம்பி உலகத்தையே புரட்டி விட்டனர். இக்காலத்தைத்தான் ஜங்கீஸ் காலம் என்று கூறுகின்றனர். இவ்வம்சத்தின் மூல புருஷர்தான் ஜங்கீஸ்கான்.

இலக்ஷணங்களும் குணங்களும்

மௌலானா மின்ஹாஜுத்தீன் அபூஉமர் உதுமானீ தமது "தபகாத் நாஸிரீ" என்ற புத்தகத்தில் ஜங்கீஸ்கானின் அங்க அடையாளங்களையும், லக்ஷணங்களையும், தன்மைகளையும் பற்றி விவரித்துக் கூறியுள்ளார். அது வருமாறு;—

"அவர் குராஸான் வந்தபோது அவருக்கு வயது 65. உயரமுள்ளவர், உறுதியான உடலுள்ளவர். முகத்தில் மயிர் குறைவாயிருந்தது. ஆனால், அவைகள் வெளுத்திருந்தன. நறைத்திருந்தன. கண்கள் நீலநிறமுள்ளவை. நீலக்கண்ணன். உடல் மிகவும் ஒல்லியாக இருந்தது. அவயவங்கள் சரியான முறையிலிருந்தன. ஆவேச உணர்ச்சியுள்ளவர். நல்ல அறிவிருந்தது. இயற்கையாகவே நல்ல தகுதியுள்ளவர். கெட்டிக்காரர். தனது நோக்கத்தில் உறுதியுள்ளவர். நீதி நியாயம் வழங்கும் தன்மையர். ஜனங்கள் அவரைப் பார்த்தாலே பயங்கொள்வர். வஞ்சநெஞ்சமுள்ளவர்; நியாயக்காரர்; பழிவாங்கும் உணர்ச்சி நிறைந்தவர்; யுத்தகாலத்தில் இரக்கமற்று ரத்தவெறியராக இருப்பார். பகைவனை வீழ்த்துதல், தந்திரம், ஏமாற்றுதல், வைத்தல் ஆகிய விஷயத்தில் அக்காலத்தில் நிகரற்றவராக இருந்தார். அவரது சில உற்ற நண்பர்கள், துணைவர்கள் ஷைத்தானைப்பார்க்கினும் அதிக தந்திரவாதிகளாக இருந்தனர் என்று கூறலாம்."

வம்சமும் பிறப்பும்

மொகலாய சமூகத்தில் கபீலாக்கள் (கோத்திரங்கள்) தந்தையின் பெயராலேயே பிரிந்து பெயர் பெற்று விளங்கிவந்தன. இவர்கள் கூடாரங்களிலேயே வசித்துவந்தனர். ஜங்கீஸ்கானின் தந்தையின் பெயர் யஸூகாயி பகாதா என்பது. பஹாதர் என்ற பதம் இதே "பகாதா" என்பதிலிருந்துதான் பிறந்தது. இவர் தனது கபீலாவிற்குத் தலைவராக இருந்தார். அக்காலத்தில் அவரது கபீலா அவருடையவும் அவரது இரு சகோதரர்களுடையவும் குடும்பமாகவே இருந்தது. இம் மூன்று குடும்பங்களுக்கும் அவர் அதிகாரம் செய்து கொண்டிருந்தார். இவர் வாலிபமாக இருந்த சமயத்தில் ஒருநாள் ஒனன் நதிக்கரையில் வேட்டைக்குச் சென்றிருந்தார். திடீரென அவரது பார்வை மர்கத் கோத்திரத்தைச் சேர்ந்த ஒரு ஆடவர்மீது விழுந்தது. அவர் அப்பொழுதுதான் மணம் புரிந்த தனது மணப் பெண்ணை அழைத்துக்கொண்டு தனதில்லம் சென்று கொண்டிருந்தார். மணப்பெண் அல்ஹூனூத் என்ற கோத்திரத்தைச் சேர்ந்தவள். இக்கோத்திரத்திற்கும் அவர்களுக்கும் கொள்வினை கொடுப்பினை செய்யும் சம்பந்தமிருந்தது. அதாவது இரு கோத்திரமும் சம்பந்திகள். மணப் பெண்ணும் மணமகனும் இதே நதிக்கரையில தங்கி இருந்து கொண்டிருந்தனர். மணப்பெண் கூடாரத்திற்கு வெளியில் நின்றுகொண்டிருந்தாள். அவளது கணவன் சில அடி தூரத்திற்கு அப்பால் குதிரையின்மீது சவாராகி இருந்தார்.

யஸூகாய் அந்த ஸ்திரீயின் ரூபலாவண்யத்தைப் பார்த்து மயங்கினர். பயித்தியக்காரனைப்போல் தனது கூடாரத்திற்கு வந்தார். தனது சகோதரர்களிடத்தில் தான் கண்ட வனிதையைப்பற்றி வர்ணித்து அவளை அடையவேண்டுமென்றார். உடனே, அம்மூன்று சகோதரர்களும் ஆயுதபாணிகளாகி, யுத்த சன்னத்தராகி அத்தம்பதிகள் தங்கி இருக்கும் இடத்தை நோக்கி வேகமாகச் சென்றனர். இவர்கள்வரும் கருத்தை மணமகள் குறிப்பாலுணர்ந்து, தனது பர்த்தாவை நோக்கி 'இம்மூவரின் வருகை நன்றாயில்லை; இவர்கள் உம்மை அவசியம் கொலைசெய்வார்கள்; ஆதலின், இப்பொழுதே ஓடிவிடு; நீர் உமது உயிரைக் காப்பாற்றித் தப்பித்துக்கொண்டால், என்னைப்போல் வேறொரு பெண்ணை நீர் அடைந்துவிட முடியும்; அவளுக்கு நீர் எனது பெயரை வைத்து என்னை ஞாபகம் செய்துகொள்ளலாம்' என்று கூறி அவள் தனது மண உடையில் ஒன்றைத் தன்னுடலிலிருந்து களைந்து, அவனிடம் தனது ஞாபகார்த்தமாகக் கொடுத்தாள். அவன் குதிரையை வேகமாகத் தட்டிக்கொண்டு தப்பி ஓடினான். இவ்விரு சகோதரர்களும் அவனைப் பின்றொடர்ந்தனர். ஆயினும், அவன் அகப்படவில்லை. இறுதியாக பௌஜீன் என்னும் அப்பெண்ணை இம்மூவரும் அழைத்துக்கொண்டு தங்கள் கூடாரத்திற்கு வந்தனர். ஒருவனது மனைவியை எவர் தூக்கிக்கொண்டு போகிறாரோ அவர் அப்பெண்ணை மணந்துகொள்ளலாம் என்பது மொகல் வம்சத்திலுள்ள ஒரு வழக்கம். யஸூக்காயியினிடம் அதற்கான சக்தி இல்லை. என்றாலும், எவ்விதத்தாலோ அவளை மணம் புரிந்துகொண்டார். பௌஜீன் மிகவும் கூர்ந்த மதியினள். இவளது வயிற்றில்தான் நமது ஜங்கீஸ்கான் கி. பி. 1148-ம் வருஷத்தில் யஸூக்காயி என்பவருக்குப் புதல்வராகப் பிறந்தார். இவர் பிறந்த அதே தினத்தில் யஸூக்காயி ஒரு மொகலாயத் தலைவரை ஜெயித்து கைதிசெய்து கொண்டு வந்தார். அத்தலைவரின் பெயர் "தமூஜன்" என்பது. எனவே, தனது வெற்றியின் சந்தோஷத்திற்கடையாளமாகத் தன்னுடைய இப்புதல்வருக்கு "தமூஜன்" என்று பெயரிட்டார்.

யஸூக்காயியின் மரணம்

நமது தமூஜன் ஜங்கீஸுக்கு 9 வயதான போது அவரது தந்தை அவருக்கு ஒரு பெண்ணை மணம் பேசி நிச்சயப்படுத்திவிட வேண்டுமென்று விரும்பினர். ஆகவே; தனது சம்பந்திகளான அல்ஹூநூத் கோத்திரத்துத் தலைவனிடம் தன் புதல்வனை அழைத்துச் சென்று, அத்தலைவனின் புதல்வி போர்த்தா என்பவளை மணம் பேசி நிச்சயார்த்தம் செய்து வைத்தார். அக்காலத்தில் இவர்களில் ஒரு வழக்கமிருந்தது. பெண்ணுக்கு நிச்சயதார்த்தம் ஏற்பட்டவுடன் மாமனர் வீடு மருமகனுக்காகி விடுவது வழக்கம். இவ்வழக்கத்திற்கேற்ப, யஸூக்காயி தன் புதல்வரை மாமனர் வீட்டில் விட்டுவிட்டு திரும்ப வரும்போது எதிரில் ஒரு கூடாரம் தென்பட்டது. அக்காலத்து வழக்கத்திற்கேற்ப அங்கு சென்று தங்குவது அவசியம். தற்செயலாக அக்கூடாரம் அவரது பகைவர்களது கூடாரமாக இருந்தது. வழக்கத்திற்கேற்ப அவர் அங்கு சென்று இறங்கினர். அங்குள்ளவர்களும் வழக்கத்தை அனுசரித்து விருந்தாளியை உபசரித்தனர். என்ருலும், உணவில் கொஞ்சம் விஷத்தைக் கலந்து கொடுத்து விட்டனர். மூன்று நாட்களுக்குப் பிறகு அவர் தனது கூடாரத்திற்குத் திரும்பவந்தார். இதற்குள்ளாக அவரது நேத்திரங்கள் கெட்டுப் போயின. தனது தேக நிலைமையை உணர்ந்ததும், தனது புதல்வரான ஜங்கீஸை உடனே அழைத்துவர ஆள் அனுப்பினர். என்ருலும், அவர் வருவதற்குள் மரித்தார்.

பௌஜீனின் கஷ்டம்.

பௌஜீன் தனது அனதைக் குழந்தைகளுடன் விதவையானள். அவளுடன் அவளது புதல்வி, நான்கு புதல்வர்கள், சக்களத்தி மக்கள் இருவர், அத்துடன் வயோதிக வேலைக்காரி ஒருத்தி ஆகியவர்களை அவள் போஷிக்கவேண்டியதாக இருந்தது. யஸூக்காயி தனது சொற்ப ஜனத்தொகையுள்ள கோத்திரத்தின்பால் அதிகக் கடுமையாக நடந்துகொண்டிருந்தான். ஆதலால், அவனது குடும்பத்தினர்பால் மற்றவர்களுக்கு அனுதாபம் இருக்கவில்லை. இனல் பௌஜீன் அவளது குழந்தைகளுடன் துரத்தப்பட்டாள். இது அவளுக்கு மிகவும் சங்கடமான சமயம். ஆனல், அவள் சாமர்த்தியசாலி. இச்சந்தர்ப்பத்தில் அவள் தனது வீரத்தன்மையைக் காண்பித்தாள். உடனே, அவள் தனது கோத்திரத்தின் கொடியைத் தாங்கி, குதிரை மீது ஆரோகணித்துத் தனது கோத்திரத்தாரை அடக்க வாரம்பித்து விட்டாள். உண்மையில் அவள்தான் அக் கோத்திரத்திற்கு தலைவியாக வரவேண்டியவள். எனவே, அவள் ஜனங்களை அடக்கி ஒடுக்கி விட்டாள். என்ருலும், அவளை எதிர்த்த சிலர் திஜூத் கோத்திரத்தாரிடம் அடைக்கலம் புகுந்து, அவர்களுடன் சேர்ந்துகொண்டனர். எனவே, பௌஜீன் தனது மக்களுடன் ஒனன் நதிக் கரையில் மிகவும் கஷ்டஜீவனம் செய்து கொண்டிருந்தாள். ஜங்கிஸும் கஸரும் இவளது வயிற்றில் பிறந்தவர்கள். பாக்தரும், பல்கூத்தாயும் வேருெரு தாயின் மக்கள். இச்சகோதரர்களுக்குள் மனஸ்தாபமிருந்து வந்தது. ஆனல், பௌஜீன் அவர்களைச் சண்டை போட்டுக்கொள்ள விடாமற்றடுத்து "நீங்கள் ஒருவருக்கொருவர் சண்டை போட்டுக்கொள்ளக் கூடாது; நீங்கள் திஜூத் கோத்திரத்துத் தலைவர்களுடன் பழிவாங்க வேண்டியதிருக்கிறது; உங்களை விட்டுத் தப்பித்துக்கொண்டு போன ஜனங்களுக்கு அவர்கள் அடைக்கலம் கொடுத்திருக்கிருர்கள்.'' என்று புத்திமதி கூறி வந்தாள்.

என்ருலும், அச்சகோதரர் களுக்கிடையிலிருந்த பிணக்கை அவள் அடியுடன் ஒழிக்க முடியவில்லை. இறுதியாக தமூஜன் ஜங்கிஸும் கஸரும் ஒன்று சேர்ந்து தங்கள் மாற்ருந்தாயின் புதல்வனை பாக்தர் என்பவனை மிருகத்தனமாக வதைத்துக் கொலைசெய்து விட்டார்கள். பாக்தர் மரிக்கும்போது தனது கோத்திரத்தாரை நோக்கி "சகோதரர்களே, பல்கோத்தாயி மிகச் சிறிய பிள்ளை; அவனைக் கைவிடாதீர்கள்'' என்று கூறி மரித்தான். இச்சம்பவத்தால் பௌஜீன் மிகத் துயரடைந்தாள். "உங்களது பகைவர்கள் விஷயத்தில் மிக ஜாக்கிரதையாக இருங்கள்; உங்களுக்கு யாரும் துணைவரில்லை; குதிரை வாலைத்தவிர உங்களிடம் சவுக்குகூட இல்லை; திஜூத் கோத்திரத்தைச் சேர்ந்த இரண்டு தலைவர்கள் நியாயமில்லாமலும், அநியாயமாகவும், அக்கிரமமாகவும் குலைக்கு உங்களுக்குத் துணைபுரிந்திருக்கின்றனர்; உங்களுக்கு அவர்கள் விளைவித்திருக்கிற நஷ்டம் சகிக்க முடியாததாக இருக்கிறது; உங்கள் பகைவர்களிடம் நீங்கள் பழி வாங்குவதற்கு ஆயுத்தமாகிக் கொண்டிருந்த இச்சமயத்தில் நீங்கள் இக்காரியத்தைச் செய்துவிட்டீர்கள்'' என்று வருத்தத்

துடனும், கண்டிப்புடனும் கூறி தனது மைந்தர்களைக் கண்டித்தனள்.

இச்சம்பவத்தை திஜூத் கோத்திரத்தார் தங்களுக்குச் சாதகமாக உபயோகித்துக்கொண்டனர். ஜங்கிஸ்கான்தான் தலைவராக வர உரிமையுள்ளவர். ஆதலால், அவரைப் பிடித்து, கைதியாக்கி விட்டார்கள். அநேக கஷ்டங்களை அனுபவித்த பிறகு ஜங்கிஸ் விடுதலையானார். பிறகு, அவரும் அவரது சகோதரர்களும் மிகவும் எளிமைத்தனத்துடன், தரித்திர தசையில் ஜீவித்து வந்தனர். இவர்களது ஜீவியம் தோள்களில் வீடுகளைச் சுமந்து செல்வதாக இருந்தது. அதாவது, கூடாரங்களில் வசிப்பதாகவும், நாடோடிகள்போல் இன்று ஒரு இடம் நாளை ஒருஇடம் என்று வசிக்கவேண்டியதாகவுமிருந்தது. கலர் அம்பெய்வதில் பிரபலமடைந்தான். ஜங்கிஸ் புத்திசாலித்தனம், தந்திரம், உயிருக்கஞ்சாமை முதலிய விஷயங்களில் கீர்த்தி பெற்றார். ஒருமுறை அவரது கூடாரத்தில் எட்டு ஆடுகள் களவாடப்பட்டன. மிகத் தீவிரமாக அவர் திருடர்களுக்குப் பின் சென்று, அவர்களைத் தாக்கி அவ்வாடுகளை மீட்டுக்கொண்டு வந்தார். இவ்வித வீர தீரமுள்ள ஜங்கீஸ் வாலிபப் பருவத்தை அடைந்தார்.

மனைவி போர்த்தாவின் சங்கடம்

இப்பொழுது ஜங்கிஸ் தனக்கு நிச்சயார்த்தம் செய்திருந்த தனது மனைவி போர்த்தாவைத் தனதில்லம் அழைத்து வந்தார். ஜங்கீஸ் தனது மாதா பௌஜீயாவிற்கு மிகவும் பயப்படுபவர். இவ்வயோதிகி மிகவும் கண்டிப்புள்ளவள். ஆனால், புத்திசாலித்தனமாக ஆலோசனைகள் கூறிவந்தாள். இவளுக்கு ஆடவரின் துணிச்சலும் தைரியமுமிருந்தன. ஒரு வீர ஆடவரைப்போல் விஷயத்தை முடிவு செய்பவள். எனவே, போர்த்தா இப்பொழுது தனது மாமியாரின் பரிபாலனத்தின்கீழ் வந்தாள். போர்த்தா மிகவும் சிறந்த ஒழுக்கமுள்ள ஸ்திரீ என்பதிற்சந்தேகமில்லை. என்றாலும், துருதுருத்தவள். அவளது பயிற்சி நாடோடிகளின் கடின ஜீவியத்துடன் சம்பந்தப்பட்டிருந்தது. ஜங்கிஸின் மாதாவான பௌஜீனின் முதல் புருஷனுடைய கோத்திரமான மார்கட் கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள் பழிவாங்கும் நோக்கத்துடன் போர்த்தாவைத் தூக்கிச் சென்றிருந்த காலத்தில் கொஞ்சம் கஷ்டமேற்பட்ட போதினும், அவளுடைய அதிர்ஷ்டம் பிரகாசித்துக்கொண்டிருந்தது. ஜங்கிஸ்கானின் மாதாவாகிய பௌஜீன் என்பவளை முதல் முதலாக விவாகம் செய்த முதல் புருஷன் இதே மூர்கட் கோத்திரத்தைச் சேர்ந்தவன். ஆதலின், அவனது புதல்வர்கள் அந்தப் பழியை வாங்குவதற்காக ஜங்கிஸ்கானின் மனைவியைத் தூக்கிச் சென்றுவிட்டனர். ஒன்பது மாதங்களுக்குப் பிறகு, கற்பிணியாகத் திரும்பவந்தாள். எவ்வாறாயினும், போர்த்தா ஜங்கிஸ்கானின் இராணியாக இருந்தனள்.

ஜங்கிஸ்கானின் வாலிப பருவம்

ஜங்கீஸ்கானுக்கு எழுதவோ படிக்கவோ தெரியாது. என்றாலும், முட்டாளல்ல; விவேகி. அவர் பையனாக இருந்தபோது, தனது மாமனார் வீட்டில் தங்கி இருந்த காலத்தில் சீன தேசத்திற்குப் பக்கத்தில் வசித்து வந்தார். கூடாரங்களில் தான் வாழ்ந்து வந்தார். சீன நகரங்களுக்குச் செல்லவும், கடைத் தெருக்களில் வியாபாரங்கள் நடைப்பெறுவதைப் பார்க்கவும் சந்தர்ப்பமேற்பட்டது. ஆகவே, வாழ்க்கையின் லக்ஷியம் யுத்தம் செய்வதும், சந்ததியைப் பெருக்குவதும் மட்டும் என நினைக்கவில்லை, அவரது கருத்து இவை இரண்டிற்கும் அப்பால் சென்றது. ஆனால், தனக்கு இவ்வுலகில் எவரும் துணைவராக இல்லை என்பதை உணர்ந்தார். தனக்கு உதவியாகவும் ஒத்தாசையாகவும் இருக்கக்கூடிய பலமான ஒரு தகுதிவாய்ந்தவர் தேவையாக இருந்தது. கர்த்தீத் கோத்திரத்துத் தலைவரான தஃஜூல் என்பவர் தன் தந்தையுடன் சகோதரரைப் போல் நடந்துகொண்டவர், மிகவும் அந்நியோன்யமான நண்பர். அப்பக்கத்திலுள்ள தலைவர்கள் அனைவரையும் பார்க்கினும் அதிகப் பணமுள்ளவராகவும் இருந்தார். சீனாவின் எல்லைப்புறத்தில் வசித்து வந்தார். சீனா தேசத்தின் மீது படையெடுத்துவரும் அந்நியரைத் தடுத்து நிறுத்துவதற்காக சீன அரசாங்கம் அவருக்கு ஒரு பெருந்தொகை கொடுத்துக்கொண்டிருந்தது. அவரிடத்தில் செல்வதென ஜங்கிஸ்கான் முடிவு செய்து, தனது விவாக காலத்தில் தனக்குக்கிடைத்த கருப்புக் கம்பளிக் கோட்டை எடுத்துக்கொண்டு தஃஜூவிடம் சென்று அவருக்குக் காணிக்கையாகக் கொடுத்தார். வயோதிக தஃஜூலுக்குச் சந்தோஷம் அதிகமாகிவிட்டது. ஜங்கீஸ்கானின் கோத்திரத்திலிருந்து விலகிச் சென்றவர்களை எல்லாம் மறுபடியும் ஒன்று சேர்த்து, அவருக்கு அடங்கி நடக்கச் செய்வதாக வாக்களித்தார்.

இவ்வித நிலைமையில் ஜங்கிஸ்கானுக்கு மற்றொரு கஷ்டம் நேர்ந்தது. அவரது தந்தை பௌஜீனை அபகரித்து வந்து விட்டதால் மர்கட் கோத்திரத்தார் பழி வாங்கும் எண்ணத்துடன் சமயம் பார்த்துக்கொண்டே இருந்தனர். திடீரென ஜங்கிஸ்கான்மீது படையெடுத்து வந்து தாக்கினர். ஜங்கிஸ்கான் தனது பௌஜீனைக் குதிரை மீதேற்றி வைத்து தப்பித்துக்கொள்ளச் செய்தார். தனது மனைவி சவாராகுவதற்குள் பகைவர்கள் அவளையும் (ஜங்கிஸ்கானின் மனைவியையும்) அவளது வயோதிக வேலைக்காரியையும் பிடித்துக்கொண்டனர். ஜங்கிஸ்கான் பர்க்கான் மலையில் அடைக்கலம் புகுந்தார்.

தனது அழகிய மனைவியை அடித்துக் கொண்டு போய் விட்டதைக் குறித்து அவர் கவலை கொள்ளவில்லை. தனது அந்தஸ்தை நிலை நிறுத்த வேண்டும் என்பதைப்பற்றியே முக்கியமாக சிந்தித்தார். ஆகவே, பர்க்கான் மலை எனது ஜீவியத்தை, உயிரை, காப்பாற்றியதால், அம்மலைக்காக நான் தியாகங்களைப் புரிவேன்; எனது சந்ததியினரும் இதையே செய்யவேண்டும் எனக்கட்டளை யிடுவேன்; இங்குதான் எனது குடியிருப்பு ஸ்தலமுமிருக்கும்” என்று பிரதிக்ஞை செய்துகொண்டு, அவ்விதமே செய்தார். மொகலாயரின் சமூகப் பந்தய ஆட்டங்கள் (ஸ்போர்ட்) இன்றுங்கூட அம்மலையில்தான் நடைபெற்று வருகிறது. இதன் ஞாபகார்த்தமாகவே இங்கு ஸ்போர்ட்டுகள் நடைபெற்று வருகின்றன. மர்கட் கோத்திரத்தார் ஜங்கிஸ்கானின் மனைவியான போர்த்தாவை, பௌஜீனின் முதல் புருஷனது சகோதரனிடம் ஒப்புவித்தனர். ஒன்பது மாதங்களுக்குப் பிறகு தான் போர்த்தா மறுபடியும் ஜங்கிஸ்கான் வசம் திரும்ப வந்தனள்.

இவ்விதமாக ஜங்கிஸ்கானின் ஜீவியம் அவரது 50-வது வயது வரை நாடோடித்தனமாக கழிந்தது. காடும், வனாந்திரமும்தான் அவரது வாசஸ்தலமாக இருந்தது. அவரது வாலிப காலமெல்லாம், அவருக்குத் தோல்வியாகவே இருந்தது. மிகக்கேவலமான காரியங்களை எல்லாம் சகிக்க வேண்டியதிருந்தது. 50 வயது வரை தனது பகைவர்களுக்கு ஒழித்துக் கொண்டும், உயிர் தப்பிக் கொண்டும் வாழ்ந்தார். அதற்குப் பிறகுதான் அவர் பிரகாசிக்க வாரம்பித்தார். உலக சரித்திரத்தில் அவருக்கு நிகரானவர் எவரும் இல்லை. பிரமிக்கத்தக்க வெற்றிகள் அவருக்கு ஏற்பட்டன. சமயசந்தர்ப்பத்தை நழுவ விடாமல், எல்லாவற்றையும் பிரயோஜனப் படுத்திக் கொண்டார். சைனியங்களை உடனே யுத்தகளத்திற்கனுப்புவதிலும், ஒழுங்கு படுத்துவதிலும், முடிவான யுத்தம் செய்வதிலும் அவருக்கு நிகர் எவருமில்லை. (தொடரும்)

இஸ்லாத்தில் வியாபாரம் கைதொழிலின் சிறப்பு

எவ்வாறு காலத்தில் மாறுபாடு ஏற்பட்டுக் கொண்டு போகிறதோ அவ்வாறே ஒவ்வொரு சக்தியின் உயிர் நாடியிலும் மாறுதல் ஏற்பட்டுக்கொண்டே வருகிறது. நாம் முந்திய சரித்திரங்களைப்புரட்டி பார்ப்போமாகில்இதன் உண்மையை எளிதில் தெரிந்து கொள்வோம். ஒரு காலத்தில் ஈரானில் பலம் பொருந்திய சத்தவீரபராக்கிரமமுடையவர்களுக்குச் செல்வாக்கிருந்த தென்றால், மற்றொரு காலத்தில் யூனன் தேசத்திலுள்ள ‘ஹக்கமா’ களென்னும் அறிவாளிகளுக்குச் செல்வாக்கிருந்தது. இந்தியாவிற்கு ஆரம்பத்தில் முகலாயர் வந்த பொழுது வாள் வீச்சு, சிப்பாய்த் தொழில் இவைகளுக்கு மதிப்புக் கொடுக்கப்பட்டு வந்தது. அதன்பின் புலமைத்தனம், நுட்ப அறிவுயுடையோர் புகழப்பட்டு வந்தனர். இது பொழுதோ தொழிற்சாலையிலமர்ந்து வியாபாரம் செய்வதிலும் கைத்தொழில் புரிவதிலும் செல்வாக்கேற்படும் மாறுதல் காணக்கூடிய காலமாக மாறியிருக்கிறது. எனவே, முற்காலங்களில் தங்கள் புஜபல பராக்கிரமத்தைக் கொண்டு ஆணவம் பேசி, தங்கள் சக்திகளையே முழுதும் நம்பியிருந்த இராஜாங்கங்கள், தற்கால வியாபாரம் கைத்தொழில் இவைகளில் முழுதும் ஈடுபட்டு, தங்கள் பலம் முழுதும் இவைகளின் அபிவிருத்தியைக் கொண்டே ஏற்

படுகிறதென்பதை நன்குணர முற்பட்டு விட்டன. சகல வல்லரசுகளும் வியாபாரம் கைத்தொழில் இவைகளின் பக்கல் முழு பிரயாசையையும் கவனத்தையும் செலுத்தி வருகின்றன.

தற்காலே சகல வல்லரசுகளும் தங்கள் உயர்வுக்கு, தாங்கள் மேன்பதவியடைவதற்கு உயிர்நாடியாகக் கண்டு பிடித்திருக்கும் ஓர் பிரதான விஷயத்தை நமது இஸ்லாம் மார்க்கம் மக்களுக்கறிவிக்காது, அதன் மேன்மைகளை எடுத்துக் கூருது வாளாவிருந்துவிடுமோ? ஆனால், முஸ்லிம்களின் தற்கால வாழ்க்கையோ சிறப்பு பொருந்திய சக்தியாகிய வியாபாரம் செய்தல், கைத்தொழில் புரிவது இவைகளை விட்டு வெகு தூரத்திலுள்ளதாக விருக்கிறது. முஸ்லிம்களாகிய நாம் இவைகளை அறவே கவனியாது பராமுகமாக இருக்கிறோம். நம்மை இம்மை மறுமை இருபதிகளிலும் கடைதேற்றவந்த சத்திய சீலர் எம்பிரான் (ஸல்.) அவர்களின் சுன்னத்தை அறவே பின்பற்ருது வாளாவிருந்து வருகின்றோம்.

"முஸ்லிம்காள்! உங்களுக்கு ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களில் அழகிய முன் மாதிரி யிருக்கிறது" என, அல்லாஹ்தஆலா அறிவிக்கின்ருன். எனவே, வணக்கங்களானுலும் சரி, அல்லது தொழிற் முறையானுலும் சரி நாம் நபிகள் திலகம் (ஸல்.) அவர்களது அடிச்சுவட்டைப் பின்பற்றி நடக்க வேண்டியது நமக்கு மிகமிக பிரதானமாகும். துர் அதிர்ஷ்டவசமாய் நம் முஸ்லிம் நேயர்கள், ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தங்கள் ஆரம்ப காலத்தில் புரிந்துவந்த வியாபாரத்தில் ஈடுபடாது, அந்த சுன்னத்தைப் பின்பற்றி நடக்காது, ஒரே யடியாய் மறதியிலுட்கார்ந்திருக்கின்றனர். நம் முஸ்லிம்களல்லவோ வியாபாரத்தின் முன்னணியில் நிற்கவேண்டும். நமது பெருமானுர் (ஸல்.) அவர்கள் முன்மாதிரியாகச் செய்து காண்பித்த உத்தம கைங்கரியத்தை நாமல்லவோ முதன் முதலில் பின்பற்றி நடப்பதற்கு நமது முழு பிரயாசையையும் செலவிட வேண்டும்.

வெள்ளிக்கிழமை ஜும்ஆத் தொழுகை எவ்வளவு பிரதானமென்பது யாவருக்கும் தெரிந்தவையே. இது சம்மந்தமாய் குர்ஆன் ஷரீபில் ஓர் தனி அத்தியாயமே இருக்கிறது. மேலும் "எவனுக்கு மூன்று ஜும்ஆ தப்பிப்போகிறதோ அவன் யூதனுகவோ, முஸ்லிமாகவோ மரிப்பதைப் பற்றி அல்லாஹ் தஆலாவுக்கு எவ்வித கவலையுமில்லை" என, ஹதீது ஷரீபில் கூறப்பட்டிருக்கிறது. இவ்வளவு சிறப்புப் பொருந்திய தொழுகையை நிறைவேற்றி விட்டு, வியாபாரத்தின் பக்கல் செல்லுமாறு முஸ்லிம்களுக்கு அறிவிக்கப்படுகிறது. அதாவது, நீங்கள் தொழுகையை நிறைவேற்றி முடிந்தவுடன், வியாபாரம் புரிவதற்கு செல்ல உங்களுக்கு அனுமதியளிக்கப் படுகிறது. கிறிஸ்துவரும் மற்றும் ஏனையோரும் உலக வாழ்க்கையை வெறுத்துத் தள்ளிவிட்டு மூலைபிடித்து உட்கார்ந்திருப்பது தான் ஈடேற்றம் பெறுவதற்கான மார்க்கமெனக் கருதியிருந்தனர். இவ்வெண்ணம் தவறுகுமென்பதை அறிவிப்பதற்காக, நீங்கள் வியாபாரத்திலீடுபட்டு அல்லாஹ்வின் கிருபையை தேடிக்கொள்வது உங்கள்மீது குற்றமான காரியமாகாது என, அல்லாஹ் தஆலா அறிவிக்கின்ருன். மற்ருெரு ஆயத்தில் வியாபாரிகளைப் பற்றி, "மற்ருெரு வகுப்பார் அல்லாஹ்வின் கிருபையைத் தேடி பூஉலகில் செல்வார்கள்" என புகழ்ந்து கூறி யிருக்கின்ருன். மேலும் உலகிலுள்ள சகல வஸ்துக்களையும் சுட்டிக்காட்டி "உங்களுடைய ஜீவிப்புக்காக இவைகளை பொருட்டாக ஏற்படுத்தி யிருக்கிறோம்" என, அறிவித்திருக்கிருன். இதுவன்றி "பகற் காலங்களை உங்களுடைய ஜீவியத்திற்குரிய மார்க்கமாக ஆக்கியிருக்கிறோம்" எனக் கூறியிருக்கிருன்.

ஆகவே, மேலே கூறப்பட்டுள்ளவைகளையெல்லாம் நாம் நன்கு ஆராய்ந்து பார்ப்போமாகில், குர்ஆன்ஷரீபானது மக்களை வணக்கம் புரிவதற்கு எவ்வளவுதூரம் தூண்டுதல் புரிகின்றதோ அத்தன்மை போல் குர்ஆன்ஷரீபைப் பின்பற்றி நடப்போர்களை வியாபாரம் புரிவதிலீடுபடும்படி உற்சாக மூட்டுகிறதென்பதைத் தெரிந்து கொள்வோம். வணக்கம் புரிவது மக்கள் பரலோகத்தில் அவமான மடைவதை விட்டு காப்பாற்றுகிறதென்ருல், வியாபாரம் புரிதலானது மக்கள் தாழ்மையாகக் கருதப்படுவது, ஏழ்மைத் தனத்தை அனுஷ்டிப்பது இவைகளை விட்டு காப்பாற்றப்படுவதற்குக் காரணமாக இருக்கின்றது. மக்களை இகபர மிரண்டிலும் உத்தம சீலர்களாய்த் திகழச் செய்ய வந்த உத்தம சன்மார்க்கம், மக்கள் பரலோகத்தில் முக்தி பெறுவதற்கான மார்க்கத்தை மட்டும் காண்பித்து விட்டு இகத்தினது முக்தியின், வழியைக் காண்பிக்காது

விட்டுவிடுமா?. முஸ்லிம்களாகிய நாம், துர் அதிர்ஷ்டவசமாக பாவமான காரியங்கள் புரிவது கொண்டு மறுமையில் இன்ப சுகங்களை அடையும் மார்க்கத்தை, அதன் தலை வாயிலை அடைத்துக் கொண்டதுபோல் உலக முன்னேற்றம், கவலையற்ற வாழ்வு இவைகளின் தலைவாயல் மீது முத்திரை வைத்து விட்டோம்.

“நீங்கள் வியாபாரம் புரியுங்கள்; அதில் உங்களுடைய இரணத்தில் 10-ல் ஒன்பது பங்கு ஏற்பட்டிருக்கிறது.” என்பதாக நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் வியாபாரத்தின் மேன்மையை சிலாகித்துக் கூறியிருக்கின்றார்கள். நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் கூறிய இவ்வாக்கியத்தை தற்போதைய நம்முடைய இக்காலம் உறுதிபடுத்திக் காண்பிக்கின்றது. இதுகாலை எந்த சமூகம் வியாபாரத்தி லீடுபட்டிருக்கிறதோ, அச் சமூகம் இதரர்களைவிட செல்வமான நிலைமையி லிருப்பதை நாம் காண்கின்றோம்.

வியாபாரத்திற்காக கைத்தொழில் முறையும் அவசியமாகும். எவர்கள் கைத்தொழில் முறையிலீடுபடாது வியாபாரம் மட்டில் புரிகின்றார்களோ அன்னோர் தொழிலாளரின் ஏஜண்டாகக் கருதப்படுகின்றனர். இன்னோருக்குத் தக்க ஊதியமும் கிட்டுவதில்லை. இதற்காகத்தான் நமது சன்மார்க்கம் வியாபாரத்துடன் கைத்தொழில் வித்தை இவைகளையும் வற்புறுத்திக் கொண்டே வருகிறது. உதாரணமாக, ஹஸ்ரத் தாவூத் (அலை.) அவர்களுக்கு உருக்குச் சட்டை செய்வதற்கான தொழிலை அல்லாஹ் கற்றுக் கொடுத்ததாக குர்ஆன் கூறுகின்றது. இதுவன்றி ஹஸ்ரத் நூஹ் (அலை.) கொல்லு வேலை புரிந்ததாகவும், ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை.) அவர்கள் பஞ்சு வேலை செய்ததாகவும், ஹஸ்ரத் இத்ரீஸ் (அலை.) தையல் வேலை செய்ததாகவும், ஹஸ்ரத்சாலிஹ் (அலை.) அவர்கள் கம்பளம் நெய்ததாகவும், நமது இரு உலக ரட்சகர் முகம்மது நபி(ஸல்.) அவர்கள் தங்கள் துணிகளை தாங்களே தைத்துக் கொண்டதாகவும், தங்கள் கைகளினாலேயே துவைத்து சுத்தம் செய்து கொண்டதாயும், தங்கள் செருப்புக்களை தாங்களே ஒழுங்கு செய்து கொண்டதாகவும் சரித்திரங்கள் அறிவிக்கின்றன. ஆகவே, நபிகள் திலகம் (ஸல்.) அவர்களும் இதர அன்பியாக்களும் கைத்தொழில் முறையிலீடுபட்டிருந்தார்களென்பது நன்கு புலனாகின்றன.

இது சம்பந்தமாய் சத்தியத்தூதர் (ஸல்.) அவர்கள் கூறியிருப்பதாவது:—

1. தொழில் முறையி லீடுபடுபவர்களை அல்லாஹ் மிகமிக உகக்கிறான்.

2. பாவங்களிற் சில மன்னிக்கப்படாததாகவிருக்கிறது. ஆனால் மனிதன் தொழிற்முறையிலீடுபடுவதி லேற்படும் கஷ்டங்களை சகித்துக் கொள்வது கொண்டு அந்த பாவம் மன்னிக்கப் பட்டுப் போகிறது.

3. எவன் ஹலாலான (ரிஜ்கை) சாப்பாட்டை அடைவதற்காக தொழிற் முறையிலீடுபடுகின்றானோ, அவன் மறுமை நாளில் 14-ம் இரவின் பூரணச் சந்திரனைப்போ லொற்ற முகத்துடனிருக்கும் நிலைமையில் அல்லாஹ் தஆலா அவனைச் சந்திப்பான்.

4. ஒரு நாளன்று நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் ஸஹாபாக்களிடையே வீற்றிருக்குங்கால் ஓர் பருமனுள்ள, பலம் பொருந்திய மனிதன் அவ்வழியே சென்றான். அதுபொழுது அங்கு வீற்றிருந்தவர்களி லொருவர் இம்மனிதன் நாசமாகப் போகக்கடவது. இவனுடைய வாலிபமும் பலமும் அல்லாஹ்வின் பாதையில் செலவாகுமாயின் எவ்வளவோ பிரயோசனமாக இருக்கும் எனக்கூறினார். இதனைச் செவியுற்ற நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் சாபமிடாதீர்கள். இவர் ஒருக்கால் விர்த்தாப்பிய வயதையுடைய தன் தாய் தந்தையர்கட்கு, சிறுவர்களாகிய பிள்ளைகளுக்கு சாப்பாடு போடுவதிலீடுபட்டு, அதற்காக சம்பாத்தியஞ் செய்வதற்குப் பாடுபடுவாராகில் அஃது பெரும் தியாகமும் அல்லாஹ் தஆலாவின் பாதையில் செல்லுவதுமாகும் என அறிவித்தார்கள்.

இவை சம்மந்தமாய் இது போலொற்ற அநேக ஹதீதுகள் கிரந்தங்களில் மிளிர்ந்து கொண்டிருக்கின்றன. அவைகளில், நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்கள் வியாபாரம் கைத்தொழில் முதலியவைகளை மிகமிக மேலான முறையில் சிலாகித்துக் கூறியிருப்பதும், அவைகளினால் அளவற்ற பிரயோசனங்களேற்படுகிறதென புகழ்ந்து கூறியிருப்பதும் இனிது புலனாகும். ஆகவே, வியாபாரம் கைத்தொழில் முறை இவைகள் அல்லாஹ்வுக்கும் அவனது ரஸூல் (ஸல்.) அவர்களுக்கும் மிக மிக விருப்பமான செய்கையாகும் என்பது மேலே கூறப்பட்டுள்ள சம்பவங்களிலிருந்து நமக்கு நன்கு புலனாகின்றது. எனவே, நம்மவர் இவ்வுத்தம கைங்கரியங்களி லீடுபட்டு இகபர சாதனங்கள் யாவற்றையும் பெற்றுய்யுமாறு பன்முறையும் வேண்டிக் கொள்கிறோம். வஸ்ஸலாம்.

ஆப்பிரிக்க காட்டுமிராண்டிகள்

எகிப்து தேசத்தைச் சேர்ந்த யூஸுப்பேக் என்பவர் ஆப்பிரிக்காவிலுள்ள காட்டு மனிதர்களைக் குறித்து எழுதியுள்ள விபரம் வருமாறு :—

புலி, கரடி போன்ற ஐவாய் மிருகங்களும் காட்டுமிராண்டிகளும் வசிக்கும் ஸ்தலம் என்று சொல்லப்படுகிற ஆப்பிரிக்கா கண்டத்து வனங்களையும், அடர்ந்த காடுகளையும், சோலைகளையும் சுற்றிப் பார்க்க வேண்டும் என்ற எண்ணம் எனக்கு 1929-ம் வருஷத்தில் முதல் தடவையாக உண்டாயிற்று. என்னுடைய சில ஐரோப்பிய நண்பர்களும், எகிப்திய அபிமானிகளும் என்னுடைய இவ்வபிப்பிராயத்தைப் பலமாக எதிர்த்தனர். இந்நூதனமான ஜனங்களிடம் செல்வது வேணுமென்றே மரணத்தை அழைப்பதாக இருக்கிறது என்று அவர்கள் கூறினர். ஆனால், நான் இவர்களது அபிப்பிராயங்களில் எதையும் மதிக்காமல், அப்பிரதேசங்களுக்குப் பிரயாணமாகி விட்டேன்.

நான் துப்பாக்கியுடனும், அவசியமான சில சாமான்களுடனும் வெகுநாள்வரை ஆப்பிரிக்காவிலுள்ள அடர்ந்த காடுகளில் அலைந்து கொண்டிருந்தேன். ஒருநாள் அடர்ந்த காட்டில் நான் சென்று கொண்டிருந்தபோது, அழகிய ஆப்பிரிக்க ஸ்திரீ ஓர் அபாயத்திற்குள் சிக்கி இருப்பதை நான் கண்டேன். ஒரு கரடி அவளை வளைத்துக்கொண்டிருந்தது. உடனே நான் துப்பாக்கியை எடுத்து அக்கரடியின் நெற்றியைக் குறி வைத்து, மிகச் சாதுர்யமாக சுட்டேன். எனது குறி தவறவில்லை. நான் வைத்த குறியில் சரியாகக் குண்டு பட்டது. என்றாலும், நான் பல தோட்டாக்களை இன்னும் செலவு செய்ய வேண்டியதேற்பட்டது.

அப்பெண் இச்சம்பவத்தால் ஸ்மரணையற்றாள். பிறகு, அவளுக்கு ஸ்மரணை வந்தபோது, தனது பாஷையில் என்னை நோக்கி ஏதோ கூறினாள். எனக்கு அவள் நன்றி செலுத்தி இருக்கக்கூடும். பிறகு, அவள் என்னைத் தன்னுடன் அழைத்துக்கொண்டு சென்றாள். இப்பொழுது நான் பிரஸ்தாபித்துக் கொண்டிருக்கிற அப்பிரதேசத்தில் காட்டுமிராண்டி ஜனங்களைத் தவிர வேறு யாரும் வசிப்பதில்லை. நாகரீகமடைந்தவர் எவர் சென்றாலும் அங்குள்ளவர்கள் தங்களது விஷ அம்பினால் அவரைக் கொன்று விடுவது வழக்கம். ஆனால், நான் இப்பெண்ணின் உயிரைக்காப்பாற்றியதால், அவள் என்னைத்தன்னுடன் அங்கழைத்துச் சென்றாள்.

அப்பிரதேசத்திலுள்ளவர்கள் தங்களது ஸ்திரீயுடன், நாகரீகமடைந்த ஒரு ஆடவன் வருவதைக் கண்டவுடன் ஆத்திரமடைந்தனர்; தங்களது அம்புகளுக்கு என்னை அவர்கள் குறி வைத்தனர். என்றாலும், அப்பெண் அவர்களை நோக்கி "ஆயாவ், ஆபாவ்" என்று கூறினாள். அதாவது "பொறுங்கள், பொறுங்கள்" என்று சப்தமிட்டாள். அப்புறம் அவர்களிடம் நடந்த விஷயமனைத்தையும் அவள் கூறினாள். ஆனால், அவர்கள் அடிபட்டுச் செத்துக்கிடக்கிற கரடியைத் தங்கள் கண்ணால் பார்க்கும் வரை, அவள் கூறியதை நம்பவில்லை.

தவிரவும், அவள் அப்பிரதேசத்துத் தலைவனின் புதல்வியாதலால் அவளது உயிரைக்காப்பாற்றியதற்காக அப்பிரதேசத்திலுள்ளவர்கள் தங்கள் பாஷையில் எனக்கு நன்றி செலுத்தினர். நான் செய்த இவ்வூழியத்திற்குப் பிரதியாக என்னை அப்பிரதேசத்தில் வசிக்க அனுமதித்தனர். கிட்டத்தட்ட ஒன்பது வருஷகாலம்வரை அங்கு நான் இருந்தேன். இவ்வொன்பது வருஷகாலத்திற்குள் நானும் அவர்களைப்போல் நல்ல காட்டுமிராண்டியாகி விட்டேன். அவர்களைப் போலவே நானும் எனது வாழ்க்கையை நடத்திவந்தேன். இங்குள்ள வாழ்க்கைமுறை மிக நூதனமானது. மிகவும் சாமான்யமான எளியமுறை. நாகரீகம் படைத்த உலகில் வாழும் மனிதர்கள் இக்காட்டு மிராண்டிகளின் வாழ்க்கை முறையையும் சௌக்கியத்தையும் நினைவிற்கொண்டு

வரக்கூடமுடியாது. இந்தப் பிரதேசம் எனக்குப் புதிய உலகமாகவே தோன்றிற்று. அங்கு விஞ்ஞான சாஸ்திரத்தைப்பற்றிய விவாதமோ, வாய் சண்டையோ, நாகரீகமோ இல்லை. அவர்களது மதமும் நூதனமானது. அங்கு விக்கிரக ஆராதனை இல்லை, மரத்தை வணங்குவதுமில்லை. ஒவ்வொரு குடும்பத்திலும் வயது முதிர்ந்தவரை அக்குடும்பத்தினர் பூஜிக்கின்றனர். அவர்தான் கடவுளின் தோற்றம் என்று கருதுகின்றனர். வருஷந்தோறும் இம்மனித தேவதைக்கு அழகிய கன்னிப்பெண் பலி கொடுக்கப்படுகிறது. அதாவது அவர்களது கடவுள், அவர்களது தேவதை, அவர்களில் வயோதிகப் பருவத்தை யடைபவரே யாவர். ஆகவே, அவர்களிலுள்ள வயோதிகர் தனக்கு இஷ்டப்பட்ட எவரையும் அந்த ஜனங்களுக்குத் தலைவனுக்கவும், தலைமைப் பதவியிலிருந்து நீக்கவும் பூரண சுதந்திரம் பெற்றவராக இருக்கிறார்.

இப்பிரதேசத்திலுள்ள ஸ்திரீகள் மிகவும் அழகுவாய்ந்தவர்கள். அவர்களது நிறம் பொன்னிறமாக இருக்கிறது. உடல், தேக அமைப்பு, அவயவங்கள் மிகவும் ஒழுங்காக இருக்கின்றன. உலகிலுள்ள வேறு எப்பிரதேசத்துஸ்திரீக்கும்இவ்வளவு ஒழுங்காகஅமைவது கஷ்டம். இங்கு விவாகம்செய்வதற்கு ஒரு விதமான ஆசாரமும் குறிப்பாக இல்லை. இங்குள்ளவர்கள் காதல் தொழில் செய்கின்றனர். தங்கள் காதல் விகாரத்தைத் தீர்த்துக் கொள்வதைத்தான் விவாகம் என்று கருதுகின்றனர். எனவே, இப்பிரதேசத்திலுள்ள ஒவ்வொரு ஆடவரும் டஜன் கணக்கான ஸ்திரீகளுடன் காதல் தொழில் செய்து வருகின்றனர்.

இவர்களது விவாகம் அல்லது காதல் விளையாட்டிற்கு இங்கு ஒருமுறை விசேஷமாக அநுஷ்டிக்கப்படுகிறது. ஒரு வாலிபன் ஒரு பெண்ணின் மீது காதல் கொண்டு விட்டால், இருவரும் இரகசியமாகக்கூடிப் பேசிக்கொண்டு ஒரு இரவில் ஒருவருக்கும் தெரியாமல், எங்கேனும் சென்று விடுகிறார்கள். தொடர்ச்சியாக மூன்று நாள்வரை மறைந்து விடுகின்றனர். அப்புறம் இருவரும் திரும்பவரும்போது, கிராமவாசிகள் அவர்களை வரவேற்று, உபசரித்து, அவர்கள் திரும்பவந்த சந்தோஷத்தின் அறிகுறியாக ஆடுகளை அறுத்து விருந்தளிக்கின்றனர். இச்சுபச் செய்தியைத் தங்களது தேவதைக்கு அறிவித்துவிடுவர்.

இவ்விதமாகக் காதல் கொண்டு விவாகம் செய்தபின் அவ்விருவரும் தங்கள் வாணாள் முழுவதும் சேர்ந்திருக்கவேண்டும்; பிரியக் கூடாது என்ற நிர்ப்பந்தமில்லை. அவர்கள் இஷ்டப்பட்டபோது இருவரும் பிரிந்து விடலாம். ஸ்திரீயோ, புருஷனோ தனது ஜோடியை விட்டுப்பிரிய விரும்பினால், அவர்களில் ஒருவர் இரவில் தெரியாமல் மறைந்து, தொடர்ச்சியாக மூன்று நாளிருந்து விடவேண்டும். மூன்று நாள்வரைதொடர்ச்சியாக மறைந்திருப்பதற்கு, இனி எனக்கு துணைவனோ அல்லது துணைவியோ தேவை இல்லை என்பது பொருள். மூன்று நாட்களுக்குப் பிறகு திரும்ப வந்தால், அப்புறம் இருவருக்கு மிடையில் எவ்விதமான சம்பந்தமும், தொடர்பும் இருக்க மாட்டாது. இவ்விதம் அங்குள்ள ஒவ்வொரு ஆடவனும் ஸ்திரீயும் பல பெண்களுடனும் ஆடவர்களுடனும் விவாகம் செய்து கொள்கின்றனர்.

குழந்தைகளைப் போஷித்தல், வளர்த்தல் போன்ற பொறுப்புக்கள் யாவும் இங்கு ஸ்திரீயின் மீதே இருக்கின்றன. புருஷனுக்கு இவ்விஷயத்தில் எவ்விதக் கடமையுமில்லை. வாரிசுபாத்தியமும் ஸ்திரீகளுக்கு மட்டிலும் தானிருக்கின்றன; ஆடவருக்கு ஒன்றுமில்லை. ஆடவர்கள் கஷ்டப்பட்டுழைத்துச் சம்பாதிக்க வேண்டும்; புதுப்புது ஸ்திரீகளுடன் காதல் கொள்ளவேண்டும்; தனது காதல் விகாரத்தைத் தணித்துக்கொள்ள வேண்டும். இவைகளைத் தவிர ஆடவர்களுக்கு வேறு வேலைஇல்லை.

நான் இச்சிறு காலத்தில் 50-க்கு அதிகமான ஸ்திரீகளை விவாகம் செய்தேன். அதிகமாக விவாகம் செய்பவர்களுக்குத் தான் அங்கு அதிக கௌரவம்.

இப்பிரதேசம் உலகில் மிக ரம்மியமான பிரதேசம். இங்கு சென்றவர், அப்புறம் திரும்ப வருவது கஷ்டம் என்பதே எனது அபிப்பிராயம்."

குறிப்பு :—

சோதரீர், ஐரோப்பாவிலுள்ள கிறிஸ்துவ மெஷினரிகள் ஆப்பிரிக்காக் கண்டத்திலுள்ள இப்படிப்பட்ட பிரதேசங்களுக்குச் சென்று, அங்கு ஸ்கூல்களை வைத்து தங்கள் பைபிளை அவர்களுக்குக் கற்பித்து அவர்களைக் கிறிஸ்துவர்களாக்குவதில் அதிகப் பிரயாசை எடுத்து வருகின்றனர். இப்பிரதேசங்களில் அநேக குடும்பத்தினர் நிர்வாணமாகக் கூட இருந்து

வருகின்றனர் என்ற சமாசாரம் பத்திரிகைகள் மூலமாக எட்டுகின்றன. கிறிஸ்துவப் பாதிரிமார்கள் இவர்களுக்கு உடை யணிவதைக் கற்றுக்கொடுத்து, இவர்களை நாகரீகவான்களாக்கி, கிறிஸ்துவ சமூகத்தில் சேர்ப்பதற்காக கோடிக்கணக்கில் பணத்தைச் செலவு செய்கின்றனர். வியாச கர்த்தா தன்னை யூஸுப் பேக் என்பதாகச் சொல்லிக் கொள்கிறார்; பெயரைப் பார்க்கும்போது இவர் முஸ்லிமாக இருக்கவேண்டும் என்று தோன்றுகிறது. ஆனால், அங்கு அவர் சென்று திரும்பி காதல் விளையாட்டுகளைப் பெருமையாகக் கூறி இருக்கிறாரே அன்றி, இஸ்லாம் மதக் கொள்கையைப் பிரசாரம் செய்வதில் முயன்றாரா என்பதைக் குறித்து ஒன்றும் எழுதவில்லை. இதிலிருந்து முஸ்லிம்களுக்கு மத விஷயத்தில் எவ்வளவு அக்கரை இருக்கிறது என்பதை நம்மவர் சிந்தித்துப் பார்க்க வேண்டும். கேவலம் ஸ்தூல சுகத்தை மட்டிலும் பார்த்துக்கொண்டு நம்மவர் ஆத்ம சுகத்தைக் கவனியாதிருந்து வரும் வரை நமது சமூகம் உலகில் தலை தூக்கப் போவதில்லை. இக்காட்டுமிராண்டிகளை இஸ்லாம் மதத்தில் சேர்க்கும் விஷயத்தில் நமது மீரட் மௌலானா அப்துல் அலீம் ஸித்தீக்கி அவர்கள் சிறிது பிரயாசை எடுத்து அதிக வெற்றி பெற்றிருக்கிறார்கள். சில தினங்களுக்கு முன் தாருல்பக்காவை அடைந்த அவரது மூத்த சகோதரர் மௌலானா முக்தார் அஹ்மது சாகிப் அவர்கள் வியாபார அலுவலாக ஆப்பிரிக்காவில் வசித்து வந்தது நமது மௌலானா அவர்களுக்கு உதவியாக இருந்தது. இத்தகைய பிரதேசங்களிலுள்ள காட்டுமிராண்டிகளுக்கு உடை முதலியவைகளைக் காலஞ்சென்ற மௌலானா முக்தார் அஹ்மது சாகிப் தமது சொந்தச் செலவிற் கொடுத்து வந்தார். இத்தகைய மௌலானாக்களுக்கு நம்மவர் தக்க முறையில் சபைகளை ஏற்படுத்தி, வேண்டியளவு உதவி புரிவோமாயின் அங்கெல்லாம் இஸ்லாம் மதம் விரைவிற் பரவும் என்பதை நம்மவர் உணர்வார்களாக. (ப. ர்.)

பொதுவுடமையும் இஸ்லாமும்

இஸ்லாமிய உலகம் இப்பொழுதிருந்துவரும் சிக்கலான நிலைமையில் இஸ்லாமிய சரித்திரத்தில் இதற்குமுன் எப்பொழுதும் இருந்ததில்லை. இஸ்லாமிய போதனைகளை உணராமை எங்கும் பரவி இருக்கிறது. இஸ்லாமிய எண்ணம் பொதுவாக மூளைகளைவிட்டு வெளிப்பட்டு விட்டது. இஸ்லாமிய வாழ்க்கைத் திட்டத்தைப்பற்றிய அலக்ஷிய புத்தியும் பொதுவாக எங்கும் பரவி இருக்கிறது. இஸ்லாம் மதம் என்பது சில ஆசாரங்கள் சேர்ந்த ஒரு திட்டம் என்பதாகவே நடுத்தர வகுப்பைச் சேர்ந்த சாமான்ய முஸ்லிம் ஒருவன் நினைக்கிறான். மூடலானதும் குறிப்பில்லாததுமான கீழ்த்தர மனப்பான்மை, வாழ்க்கையின் முக்கிய பிரச்னைகளுடன் அதற்கு எவ்விதச் சம்பந்தமுமில்லை என்பதாகவும் கருதுகிறான். இஸ்லாம் என்பது நிரந்தரமான தனிப்பட்ட ஒரு நாகரீகத் திட்டம் என்பதையும், வாழ்க்கைக்கு வேண்டிய சகல திட்டங்களும் இதில் அடங்கி இருக்கின்றன வென்பதையும், இதன் எல்லையை விட்டு எவ்வஸ்துவும் புறம்பே இல்லை என்ற உண்மையையும் அவன் கிட்டத்தட்ட மறந்தே விட்டான் என்று கூறவேண்டும்.

ஒரு பக்கல் இஸ்லாம் மதத்தைப்பற்றி இவ்வாறான தப்பெண்ணங் கொண்டிருப்பதுடன், மறுபக்கல் தன்னைக் கேவலமாக உணரும் தோல்வியுற்ற மனப்பான்மையும் இருந்து வருகிறது. இஸ்லாமிய உலகம் தனது ராஜீய வீழ்ச்சிக்குப் பிறகு இவ்வுணர்ச்சியால் பீடிக்கப்பட்டிருக்கிறது. இதன்பலனாக முஸ்லிம்கள் நாடோறும் மேனாட்டின் இஸ்லாமிய மல்லாத நாகரீகத்தை அதிகமாக ஏற்றுக்கொண்டே போகிறார்கள். இவ்விரு காரியங்களும் சேர்ந்து அபிப்பிராய உலகில் ஒரு பெரிய பயங்கரமான சிதறுதலை உண்டாக்கி வைத்திருக்கின்றன. இஸ்லாத்திற்கும் இஸ்லாம் அல்லாததற்கு மிடையில் பாகுபாடு செய்து கொள்ளத் தக்க சக்தி மிக வேகமாக ஒழிந்து கொண்டு வருகிறது, நாம்

ஒவ்வொரு புதுப்புது எண்ணங்களிலும் மிகச் சுலபமாக அடித்துக்கொண்டு போகப்படத் தயாராகி விடுகிறோம். ஆனால், அவ்வெண்ணத்தில் நூதனமிருக்க வேண்டும், அதிலும் மேனாட்டிலிருந்து வரவேண்டும்.

இதற்கு நமது வாலிபர்களிடை பொதுவுடமை பரவி வருவதே போதிய சான்றாகும். இப்புதிய காணிக்கை வந்து சில வருஷங்கள் தானாகின்றன. இதற்குள் நமது படித்த வகுப்பினர் தங்கள் கரங்களில் வாங்கிக்கொள்ள வாரம்பித்து விட்டனர். அதிலும், இவர்களில் ஒரு சாரார் இது தனி மதம் என்பதைத் தெரிந்து கொண்டே இதனை அங்கீகரித்துக்கொண்டிருக்கின்றனர். வேறு சிலரோ இஸ்லாம் மதமும் பொதுவுடமைக் கொள்கையும் வெளித் தோற்றத்தில் முதலாளித்துவத்திற்கும் சாம்ராஜ்யக் கொள்கைக்கும் விரோதமாக இருக்கின்றன; இவ்விரண்டும் ஏழை வகுப்பினரை ஆதரிக்கின்றன; இவ்விரண்டும் மனித சமத்துவத்தைப் போதிக்கின்றன ; ஆதலால், இரண்டும் ஒன்றேதான்; ஆகவே முஸ்லிம் ஏக காலத்தில் முஸ்லிமாகவும், பொதுவுடமைக்காரனாகவும் இருக்க முடியும் என்று கருதுகின்றனர். ஆனால், இவ்விரண்டும் எடுவானிலும் படுவானிலும் இருக்கின்றன என்ற விஷயம் ருஜுப்படுத்தப் போதுமானது. பொதுவுடமை இஸ்லாத்திற்கு நேர்மாறாக வுள்ளது என்பதை ருஜுப்படுத்த அதன் சாமான்னிய போதனையே போதுமானது.

தற்காலமுள்ள பொதுவுடமைக் கொள்கைக்கு தலைமை ஸ்தலம் ரஷியா. அதன் வலை உலகமெங்கும் பரவி யிருக்கிறது. பிரஸ்ஸல்ஸிலுள்ள சங்கம் சென்ற 1848-ம் வருஷத்தில் "பொதுவுடமை அறிக்கை"யை வெளியிட்ட போதே இக் கொள்கை உலகில் பரவ வாரம்பித்தது. இச் சங்கம் ஆரம்பத்தில் "நியாய சபை" என்ற பெயரால் அழைக்கப்பட்டது. அப்புறம் "பொதுவுடமையாளர்கள்" என்ற பெயரை இச் சங்கம் சூட்டிக் கொண்டது. இதனைப் பிரசங்கித்தவர் காரல். இதனை அறிக்கை செய்தவர் இஞ்சிலிஸ். இவ்வறிக்கை தான் பொதுவுடமைக் கொள்கைக்கு அஸ்திவார மாயிற்று.

இதற்கு முன்னரும் கூட ஒருவிதமான பொதுவுடமைக் கொள்கை தோன்றி இருந்ததாக சரித்திரத்தில் காணப்படுகிறது. கி. பி. 6-வது நூற்றாண்டில் ஈரான் தேசத்தைச் சேர்ந்த முஸ்தக் என்பவர் இவ்வியக்கத்தைத் தோற்றுவித்தார். இவரது இயக்கத்திற்கு மூலக் கொள்கைகள் இரண்டு. 1. செல்வம் எல்லா மனிதருக்கும் பொதுவானது. 2. எல்லா ஸ்திரீகளும் எல்லா மனிதர்களுக்கும் பொது. இவ்விரண்டாவது கொள்கை மானக்கேடான செய்கையாகிய வியபிசாரத்தைத் திடீரென ஆற்றுப்பெருக்குபோல் கிளப்பி விட்டது. இதனால் எங்கும் பரபரப்பு ஏற்பட்டு வெகு சீக்கிரத்தில் இவ்வியக்கம் இறந்தது.

இப்புதிய பொது உடமைக் கொள்கை இவ்வுலக ஜீவியத்திற்கு ஒரு திட்டத்தைப்போல் உண்டாகி இருக்கிறது. தனிப்பட்ட மனிதருக்கிருக்கும் சொத்துரிமையை ஒழித்து செல்வத்தையும், அதனை பெருக்கும் முறையையும் எல்லா ஜனங்களுக்கும் சமமாகப் பகிர்ந்து கொடுக்கப்பட வேண்டும் என்பதுதான் இப்புதிய கொள்கையின் நோக்கம். ஆனால் இது வரவர ஜீவனும்சத்தின் எல்லையை விட்டுக் கடந்து விட்டது. ஏனெனில், இச்சீவியத்திலுள்ள எல்லாப் பிரிவுகளும் ஒன்றோடொன்று பிணைக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, ஒருபிரிவின் அஸ்திவாரத்தில் ஒருபுரட்சியை அல்லது மாறுதலை ஏற்படுத்துவது மற்றைய பிரிவுகளையும் பாதிக்காமலிருக்க முடியாது. ஆதலால், பொதுவுடமை இயக்கத்தில் மனித ஜீவியத்திற்கு வேண்டிய பூரணமான ஒரு தத்துவத்தை உண்டு பண்ண வேண்டிய அவசிய மேற்பட்டிருக்கிறது. மேலும், வாழ்க்கையின் பொதுவுடமைத் தத்துவத்தில் மிருகதத்துவத்தைத் தவிர வேறு அஸ்திவாரமில்லாததால், ஜீவியத்திற்காக வகுக்கப்பட்டுள்ள திட்டம் அல்லது தத்துவம் மிருக தத்துவமாகவே தோன்றி இருக்கிறது. இப்படி இருக்கத்தான் செய்யும்.

ஆனால், நாம் இப்பொழுது வெறுத்துக் கொண்டிருக்கிற பொதுவுடமை தத்துவமானது ஏழைகள், தரித்திரர்களது வாழ்க்கைப் பிரசினைகளை தீர்த்து வைப்பதாக மட்டுமில்லை; ஒழுக்கம், நாகரீகம், கூடிவாழல், முதலியவைகளுக்கும் சம்பந்தப்பட்ட ஒரு தனி திட்டமாகவும் இருக்கிறது. ஆகவே, இத்திட்டம் முழுவதையும் அங்கீகரிக்காமல் வாழ்க்கை சம்பந்தமான தத்துவத்தை மட்டிலும் அனுஷ்டிக்க எவராலும் முடியாது.

ஒருபக்கல் மிருக உணர்ச்சியை அடிப்படையாகக் கொண்ட ஜீவியத் திட்டமும், மற்றொரு பக்கல் ஆத்ம உணர்ச்சியை அடிப்படையாகக்

கொண்ட ஏழை அபிமானமும் எவ்வாறு ஒன்று சேரமுடியும்? இவ்விரண்டும் ஒன்று சேருவதற்கில்லை. என்றாலும், ஒன்றுக்கொன்று முரண்பட்ட இவ்விரு உணர்ச்சிகளையும் ஒன்றுசேர்க்க பொதுவுடமைத் தத்துவம் விரும்புவது இவ் விருபதாவது நூற்றாண்டின் நூதனங்களில் ஒன்றாகும்.

அவ்வாறாயின், ஒன்றுக்கொன்று முரண்பட்ட இரு கொள்கைகளையும் ஏன் அவர்கள் ஒன்று சேர்க்க விரும்புகின்றனர் என்ற வினா உண்டாகின்றது. இவ்விரண்டிற்கு மிடையில் உண்மையாகவே இணைப்பு இருக்கிறது என்பதை அவர்கள் கண்டுபிடித்து விட்டார்கள் என்பதற்காகவல்ல. பல நூற்றாண்டுகளாக எந்த வழியின் மூலமாக முன்னேற்ற மேற்பட்டிருக்கிறதோ அதனை அடக்க விரும்புபவர்கள் தொழிலாளர்கள்பால் அனுதாபங் கொண்டு, அவர்களை மிருக உணர்ச்சியுள்ளவர்களாக ஆக்கிவிட்டனர். இஸ்லாம் மதத்தின் செல்வாக்கால் ஐரோப்பாவில் கல்வி, அறிவு ஆகியவைகளின் பிரகாசம் எட்டியபோது கிறிஸ்துவம் அதனை எதிர்த்தது. இவ்வெதிர்ப்பானது அறிவு, விவேகம் ஆகியவைகளைப் பரப்புபவர்களை முதலில் கிறிஸ்துவத்தையும், அப்புறம் மதத்தையும், அப்புறம் மத ஒழுக்கங்களையும் விட்டுத் தூரமாக்கிக்கொண்டே வந்தது. இறுதியாக விஞ்ஞான சாஸ்திரம், தத்துவ சாஸ்திரம் ஆகியவைகள் விருத்தியடைந்ததுடன், ஐரோப்பாவில் மிருக உணர்ச்சியும் வலுத்து விட்டது. தொழிலாளர்கள் ஐரோப்பாவில் விழிப்படைந்தபோது, ஐரோப்பாவின் எண்ணங்களிலும் நாகரீகத்திலும் மிருக உணர்ச்சி அதன் வேர்வரை இறங்கி விட்டது. ஆகவே, உழைப்பாளிகளின் நிலைமையைச் சீர்திருத்துவதற்காக முன்வந்த அறிஞர்களுக்கு இதே மிருகத்துவத்தைத் தவிர அவர்களுக்கு வேறு ஒன்றும் அஸ்திவாரமாகக் கிடைக்கவில்லை. நவீன பொதுவுடமைக்குத் தந்தை என்று சொல்லப்படுகிற கார்ல் மார்க்ஸ் மதத்திற்குக் கடும் பகைவராக இருந்தார். அத்துடன் அவர் யூத வம்சத்தினராகவுமிருந்தார். கிறிஸ்துவ மதத்தின்பால் அவருக்குள்ள வெறுப்பு அவரது மூதாதையரிடமிருந்து வாரிசு பாத்தியமாகக் கிடைத்தது. தவிரவும், கிறிஸ்துவ மதத்திலுள்ள குறைகளும் இவைகளுடன் சேர்ந்துகொண்டன. இதனால் பொது வுடமைக்கொள்கையை ஆரம்பத்திலேயே நாஸ்திகக்கொள்கைமீது மார்க்ஸ் என்பவர் ஏற்படுத்தினார். இவ்வியக்கத்தை ருஷிய ஜார் சக்கிரவர்த்தியின் அரசாங்கமும், கிறிஸ்துவ சர்ச்சும் எதிர்த்து, பொது வுடமையை நசுக்கிவிட முயன்றபோது இவ்வியக்கத்திற்கு மதத்தின் மீது இன்னும் அதிகமான துவேஷம் உண்டாயிற்று. இறுதியாக 1917-ல் ஜார் சக்கிரவர்த்தியின் அரசாங்கம் ஒழிந்து, லெனினின் பொதுவுடமைக் கக்ஷி அதிகாரத்திற்கு வந்தது. அப்பொழுது ஸோவியட் யூனியனின் எல்லைக்குள் வாளாயுத பலத்தால் மதத்தை ஒழித்துவிட நிர்ணயஞ் செய்ததுமல்லாமல், உலகிலுள்ள முதலாளித்துவத்தையும் மதத்தையுங்கூட அக்கக்ஷி எதிர்த்தது. எனவே, பொதுவுடமை இயக்கம் ஆண்டவனுக்கு விரோதியானது, தெய்வ பக்திக்கும் அதற்குமிடையில் சமாதானம் என்பது முடியாத காரியம். இது மிகவும் உறுதியாகத் தெரிந்த விஷயம். இதனை மறுத்துக்கூற எவராலும் முடியாது. இது சம்பந்தமாக இரண்டு அபிப்பிராயம் இல்லை. "காந்தியும் லெனினும்" என்ற புத்தகத்தில் அதன் ஆசிரியர் "பொதுவுடமைக்காரர்களும், அவர்களது தலைவர்களும் எவ்விஷயத்தையும் கடவுளுக்குச் சம்பந்தமில்லாம லாக்குவதில் தங்களது முழுச் சக்தியையும் உபயோகிக்க வேண்டும்; ஏனெனில், பொதுவுடமைத் திட்டத்திற்கு மிகப் பெரிய விரோதி இதே கடவுள் தான் என்பதாக லெனின் பலமுறை தனது பிரசங்கத்திலும் அறிக்கைகளிலும் கூறி இருக்கிறார்" என்பதாக எழுதி இருக்கிறார்.

"மனிதருக்கு மதம் என்பது அபினைப்போலிருக்கிறது; இன்றுவரை எல்லா மதங்களும், மதஸ்தாபனங்களும் நடுத்தர வகுப்பாரின் பிற்போக்குக்கு ஆயுதமாகவும், உழைப்பாளிகளை ஏமாற்றுங் கருவியாகவும் இருந்து வந்திருக்கிறது என்பது மார்க்ஸின் கருத்து" என்பதாக லெனின் கூறிய வார்த்தைகள் "தொழிலாளியின் மாசிகை" 1926-வது டிசம்பர் மாதப் பத்திரிகையில் வெளியாகி இருக்கிறது.

"இவ்வுண்மையை (அதாவது மனிதருக்கு மதம் அபினைப்போலிருக்கிறது என்று மார்க்ஸ் கூறி இருப்பதை, எவ்வளவிற் கதிகமாகப் பொதுஜனங்களிடம் பரப்பமுடியுமோ அவ்வளவுக்கும் முயற்சி எடுத்துக்கொள்வது பொதுவுடமைக் கட்சியின் கடமையாகும். மதமும் பொதுவுடமையும் ஒன்றுக்கொன்று முரண்பட்டவைகளாகும். அபிப்பிராயத்திலும் சரி

காரியத்திலும் சரி இரண்டும் நேர் விரோதமானவை. எந்தப் பொதுவுடமைக்காரரும் மதக் கொள்கையையும் அங்கீகரித்து நடப்பாராயின், அவருக்கு பொதுவுடமையில் எவ்விதச் சம்பந்தமும் உண்மையில் கிடையாது" என்பதாக "எ. பி. ஸி. ஆப் கம்யூனிஸம்" என்ற புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

ருசியாவை மிகப் பலமாக ஆதரிப்பவரான புரொபஸர் ஷேக்கர் தமது "சோவியத்திற்குக் கீழிலுள்ள மதம்" என்ற புத்தகத்தில் "பொது வுடமைககாரர் நாஸ்தீகர்களாக இருப்பதில் மட்டும் திருப்தி யடைவதில்லை; நாஸ்தீகத்திற்காக உழைப்பவராகவும் இருக்க விரும்புகின்றனர். அவர்களது கக்ஷியைச் சேர்ந்தவர் நாஸ்தீகர் என்பதை ஒப்புக்கொள்வதுமட்டிலும் போதாது; பொதுவுடமை யல்லாதவர்களிடம் நாஸ்தீகத்தை மிகப் பலமாகவும் ஊக்கத்துடனும் பிரசாரம் செய்யவேண்டும் என்றும், பிறக்கும் குழந்தைகள் ஒவ்வொன்றும் நாஸ்தீகனாகவே தோன்றும்படி வாலிபர்களது கல்வித் திட்டத்தை அமைக்க வேண்டும் என்றும் விரும்புகின்றனர். இந்த உலகைத் தவிர இனி வரக்கூடிய மற்றொரு ஜீவியம் உண்டு என்பது அவர்களது கொள்கையல்ல. ஆகவே, அவர்கள் இவ்வுலகத்தைய ஜீவியத்தை எவ்வளவு அதிகமாக ஆக்கமுடியுமோ அவ்வளவுக்கதிகமாக இன்பகரமானதாக்க முயலுகின்றனர். பொதுவுடமை பார்ட்டிக்குள் கடவுளை மறுப்பவர்கள் என்று ஒரு சங்கம் பிரத்தியேகமாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இச்சங்கத்தின் ஒரே நோக்கம் கடவுள் இல்லை என்று பிரசாரம் செய்வது தான். இச்சங்கத்திற்கு கம்யூனிஸ்ட் பார்ட்டியின் பூரண ஆதரவு இருக்கிறது. உண்மையில் இச்சங்கம் அக்கக்ஷியின் பல பிரிவுகளில் ஒன்றாகவே இருக்கிறது?" என்பதாகக் கூறி இருக்கிறார்.

பொதுவுடமைக்காரர்களது பிரசாரத்தின் பலனாக பொது வுடமையில் ஒழுக்கத்தின் அஸ்திவாரங்கள் இடித்துத்தள்ளப் பட்டு விட்டன. இப்பொதுவுடமைக் கொள்கைப்படி "மனிதன் பூமியில் ஆண்டவனின் பிரதிநிதியாக இல்லை, மிருகங்களின் வகைகளில் மனிதனும் ஒருவகையினன்; ஆனால், மிருகத்திற்கும் மனிதனுக்குமிடையில் சொற்ப வித்தியாசம் மாத்திரமே இருக்கின்றன; மனிதனிடம் அறியும் சக்தி அதிகமிருக்கிறது; ஆகவே, மிருக நோக்கங்களை அதிகப் பரிபூரணமாகப் பூர்த்தி செய்வதற்கு இச்சக்தியை உபயோகிக்கவேண்டும்" என்றேற் படுகிறது. ஆகவே, இக்கூட்டத்தாரால் ஏழைகளுக் கேற்பட்டிருக்கும் லாபமானது அவர்களுக் கேற்பட்டிருக்கும் ஒழுக்க நஷ்டத்திற்கு முன் ஒன்றுமே இல்லையென்று கூறவேண்டும். வயிற்றுக்குக் கஞ்சியும் மானத்தை மறைக்கத் துணியும் கொடுப்பதற்குப் பகரமாக மனிதனை மனிதனாக ஆக்கக்கூடிய அரும் பொருளை அபகரித்து விட்டனர்.

அல்லாஹ்வையும், மறு உலக வாழ்க்கையையும் பற்றிய நம்பிக்கை ஒழிந்து, இயற்கைச் சட்டத்திற்கு மேம்பட்டுள்ள ஒழுக்கச்சட்டத்திற்கு அதிகாரமும் இல்லாமலாகி, மிருகத்துவத்தை, மிருக உணர்ச்சியைப் பெருக்குவதே மனிதனின் கடைசி நோக்கமாக இருந்தால் சத்தியம், நேர்மை, அந்தரங்க சுத்தி, உண்மை, நம்பிக்கை மோசம் செய்யாமை, கற்பு, பிறர் உரிமையை மதித்தல் முதலிய நற்குண நல்லொழுக்க சம்பந்தமாக மதம் ஏற்படுத்தியுள்ள திட்டம் தானாக ஒழிந்து விடுகிறது. தகப்பன் மகள், தாய் மகன், சகோதரன் சகோதரி ஆகியவர்களுக்கிடையிலுள்ள பரிசுத்தமான சம்பந்தங்கள் கூட இனி இல்லாமலாகிவிடும் என்றுங் கூட கூறலாம். பொதுவுடையில் ஸ்திரீ புருஷருக்கிடையிலுள்ள சம்பந்தம் விவாகபந்தத்தை விட்டு நீக்கப்பட்டு விட்டது. விவாகச் சடங்குக்கு எவ்வித முக்கியத்துவமும் பரிசுத்தத் தன்மையும் அங்கில்லை. சுயேச்சையான காதல் சம்பந்தங்களை அனுமதித்தது மட்டுமில்லாமல், அதனைவிருபத்தக்கதாகவும் மதிக்கப்படுகிறது. ஒரு ஆடவன் ஒரு ஸ்திரீயைத் தனது மனைவி என்று நிர்ணயித்து, அவளைத் தனக்காக மட்டிலும் சொந்தமாக்கிக் கொள்ளும் எண்ணத்தையே மூளையிலிருந்து அகற்ற முயற்சி செய்யப்படுகிறது. மனிதனது தேவைகளுக்குள்ள எல்லாக் காரியங்களும் அரசாங்கத்திற்குச் சொந்தமாக்கப்பட்டு, எல்லா மனிதர்களுக்கும் பொதுவாக்கப்பட்டிருப்பதுபோல, காம உணர்ச்சியை நிறைவேற்றிக் கொள்ளும் முறையையுங் கூட அரசாங்கத்திற்குரியதாக்க முயற்சிக்கின்றனர். இதன் பிரகாரம் ஒருவனது மனைவி எல்லாருக்கும் மனைவியாகவும், ஒருத்தியின் புருஷன் எல்லாருக்கும் புருஷனாகவும் ஏற்படவேண்டியதிருக்கிறது. எவருக்கும் எவளும் சொந்தமாக்கப்பட முடியாது. இவ்வாறான சுதந்திர சம்பந்தத்தால் பிறக்கும் குழந்தைகள் சர்க்காருக்குச் சொந்தமாகின்றன. ஆகவே, இக்குழந்

தைகளை வளர்க்கும் பொறுப்பு சர்க்காரைச் சாருவதால், பிள்ளைப் பேற்றைக் குறைக்கவும் தடுக்கவும் வேண்டிய முறைகளைச் செய்ய சர்க்காருக்கு அதிகாரமேற்படுகிறது. இக் கருத்தின்படியே கருப்பத்தைக்கரைத்தல்,கருத்தரிக்காமல் தடுத்தல் ஆகிய ஏற்பாடுகள் அரசாங்கத்தின் சார்பாக உத்தியோக முறையில் செய்யப்படுகின்றன. இவை தான் பொதுவுடமைக் கொள்கையுள்ள சர்க்காரின் கீழ் ஏற்படும் சமூகத்தின் நிலை.

ஒரு ரஷ்ய நாவலாசிரியர் தனது நாவல் ஒன்றில் "மதுபான மருந்தல், வியபிசாரம் செய்தல் ஆகியவைகள் கேவலமான செய்கைகளல்ல; பாபம் என்று ஒன்றில்லை; காதல் கொள்ளல், நன்ருகக் குடித்தல், ஸ்திரீக்குப்பின் செல்லல் ஆகியவைகள் ஆண்பிள்ளைத் தனத்திற்குரிய செய்கைகளாகும்; புருஷ லக்ஷணங்களாகும்; இவை இயற்கையான உணர்ச்சிகள்; இயற்கையாக வுள்ளவைகள் பாபமாக இருக்கமுடியாது" என்பதாகத் தமது அபிப்பிராயத்தை வெளியிட்டிருக்கிறார். பல்லாயிரக் கணக்கான வருஷங்களாக மனித ஒழுக்கத்திற்கிருந்து வந்த அஸ்திவாரங்களை பொதுவுடமை தகர்த்துவிட்டது. இதற்குப் பதிலாக, அவர்கள் ஒரு திட்டத்தை வகுத்திருக்கிறார்கள். அத்திட்டத்தின்படி பொதுவுடமைப் பிரயத்தனத்திற்கு உதவியாகவுள்ள காரியங்க ளெல்லாம் நல்லவை; அதற்குப் பாதகமாக வுள்ளவை தீயவைகளாகும்.

"வாழ்க்கை,கூடிவாழுல்ஆகியவைகளில் மதத்திற்கிருக்கும் செல்வாக்கை வேருடன் பிடுங்கிவிட முயற்சிப்பதன் மூலம் மதத்துடன் போர் தொடுக்க வேண்டும்" என்று லெனின் கூறி இருக்கிறார். மதத்தின் செல்வாக்கை ஒடுக்குவதற்கு பொதுவுடமைக் காரர்கள் இவ்விதமாக முயலுகின்றனர். "பொதுவுடமையினல் ஏற்படும் பயன்களுக்கும் பொதுஜன நன்மைக்கும் எவ்விதச் சம்பந்தமுமில்லை; உலகிலேற்படும் ரத்தப் பழிகளுக்கும் அமைதியின்மைக்கும் மதம் தான் முக்கிய காரணம்; மதத்தை அழித்துப் பொதுவுடமையை நிலைநிறுத்தாத வரை உலகில் சமாதானம் ஏற்படப் போவதில்லை" என்று அவர்கள் மிகப் பலமாகப் கூச்சலிடுகின்றனர். ஆனல், உண்மையில் அமைதியின்மை, கலகம் ஆகியவைகளைப் பரவச்செய்யும் ஸ்தாபனங்களில் பொதுவுடமை தான் முதல் நம்பரில் இருக்கிறது. ஏனெனில், இந்த ஸ்தாபனம் பொருமை, துவேஷம் ஆகியவைகளையே அஸ்திவாரமாகக் கொண்டு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஆனல், மதமோ அவ்வாறன்று. மனிதத்தத்துவத்தை மதித்தல், கடவுள் பக்தி ஆகியவைகளை அஸ்திவாரமாகக் கொண்டது. அமைதியை நிலை நிறுத்துவதற்கும், மனித உரிமையைப் பாதுகாக்கவும் மதம் பெரும் பலமாக இருக்கிறது. ஆனல், பொதுவுடமைக்காரர்கள் சென்ற 20 வருஷ காலத்தில் சிந்தியுள்ள ரத்தங்களையும், புரிந்துள்ள கலகங்களையும் மதம் பல நூற்ருண்டுகளில் கூடச் செய்ததில்லை. இவ்வித நிலைமையில் அவர்கள், கலகத்திற்கும் ரத்தஞ் சிந்துதலுக்கும் மதம் தான் காரணம் என்று கூறுவதைப் பார்த்தால் அவர்களது துணிகரமான பேச்சுக்கு அவர்களைப்பாராட்டாமலிருக்க முடியவில்லை. ருசியாவில் சென்ற 30 வருஷ காலமாக வாழ்ந்த ஒருவர் சோவியத் சர்க்கார் செய்த உயிர்ச் சேதத்தைப்பற்றிக் கொடுத்துள்ள புள்ளி விபரங்கள் வருமாறு:—

பிஷப் மார்க்கத் தலைவர்கள்	31
மாதாகோவில் ஊழியர்கள்	1560
ஜட்ஜு, வக்கீல், மாஜிஸ்டிரேட்	34585
மாணவர்கள், உபாத்தியாயர்கள்	16367
சிவில் உத்தியோகஸ்தர்கள்	79000
உயர்குடும்பத்து ஜனங்கள்	65890
ராணுவ உத்தியோகஸ்தர்கள்	56340
தொழிலாளர், கூலிக்காரர்கள்	196000
சிப்பாய், மாலுமிகள்	268000
விவசாயி	890000

இவை 1934 முடிய நடைபெற்ற உயிர்ச் சேதம். இதற்கப்புறம் இன்று வரை இப்புண்ணியவான்கள் செய்துள்ளவைகளை வாசகர்கள் யூகித்துக்கொள்வார்களாக.

பொதுவுடமையின் தோல்வி

ருசியாவில் பொதுவுடமை இயக்கம் மிக விசாலமாகவும் கண்டிப்பாகவும் கட்டுப்பாடாகவும் பரீக்ஷித்துப் பார்க்கப்பட்டிருக்கிறது. பொதுவுடமைக் கொள்கை நல்லதா கெட்டதா என்பதற்கு சோவியத் சர்க்கார் செய்துள்ள காரியங்களை அளவையாக நிர்ணயிக்கும் பக்ஷத்தில், பொதுவுடமை இயக்கம் தோல்வியுற்றது என்று நாம் தைரியமாகக் கூறமுடியும். தோல்வியும்கூட படுதோல்வி. ரஷ்ய சோவியத் சர்க்காரின் ராணுவ பலத்தை தூரத்திலிருந்து பார்ப்பதை பொதுவுடமையின் வெற்றிக்கு அடையாளமாகக் கொள்வது தவறு. ராணுவ

பலம் அதிகமாக இருப்பது ஒரு சமூகம் முன்னுக்கு வந்து விட்டதற்கு அடையாளமாகக் கொள்ள முடியாது. இது நல்ல அடையாளமுமல்ல. மனித அந்தஸ்தை உயர்த்துவதில் பொதுவுடமை எவ்வளவு தூரம் வெற்றியடைந்திருக்கிறதுஎன்பதையே நாம் பார்க்கவேண்டும். தொழிலாளிகளின் அரசாங்கத்தை ஏழைகளின் நன்மைக்காகவே ஸ்தாபித்திருக்கிறதா? நிரந்தரமான அஸ்திவாரங்களின்மீது நீதியான சமூக திட்டத்தை ஏற்படுத்தி இருக்கிறதா? பொது ஜனங்களது கஷ்டங்களை நிவர்த்திசெய்திருக்கிறதா? என்ற விஷயங்களை நாம் கவனிக்கவேண்டும். வாயளவில் எவ்வளவு வேண்டுமானாலும் கூறலாம். ஆனால், உண்மை சத்தியம் ஆகியவைகளைப் பொறுத்த வரையில் மேலே கண்ட வினாக்களுக்கு "ஆம்" என்ற பதில் சொல்ல முடியாது.

1917-ல் ஜார் சக்கிரவர்த்தியின் அரசாங்கம் ஒழிந்தபோது தொழிலாளரைக் கொண்ட ஒரு கான்ஸ்டிடியூஷனல் அஸம்பிளி ஏற்படுத்தப்பட்டது. அதற்கு லெனின் தலைவரானார். ஆனால், 1918 ஜனவரி மாதம் 7-ந் தேதி நள்ளிரவில் லெனின் அந்த அஸம்பிளியைத் திடீரெனக் கலைத்துவிட்டு தனக்கு சர்வாதிகாரப் பதவியை ஏற்படுத்திக்கொண்டார். சர்வாதிகாரியாகவே 1924 வரை அதாவது சாகும் வரை இருந்து வந்தார். அவரது ஸ்தானத்தில் ஸ்டாலின் வந்தார். இன்று வரை அவர்தான் சர்வாதிகாரியாக இருந்து வருகிறார். இதனைக் குறித்து ஒரு பிரபல ஆசிரியர், போல் ஷவிக்கப் தனது சர்வாதிகாரப்பதவியுடன் ஒரு பெரிய கொடுங் கோன்மையாகவே இருக்கிறது என்பதிற் சந்தேகமில்லை; இது பொழுதுள்ள கொடுங்கோன்மை இதற்கு முன்னுள்ள கொடுங்கோன்மையைப் பார்க்கினும் எவ்வளவோ அதிகமாக இருக்கிறது" என்று கூறியுள்ளார். "தெய்வபக்தி, ஆஸ்திகம்என்பது ஜனங்களை நிர்ப்பந்தித்தல், அடக்கி ஒடுக்குதல் ஆகியவைகளுக்கு முதல் அஸ்திவாரமாக இருக்கிறது" என்று குற்றஞ்சாட்டி அதனை ஒழிக்க விரும்புகிறவர்கள் கடவுளின் ஸ்தானத்தில் வந்தமர்ந்து கொண்டு, கொஞ்சமும் மனசாக்ஷியை கவனியாமல் மிகவும் மோசமான அடக்கு முறையையும் நிர்பந்தத்தையும் கையாளுவது ஆச்சரியமல்லவா?

இஸ்லாம் மதம், கிருஸ்துவ மதம் போதிக்கிற ஒழுக்க முறைகளுக்கு பதிலாக பொதுவுடமைக் கொள்கை அங்கு அமுல் நடத்தப்படுகிறது. உதாரணமாக, "சுயேச்சையான காதல்" சகலவிதமான மிருக இச்சைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு வரையரையற்ற லைசன்ஸை அளித்திருக்கிறது. மலிவான விவாகம், இதனைப் பார்க்கினும் மலிவான விவாகப்பிரிவினை எல்லாம் ஏற்பட்டிருக்கின்றன. இதுபோலவே இதர விஷயங்களுமிருக்கின்றன. இவைகளின் பயன்யாதாம் எனின்? ருஷியா தேசம் மிருகங்களின் நாடாகிவிட்டது; சர்வமானிப சுதந்தரம் தவிர்க்க முடியாத கெடுதல்களுடன் அங்கு பரவி இருக்கிறது; இதனால் பொதுவுடமை சமூகத்தை ஆபத்தில் ஆழ்த்திவிட்டது. இவ்விதமான சட்டங்களின் பயனாக இதுவரை ருஷியாவில் ஏறக்குறைய வாரிசில்லாத, தகப்பனை அறியாத 50 லக்ஷம் குழந்தைகள் பிறந்திருக்கின்றன. இவர்களுக்கு யாரும் போஷகர்களில்லை. இவர்களைப் போஷிப்பதற்கு தக்க ஏற்பாடும் இல்லை. அதிலும், சொற்ப வயதுப் பெண்கள்—இவர்களில் பன்னிரண்டு வயதுள்ளவர்களுமிருக்கிறார்கள்—ஒரு வேளை பசிப்பிணியை நீக்கிக் கொள்வதற்காக தங்களது உடலத்தை இறக்கமற்ற, பொதுவுடமை வாலிபர்களுக்குப் பெண்டாள ஒப்புவிக்கவேண்டியதாக இருக்கிறது. அரசாங்கமும் இதனை பிரைவேட் வியாபாரமாகப் பாவித்து, இதனை அனுமதித்து, தனக்குச் சேரவேண்டிய வரியை வசூல் செய்து கொள்கிறது.

அமெரிக்காவிலுள்ள பிரபல ஆசிரியர் ஒருவர் தொழிலாளர்களின் மாபெரும் தலைவராகவும் இருக்கிறார். அவர்தனது வாணாள் முழுவதிலும் தொழிலாளருக்காக ஊழியம் செய்தவர். அவர் சதியாலோசனை செய்ததாக அவர்மீது அமெரிக்காவில் வழக்குத் தொடரப்பட்டது. ஆகவே, அவர் தனது உயிரைக் காப்பாற்றிக் கொள்ள ருஷியாவிற்கு தப்பி ஓடி வந்து விட்டார். இவர் பொதுவுடமைக் கொள்கையில் ஆழ்ந்த பக்தியுள்ளவர். ஆனால், அவர் தனக்கு விருப்பமான பொதுவுடமைக்கொள்கையை அமுல்நடத்தும் நாட்டில் வந்து, நேருக்கு நேராக விஷயங்களை உணர்ந்தபிறகு, அவர் மனந்தளர்ந்து, ருஷியா தேசத்தின்பால் வெறுப்படைந்து மறுபடியும் அமெரிக்கா சென்று, தனக்கு விதிக்கப்பட்ட ஆயுள் காலதண்டனையை அனுபவிக்க முன்வந்து, ருஷியாவில் நடைபெறும் கண்ணராவியைப் பார்க்காமலிருக்க அமெரிக்காவிற்குத்

திரும்பியே வந்து விட்டார். இதனைக்குறித்து அவர் தமது புத்தகத்தில் விபரமாக எழுதியுள்ளார்.

இஸ்லாமிய உலமாக்களிடம் ஒரு வேண்டுகோள்

மேனாட்டினரின் ராஜீய அதிகாரத்தின்காரணமாக இஸ்லாமிய நாடுகளிலும்கூட ஆத்ம உணர்ச்சி மங்கி வருகிறது. மதத்தின் பிடியானது உணர முடியாத வழியின் மூலமாக மிகத் துரிதத்தில் பலஹீனமடைந்து வருகிறது. இக்காலத்தில் பொதுவுடமை தான் மிருக உணர்ச்சிக்கு ஆக்கம் அளிப்பதின் முதல் ஆணியிலிருக்கிறது. மேனாடு ஏழைகளுக்கும் வறிஞர்களுக்கும் அனுதாபம் காட்டுவதாகக் கூறிக்கொண்டு, அதன் மறைவில் மிருக உணர்ச்சியை, பிரகிருதுவக் கொள்கையைப் பரப்பிவருகிறது. பொது வுடமையையும் அதன் மிருகக்கொள்கையையும் வெற்றிகரமாக எதிர்க்கக்கூடியமதம் இஸ்லாம் மாத்திரம்தான். எனவே, இஸ்லாம்மதம் அநீதியான முதலாளித்துவத்தையும் அங்கீகரிப்பதில்லை; அதனை எதிர்ப்பதுடன் அக்கிரமிக்கப்பட்டவர்கள், ஏழைகள் முதலியவர்களையும் ஆதரிக்கிறது. தவிரவும், தனக்கென ஒரு வாழ்க்கைத் திட்டத்தையும் ஏற்படுத்தி இருக்கிறது. அல்லாமலும், மனிதாத்மாவிற்கு உயர்தரமான எல்லா ஊக்கங்களும் உண்டாகுவதற்காக அறிவை மட்டிலும் அஸ்திவாரமாக வைத்து பரிபூரணத்தை அடைவதற்கான வழிகளையும் ஏற்படுத்தி இருக்கிறது. ஆனால் இஸ்லாம் மதத்தின் வாழ்க்கைத் திட்டத்தை அமல் நடத்தாதவரையில், இன்னும் இஸ்லாமிய நாகரீகத்தைக் காரிய உலகில் நிலை நிறுத்தாத வரையில், இஸ்லாத்தின் கல்வியை உணர்ந்தவர்கள் நவ உலகின் பிரசினைகளைப் பூரணமாகக் கவனியாதவரையில், மனித உலகின் தலைமை பதவியை நிர்வகிக்க எழுந்திருக்காதவரையில் இஸ்லாம் மதம் இந்த நாஸ்தீகச் செல்வாக்கை எதிர்ப்பதற்குச் சக்தியற்றதாகவே இருக்கும்.

வாலிப முஸ்லிம்களுக்கு!

இச்சிறு வியாசத்தில் பொதுவுடமை என்பதைப்பற்றிக் கூறியுள்ள விஷயங்களிலிருந்து இஸ்லாமும்பொதுவுடமையும் ஓரிடத்தில் ஒன்றுசேரமுடியாது என்பது தெளிவாக்கப்பட்டிருக்கிறது. கம்யூனிஸத்தைப் பின்பற்றும் விஷயத்தில் பிடிவாதமாக இருப்பவர்களுக்கு ஒரே ஒரு வழி திறந்திருக்கிறது. அதாவது, அவர்கள் இஸ்லாம் மதத்தை விட்டுவிடவேண்டும்; தன்னுடைய இஸ்லாமியப் பெயரை மாற்றிக்கொள்ளவேண்டும்என்பதே. பொதுவுடமை போதிக்கும் ஒழுக்கத்தில் இவ்வாறு செய்யாமலிருப்பது அனுமதிக்கப்பட் டிருந்தாலும் இருக்கலாம். ஆனால் மனித ஒழுக்கத்தில் தன்னுடைய இஸ்லாமியப் பெயர்களின் திரைமறைவில் இஸ்லாத்தின் வேரை அறுக்க முயலுவது மானங்கெட்ட செய்கையாகும். முஸ்லிம்கள் இந்த பொதுவுடமை நாஸ்தீகர்களை, மார்க்கப் புரட்டர்களைத் தங்கள் கூட்டத்தி லிருக்க விடாமலிருப்பார்களாக. இந்த மார்க்கப் புரட்டர்கள் பகிரங்கமாக தங்களது மதமாற்றத்தை அறிவித்து இஸ்லாமிய சமூகத்திலிருந்து வெளியேறி விடும்படி அவர்களை நிர்ப்பந்திப்பார்களாக.

குறிப்பு:—இக்காலத்திலுள்ள காங்கிரஸ் தலைவர்கள் தேச விடுதலைக்குப் போராடுவதாக வெளியிற் சொல்லிக்கொண்டு, ரஷ்யாவின் பொதுவுடமைக் கொள்கையை இந்தியரில் புகுத்தி வருகின்றனர். காங்கிரஸுக்குத் தலைமை வகித்தவர்களில் பண்டித ஜவ்ஹர்லால் போன்றவர்கள் பகிரங்கமாகவே ருஷியாவின் பொதுவுடமைக்கொள்கைகளைச் சிலாகித்தும், அக்கொள்கையுள்ளவர்களுக்கு ஆதரவு புரிந்தும் வருகின்றனர். தற்போதுள்ள காங்கிரஸ் தலைவரும்கூட அந்த அபிமானமுள்ளவராகவே காணப்படுகிறார். ஆனால், இந்தியரின் எதிர்ப்புக்கு பயந்து கொண்டு இந்தியாவிற்கேற்ற பொதுவுடமை, சமதர்மம் இந்தியாவில் புகுத்தப்படவேண்டும் என்று வெளிக்குச் சொல்லிக்கொண்டு, அந்தரங்கத்தில் மத உணர்ச்சியை, மத பக்தியை இந்தியரைவிட்டு அடியுடன் ஒடுக்கிவிடவே முயலுகின்றனர். காங்கிரஸ்காரர்கள் ஏற்படுத்தி இருக்கிற வார்தா கல்வித் திட்டத்தில் மதத் தலைவர்களைப் பற்றியோ, மதத்தைப் பற்றியோ போதனை கிடையாது. இதனைப் பற்றிச் சிலர் குறைகூறியதற்கு காந்தியார் கூறிய சமாதானத்தில், வேண்டுமென்றே அந்தப் பேச்சைப் புகுத்தாமலிருந்ததாகவும், மதப் படிப்பினால்தான் பிள்ளைகளிடம் துவேஷ உணர்ச்சி பரவி, வகுப்புக் கலகம் உண்டாகின்றது; ஆதலால், வேண்டுமாயின் மதக்கல்வியை தனியாக கற்றுக்கொள்ள வேண்டும் என்று கூறியுள்ளார். ஹிந்து முஸ்லிம் வகுப்புச் சம

ரசம் ஏற்பட வேண்டும், காங்கிரஸும் லீகும் உடன் படிக்கை செய்துகொள்ள வேண்டும் என்று கூறினுல் வகுப்புணர்ச்சியை அடிப் படையாகக் கொண்ட ஸ்தாபனத்துடன் சமா தானம் செய்யக்கூடாது என்று கருது கின்றனர். முதலில் இந்தியன், அப்புறம் தான் முஸ்லிம் என்ற கொள்கை இந்திய முஸ் லிம்களிடம் உண்டாகாதவரை அவர்கள் தேசாபிமானமற்றவர்கள் என்று குறைகூறி வருகின்றனர். அதாவது, இக்கூட்டத்தினர் நம்மைதேசாபிமானிகள் என்று ஒப்புக்கொள்வ தற்காக மதத்திற்கு முஸ்லிம்கள் முக்கியத்து வம் அளிக்கக்கூடாதென்று சொல்கிறுர்கள். தவி ரவும், காங்கிரஸ் வாதிகள் தலையெடுத்த பிறகு கலப்பு மணமும் அதிகமாகி விட்டது. ஒரு வகுப்பிலுள்ள ஸ்திரீயை மற்ருெரு வகுப்பி லுள்ளவர் மணம் புரிந்து கொள்கின்றுர். இதற்கு காதல் சுதந்திரம் என்பதாகப் பெயர் வைத்துக்கொண்டிருக்கிறுர்கள். இவ்விதமான நடத்தைகளால் இந்தியாவில் இஸ்லாமுக்கு மட்டுமில்லாமல் ஏனைய மதங்களுக்கும்கூட ஆபத்துதான் ஏற்பட்டு வருகிறது. ஆனுல், இஸ்லாம் மதச் சட்டங்கள் கண்டிப்பாக இருப் பது போல் ஏனைய மதங்களைச் சேர்ந்த வர்கள் அவ்வளவு கண்டிப்பாக இல்லாத தால், இவ்வியக்கங்களால் அதிகம் துய ரடைபவர்கள் முஸ்லிம்களேயாவர். நம்மவர் கள் தங்கள் இளைஞர்களை இந்த வியாதியை விட்டுக் காப்பாற்ற முன் வருவார்களாக.

(ப-ர்)

மேனுட்டு யாத்திரையின் பயன்

ஜுபர் பி.ஏ. பரீக்ஷையிற் வெற்றிபெற்றது முதல் சதாவும் லண்டனின் விருப் பம், மேனுட்டு ஞாபகம், ஐரோப்பா செல்ல வேண்டுமென்ற பிடிவாதம் அவனது ஹிருதயத் தில் குடிகொண்டு அவனை ஆட்டிக்கொண்டிருந் தது. ஜுபரின் தந்தையாகிய ஷேக் அதாவுல் ஹக் சாஹிபோ முழுதும் கீழ்நாட்டுக் கொள் கையை அனுஷ்டித்து நடக்கும் ஓர் முஸ்லி மாகையால், கிறிஸ்துவமதம் தழைத்தோங்கி மக்களை நஸரானியத்தின்பக்கல் இழுக்கும் சக்தி மிதமிஞ்சி தாண்டவமாடும் பூமிக்கு தன் குமா ரனை அனுப்பிவைக்க சற்றும் விரும்பினுரில்லை. இதுவன்றி ஜுபரின் தந்தைக்கு இவன் ஏக புத் திரன். அவனது தாய் 3 மாதத்தில் இவனைவிட் டுப் பிரிந்து விட்டமுதல் ஷேக் சாஹிப் நமது ஜுபரை வளர்த்து பராமரிப்பதில் தாய்தந்தை இருவர்களின் கடமைகளையும் நிறைவேற்ற வேண்டிய சந்தர்ப்பமேற்பட்டிருந்தது. இவ்வா று அருமையோடு வளர்த்துவந்த குமாரரைத் தனியாக எவ்வாறு வெளி தேசத்திற் கனுப்புவ தென்னும் எண்ணம் ஷேக் சாஹிபின் மனதில் தோன்றும் போதெல்லாம் அவருக்கு பெரும் திகிலை உண்டுபண்ணிக்கொண்டிருந்தது. வரு ஷக்கணக்கில் தன் நெஞ்சிலே தூங்கவைத்துக் கொண்டிருந்த, இன்னும் அவனுடைய சௌகரி யத்திற்காகத் தமது சுகங்களையெல்லாம் விட் டொழித்த புத்திரனைவிட்டுப் பிரிவதற்கு எவ் வாறு மனந் துணியும்? தந்தையர்கட்கு தங்க ளது அருமைக்குமாரர்கள்மீது விருப்பமிருக்கத் தான் செய்யும். என்ருலும், ஷேக்சாஹிபுக்கு நமது ஜுபர் மீது அன்புமட்டுமில்லை, அவன் இவர் உயிர் வாழ்வதற்குள்ள உயிர் நாடியதாக வும், முழு ஆதரவாகவும் இருந்ததால், எந்த வகையிலும் அவனை வெளியில் அனுப்பி விட்டுத் தான் உயிர்வாழ விருப்பம் கொண்டாரில்லை.

ஜுபருக்கோ லண்டன் செல்ல வேண்டு மென்ற எண்ணம் மூளைக்கேறி தலை கிறுகிறுப் பெடுக்க ஆரம்பித்தது. இந்நிலைமையில் அவ னுக்கு 2, 3 தகுந்த உத்தியோகங்களும் கிடைப் பதற்கான ஹேதுவேற்பட்டது. என்ருலும், அவன் இவைகளையெல்லாம் உதறித் தள்ளி விட்டு ஐரோப்பாப் பிரயாணத்தி லேற்படும் ஆனந்தம் சுகண்டிகளை தமது வாழ்க்கையின் பிர தான நோக்கங்களாகக்கொள்ள ஆரம்பித்தான். அவன் பத்திரிகைகளில் ஐரோப்பாவின் ஒவ் வொரு செய்தி, பார்ட்டிகளின் விபரங்களைப் படித்துவிட்டு ஆஹ்! ஆஹ்! என பெருமூச்சு விட்டுக்கொண்டே இருந்தான். நமது ஷெய்கு சாஹிபோ சகல விஷயங்களிலும் தமது சிறிய தந்தையின் குமாரரிடமும், ஜுபரின் இளைய

மாமனிடமும் ஆலோசனை கேழ்ப்பது வழக்கம். இவ்விருவர்களின் ஆலோசனையன்றி ஓர் அற்ப காரியங் கூட செய்வது கிடையாது. நமது ஜுபரோ அவ்விருவர்களையும் தன் கை வசப்படுத்திக் கொண்டு விட்டதால் அவ்விருவரும் சமாதான வார்த்தைகளை ஷேக்ஜீக்கு ஹிதமாகச்சொல்லி வருவதினிடையே, நமது ஜுபர் இந்தியா திரும்பி வந்தவுடன் தக்க உத்தியோகம் கிடைத்து விடுமென்றும், அரசாங்கம் தக்க மரியாதை கொடுக்குமென்றும், வருடம் ஒரு முறை அவன் ஊர்வந்து தங்களைப் பார்த்துச் செல்வானென்றும் அறிவித்து அவருடைய மனதைத் திருப்பி விட்டனர். ஷேக்ஜீ தனது குமாரர் ஐரோப்பா செல்வதற்கு ஒருவாறு சம்மதப்பட்டவர் போல் காணப்பட்டாராயினும் அவருடைய மனதில் நமது ஜுபர் மீது ஏற்பட்டிருந்த அளவற்ற பிரீதி, அன்பானது அவனை விட்டுப்பிரிவதற்கு சற்றும்இடங் கொடுக்காதே இருந்து வந்தது. இந்நிலைமையில் நமது ஜுபர் ஐரோப்பா யாத்திரிகைக்கு முன் வந்து பம்பாயில் கப்பல் புறப்படும்போது ஷேக் சாஹிபுக்கு தன் நெஞ்சைக் கிழித்து ஈரலை யாரோ அபகரித்துக்கொண்டு போனாற் போலிருந்தது. அவருடைய வெண்மையான தாடி முழுதும் கண்ணீரால் நனைந்துவிட்டது. இந்நிலைமையில் அவர் "ஓ ஜுபர்! அல்லாஹ்வின் அமானிதத்தில் சென்று அல்லாஹ்வுக்காக சீக்கிரம் என்னிடம் வந்து சேருவாயாக" என உரத்த தொனியில் கூறினர்.

தந்தையைவிட்டுப்பிரிவது நமதுஜுபரையும் வாட்டியது; அவனது முகத்தில் துக்கக் குறி காணப்பட்டது. என்றாலும் அது அதிக நேரமிருக்கவில்லை. ஐரோப்பிய இளம் கன்னிகைகள் ஒன்றுகூடி லஞ்சு--காலை போஜனமருந்துவதை நமது ஜுபர் பார்த்தவுடன் அவனது வதனம் சந்தோஷத்தின் மேலீட்டால் செழிப்புறவும், புருவம் இலங்கவும் முற்பட்டது. இந்நிலைமையில், கப்பலில் நமது ஜுபருக்கேற்பட்ட மனோ கவர்ச்சியான உல்லாசங்களானது அவன் ஐரோப்பாவின் கரையில் அடி வைக்குமுன்பே அறைவாசி ஐரோப்பியனாகச் செய்துவிட்டது. இதனைக்கண்ட ஜுபரோ தனக்கேற்பட்டிருந்த அதிர்ஷ்ட பாக்கியமானது சுவர்க்க உலகிற்கே தன்னைக் கொணர்ந்து சேர்த்து விட்டதுபோல் எண்ணமுற்பட்டு விட்டான்.

நமது இந்தியாவிலிருந்து செல்பவர்களுக்கு பாரிஸ்டர் பரீக்ஷையில் கலந்துகொள்வதுதான் சுலபமானகாரியமாதலால், நமதுஜுபரும் அதே பாரிஸ்டர் பரிக்ஷையிலீடுபடுவதற்கான காரியங்களை ஆரம்பித்தான். அவன் ஆரம்பத்தில் லண்டனில் நடைபெறும் உல்லாச உற்சாகம் ததும்பும் காரியாதிகளை விட்டு கூடிய மட்டில் விலகி, தன் அதிக நேரத்தை கல்வி ஆராய்ச்சியிலீடுபடுத்திக் கொண்டிருந்த போதிலும், அங்குள்ள ஐரோப்பியநண்பர்கள் மெள்ள மெள்ள இவனுடைய மனதை பலவாறான விளையாட்டு, மனோ உல்லாசக் காரியங்களில் பங்கெடுத்துக் கொள்வதில் திருப்பி விட்டு விட்டனர். இதனால் நமது ஜுபர் ஐரோப்பிய சுகவாழ்க்கையை சற்றும் கைவிடாதவனாய் விட்டான்.

ஷேக் சாஹிப் நமது ஜுபரை தனதுபார்வையில் வைத்து நல்லொழுக்கம் ஆசாரம் முதலியவைகளை தக்க முறையில் கற்பித்து வந்ததன் பயனாக, அவன் தூய்மை பொருந்திய ஹிருதயம், பரிசுத்தக் கொள்கை யுடையவனாக இருந்தபோதினும் அவனது உதிரத்தில் வாலிபதின் உஷ்ணமேற்பட்டும், அவனது உணர்ச்சியின் தீ சுடர்விட்டெறிந்து கொண்டும், வாலிபத்தின் சூரியன் பிரகாசித்துக் கொண்டுமிருந்ததால் லண்டனின் அழகிய தோற்றங்களும், கண்களைக் கவரத்தக்க கன்னிகைகளும் அவனை ஏமாற்ற, அவனது ஹிருதயத்தைக் கொள்ளை கொள்ள முற்பட்டு விட்டனர்.

நமது ஜுபரை ஆரம்பமாக அழகு பொருந்திய ஓர் உல்லாசக் கட்டிடத்திற்குக் கொண்டு போகப்பட்டது. அதன் உள்பாகம் முழுதும் பளிங்கியிலேயே அமைக்கப் பட்டிருந்தது. மேல் முகடு, பூமி, சுவர், தண்ணீர் தடாகம், மேஜை, நாற்காலி சோபா கட்டில் முதலிய சகலமும் பளிங்கியினாலுள்ளதாகவே இருந்தது. ஜுபரும் அவனது நண்பர்களும் அங்குள்ள தண்ணீர் தடாகத்தினருகே சென்றவுடன் அதன் முகட்டில் ஓர் அசைவுதல் போலேற்பட்டது. உடனே சில அழகு சௌந்திரியமுடைய இளம் நங்கையர் அரை நிருவாண உடையுடன் அந்த தடாகத்தினுள் துள்ளிக் குதித்து விழுந்தனர். அந்நங்கையர் அத்தண்ணீரில் விழுந்தவுடன் அத்தடாகம் முழுதும் ஒரே சிவப்பு நிறமாகி விட்டது. இதற்குச் சற்று நேரத்திற்கெல்லாம் பச்சையாக மாறி நிமிஷத்திற்கு நிமிஷம் ஒவ்வொரு வர்ணம் காண்பித்துக் கொண்டிருந்தது. இதனை கண்ணுற்ற நமது ஜுபரோ தனது கைகளை கண்களில் வைத்து பொத்திக்கொண்டும் ஒருபகக்ம்

கை சேதம் மற்றொரு பக்கம் ஆனந்தம் இவைகளைக்கொண்டு இந்த மிஸ்மரிஸ வேடிக்கைகளை நோட்டமிட்டுக் கொண்டிருந்தான். அந்நங்கையர் அதில் குதித்து விளையாடி ஒருவர்மீதொருவர் தண்ணீரை அள்ளி இறைத்துக் கொண்டிருங்குங்கால் அந்நங்கையர் அரை நிருவாணத்தோடு மார்பு திறந்தவர்களாக இருப்பதை பார்த்துக் கொண்டிருந்தது இவனுக்கு பெரும் மனக் கவர்ச்சியை அளித்து விட்டது. பிறகு அவன் அச்சூனிய மாளிகையைவிட்டு வெளி வந்தது முதல் அவன் சித்த பிரமை கொண்டவன் போலாகி விட்டான். நமது ஜுபர் கண்டது லண்டனிலுள்ள ஓர் சிறு காட்சியேயாகும். இதுவன்றி லண்டன் நகர் முழுதும் இவ்வாறான தோற்றங்களையே வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறது. அவைகளை கண்ணுறுவது கொண்டு மனிதன் வெட்கத்தால் தலைகுனிய வேண்டியதாக இருக்கிறது; உரோஷம் மங்கிப்போகிறது. நாடகசாலைகளென்ன? சினிமாஹால் கோர்டு கச்சேரி கலாசாலை வணக்கஸ்தலம் முதலிய சகல இடங்களும் ஒரே பெண்கள் மயமாகவே இருக்கிறது. அதிலும் எவ்வாறான பெண்கள்? இளம் நங்கையர்; கண்களை கவரத்தக்க யவ்வன வயனயுடையவர்கள், ஒவ்வொரு அடிவைக்கும் போதும் ஒவ்வொரு விததோற்றத்தை வெளிப்படுத்தக் கூடியவர்கள். இதுவன்றி அங்கு வீதிகளில் செல்லும் மோட்டார்களில் மனம் கவரத்தக்க அநேக நூதன வேடிக்கைகள் நிறம்பியிருக்கும். இரண்டொரு தோற்றங்கள் மட்டிலு மேற்பட்டிருந்தா லல்லவோ மனிதன் சற்று பேணுதலுடன் மனதை கை கொண்டிருக்க முடியும். ஆனால் அங்குள்ள ஒவ்வொரு அணுவும் மனிதன் பாவத்தில் வந்து ஈடுபடும்படி அழைத்துக்கொண்டே இருக்கிறது.

நமது ஜுபர் ஆரம்பத்தில் இத்தோற்றங்களை விட்டு தப்பித்துக் கொள்வதற்கான முயற்சியிலீடுபட்டு இக்காரியங்களெல்லாம் எனக்கு திருப்தி அளிப்பனவாகவில்லை; முற்ற முற்ற சன்மார்க்கத்திற்கு விரோதமான இக்காரியங்கள் உரோஷத்தன்மைக்கு விரோதமானதாகக்காண்கின்றேன் எனக்கூறி வந்தானாயினும் அவனுடைய நண்பர்கள் இவனை வழிகெடுப்பதற்காக பலவாரங்கள்வரை முயற்சித்து, “இக்காரியங்களெல்லாம் இதுபொழுது நல்லொழுக்கங்களிற் சேர்ந்துவிட்டது; நேரான அறிவும் இவைகளை ஏற்றுக் கொள்கின்றது; எதனை நமது சங்கம் அதிருப்தியாகக் கருதுகின்றதோ அதனைச் செய்வது தான் பாவமாகும்; எவைகளை நமது சொசைட்டி சங்கம் அங்கீகரித்துக் கொள்கிறதோ அவைகள் மீது தோஷங்கூறி பாவங்களென சொல்ல முடியாது; உல்லாசச்செய்தைகளும், சந்துஷ்டியாக இருப்பதும் மனிதனது பிறப்புரிமை, பாத்தியதையாகும். எந்த சட்டமும் மனிதனது இப்பாத்தியதையை அபகரித்துக் கொள்ளமுடியாது. உலகமென்பதே சுவண்டி பெறுதல், சந்தோஷ வாழ்க்கை நடத்துவதற்குப் பெயராகும். உண்பதும் பருகுவதும் சுவண்டி அனுபவிப்பதும் அதன்பின் இவ்விடத்தைவிட்டு சென்று விடுவதும் தான் இதன் வேலை. இந்தியாவோ அறைவாசி காட்டுமிராண்டிதேசம், சிறியசிறிய விஷயங்கள் மீதெல்லாம் அங்கு பார்வை செல்கிறது; அவ்விடத்திய சீர்திருத்தம் பூர்த்தியடையாத அநாகரீகமுடைய தெனவும் அறைகுறையான தெனவும் கூறினர். ஆரம்பமாக இவ்வார்த்தைகள் நமது ஜுபரின் செவிக்கெட்டியபோது அவனது முகத்தில் கோபக்குறி தென்பட்டு புருவத்தின் நரம்புகள் துடித்தெழும்ப முற்பட்டதாயினும், மெள்ள மெள்ள மேனாட்டு சூனியம் அவனது ஹிருதயத்தைக் கைப்பற்றி கொண்டு வந்ததால் தந்தையால் கற்பிக்கப்பட்டு வந்த சீர்திருத்தம் மெள்ள மெள்ள நழுவ ஆரம்பித்து விட்டது; அந்த (அ) நாகரீகம் இவனது ஹிருதயத்தைக் கொள்ளை கொண்டு விட்டது.

நமது ஷேக் சாஹிபோ கடிதத்தின் மீது கடிதம் அனுப்பிக்கொண்டு அருமை ஜுபரின் வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். ஆனால் ஜுபரோ லண்டன்மா நகரை விட்டு சற்றேனும் அசைவதற்கான ஆலோசனையுள்ளவனாகக் கூடத் தெரியவில்லை. பாரிஸ்டர் பரீக்ஷையிற் தேர்ச்சிபெற்ற பிறகுங் கூட அவன் லண்டனிலேயே இருந்து கொண்டிருந்தான்.

இந் நிலைமையில் இந்தியா திரும்பி வருவதற்கு இரண்டு மாதங்களுக்கு முன் அங்குள்ள வாலிபப் பெண்ணொருத்தியை அவன் சந்தித்தான். அவளது வயது 25-க்குச் சற்று அதிகமிருக்கும். அவளுடைய முகவடிவம் சாதாரணமாகவே இருந்தது என்றாலும், அவள் மக்களை கவர்ச்சிக் கொள்ளச் செய்யும் செயல்களிலீடுபடுபவளாக விருந்தாள். அழகு சிங்காரிப்பு இவைகளில் மிகுதமாய்ப் பங்கெடுத்துக் கொள்பவளாகவு மிருந்தாள். அவளுடைய தந்தை வண்ணான் தொழில் புரிபவன்; அவளுடைய தமையனோ குடித்து கீழே எறிந்து

விட்ட சிக்ரட்களை |பொறிக்கிக்கொண்டு திரிப வன். இந்நிலைமையிலுள்ள அவ் வாலிபப்பெண் நமது ஜுபர் மீது அன்பு கொண்டிருப்பவள் போல் நடித்து இனிய மலர்ந்த வதனத்தோடு அவனது தலையில் கையைவைத்து மெல்லிய தனது விரல்களால் தலை உரோமங்களைத் தட விக்கொண்டே ஜுபர்! தாங்கள் எவ்வளவு அழகு சௌந்தர்ய முடையவர்களாக யிருக் கின்றீர்கள் எனக் கூறினள். இவ்வினிய வார்த் தைகள் நமது ஜுபரின் மனதைக் கொள்ளை கொண்டு விட்டது; சந்தோஷத்தின் மிகுதி யால் இவனது வதனம் செழிப்புற் றது; தேகம் பரவசமடைந்தது; தன்னுணர் வற்றவனாக தலை உரோமங்களைக் கோதிக் கொண்டிருந்த விரல்களை முத்தமிட ஆரம்பித் தான்; காமத்தீ மூடப்பட்டு விட்டது; பிரீதி அபரிமித எல்லைக்குச் சென்று விட்டது. கடை சியாக இருவரும் விவாகம் புரிந்து கொள்வதற் குச் சம்மதித்து விட்டனர். இந்தியாவிலுள்ள ஏதாகிலும் வண்ணார குடும்பத்திலோ, அல்லது சாயம் காய்ச்சுபவர்களின் குடும்பத்திலோ நமது ஜுபருக்கு விவாகம் பேசப்படுமாகில் உடனே அவன் தற்கொலை புரிந்து கொள்வதற்கு முற் பட்டு அச் சம்மந்தத்தைச் அறவே ஏற்றுக் கொள்ள மாட்டானென்பது திண்ணம். ஆனல் இவளோ லண்டனின் வண்ணானுடைய குமா ரத்தியான இன்டோனியா வாகும். இவள் எவ் வாறான கெடுதியிலு மீடுபடாத சற்புத்திரியு மாகுமெனக் கூறப்பட்டதை நமது ஜுபர் முழு தும் நம்பி விட்டான். அவன் அநேக நாள் லண் டன்மா நகரிலிருந்து அவ்விடத்திய நடவடிக் கைகளை யெல்லாம் நன்கு கவனித்து வரும் நிலைமையில் லண்டனின் பத்தினித்தனத்திற்கு எவ்வளவுமதிப்பிருக்கிறதென்பதும், இந்தபாட் டல்கள் எவ்வளவு சுளிவாகவும் பொருட்படுத் தப்படாமலும் களவாடப்பட்டுப் போகிறதென் பதும் அவனுக்கு நன்கு தெரிந்திருந்தும் பொய் யான பிரீதியானது அவனுடைய கண்களில் மறதி யென்னும் திரையை போட்டு விட்டது. நெருப்புகளைக் கண்டு புஷ்பங்களென ஏமாற்ற மடையும் இடத்தில் நமது ஜுபர் விவாகம் புரிந்துகொள்ள மனத்துணிவு கொண்டு விட் டான்.

விவாகமாகி விட்டது! பகிரங்க விவாகம், சீர் திருத்த விவாகம், மனோ உல்லாச விவாகம். சதி பதிகளுக்கிடையே எவ்விதத்தாலும் யாராலும் பிரிவினை போட முடியாத விவாகம். 2 ஆயிரம் பவுன்மகர் ஏற்படுத்தப்பட்ட விவாகம். இந்நிலை மையில் சதிபதிகளிருவரும் பட்டணத்திற்கு வெளியில் சிலகாலம் உல்லாசமாய் பாலும் தேனும போல் சுகபோகமனுபவித்துக் கொண் டிருந்தனர். அதன்பின் நமது ஜுபர் தமது அருமை மனைவியை கூட அழைத்துக்கொண்டு இந்தியாவுக்குப் புறப்பட்டான். பிரயாணம் இன்பகரமாக விருந்தது. ஜுபரோ விலை மதிக்க வொண்ணாப் பொக்கிஷத்தை தன்னுடன் கொண்டு இந்திபா திரும்புவதாக எண்ணி அக மகிழ்ந்துபெரும் ஏமாற்றத்திற்குள் அகப்பட்ட வன் போலிருந்தான். தான் கையுடன் கொண்டு வரும் புதையல் தூய்மையான முத்திரையடிக் கப்பட்ட தங்கமல்ல, கிலிட் கொடுக்கப்பட்ட பூச்சு நகை என்பதும் அப்பூச்சு சீக்கிரம் வெளுத்துப் போகுமென்பதும் அவனுக்குத் தெரியாது.

தன் அருமை குமாரரை எதிர் கொண் டழைப்பதற்காக ஷேக்சாஹிப் தமது நண்பர் உறவினருடன் பம்பாய் துறைமுக ஹார்பர் வந்து காத்துக் கொண்டிருந்தார். புகை ரதம் கரை சேர்ந்தவுடன் நம்முடைய ஜுபர் தன் மனைவியுடன் கைகோர்த்த வண்ணம் கீழே இறங்கினான். தந்தையோ அருமை குமாரரின் நெற்றியில் முத்தமிட்டபோது வாஞ்ஜையின் கண்ணீர் சொட்ட ஆரம்பித்தது. குமாரனும் தலை வணங்கினன். நண்பர்களெல்லோரும் புஷ்பஹாரங்கள் சூட்டினர். இவையெல்லாம் சில நிமிடநேரத்தில் முற்று பெற்று விட்டது. ஆனல் ஜுபருடன் ஓர் ஐரோப்பிய ஸ்திரீசேர்ந் திருப்பதுக் கண்டு அங்கு வந்திருந்தோர் யாவ ரும் இரகசிய விசாரணை புரிந்து கொண்டர். என் றாலும் ஜுபருடைய சிறிய மாமனுக்கு அவனு டன் சாதாரணமாக பேசும் பழக்கமிருந்ததால் ஜுபரிடம் அப்பெண் சம்மந்தமாய் வினவினர். நமது ஜுபரோ சிறித்துக் கொண்டு "இவள் என் பெண்சாதியாகும்" எனத்தெரிவித்தான். ஜுபரின் இம்மறுமொழியை செவியுற்ற யாவ ரும் மௌன முற்றிருந்து விட்டனர். ஷேக் சாஹிபோ கவலையின் சமுத்திரத்தில் மூழ்கிய வராய், அன்புடன் எதிர்பார்த்துக் கொண்டி ருந்த அருமை குமாரனையும் மறுமகளையும் விட்டுவிட்டு மோட்டார் மீதுவீற்று தனதில்லம் சென்று விட்டார். வீடு போய் அங்கிருக்கும் பெண்டீர்களிடம் இச்செய்தியை அறிவிக்கவே வீடு முழுவதிலும் பெரும் கூக்குரல் கிளம்பி விட்டது.

(தொடரும்)

சதிபதிகளின் கடமைகள்

எதுவரை புருடன் பெண்சாதி இருவரும் தங்கள் கடமையை தக்க முறையில் உணர மாட்டார்களோ, அதுவரை எந்த வீடும் குடும்பமும் நல்ல நிலையை அடைய முடியாதென்பது திண்ணம். விவாகம் புரிந்துகொள்ளுவது சுளுவான காரியம். ஆனால் விவாகத்திற்குப் பின்னேற்படும் கடமைகளை நிறைவேற்றுவது மகா கஷ்டமான காரியமாக இருக்கிறது. இதற்காக ஒவ்வொரு வயதையடைந்த ஆண்பெண் இருபாலரும் விவாகத்திற்குப் பின் தங்கள் கடமைகளை செவ்வனே யுணர்ந்து வாழ்க்கையை சீரிய அழகான முறையில் நடத்திச் செல்ல முயற்சிப்பார்களாக.

ஜீவிய வாழ்க்கையை அழகிய முறையில் நடத்திச் செல்வதற்கு புருடன் மனைவி இருவரும் ஒருவர்மீதொருவர் அன்பு பூண்டிருப்பதும் சிக்கன வாழ்க்கை நடத்துவதும் பிரதான காரணங்களாக விருக்கின்றன. இதற்காக புருடர்கள், தங்கள் கையினாலேயே வீட்டுக்காரியாதிகளைச் சிரமமின்றி செய்துகொண்டு போவதற்கும், வீண் செலவை மேற்கொள்ளுவதாலேற்படும் கெடுதிகளையும் தங்கள் மனைவியர்களுக்கு தக்க முறையில் கற்பித்துவந்து இவைகளை அவர்களது ஹிருதயங்களில் நன்கு பதிய வைத்து விடவேண்டும். மனைவி சற்றேனும் புத்திசாலியான விவேகியாக இருப்பாளாயின், இன்னும் நம்மீது அனுதாபப் படுபவளாக இருப்பாளாகில் அவள் சந்தோஷத்தோடு, அதிக அன்போடு நம்முடைய இவ்வாலோசனையை ஏற்று நடக்க முற்பட்டுவிடுவாள்; அவள் இலாபம் நஷ்டம் இவைகளை நன்குணர்ந்து பார்த்து காலத்தின் விபரீதப் போக்கை சற்றேனும் திரும்பிக்கூட பார்க்க மாட்டாள்.

இதற்கு மாற்றமாய் மனைவியர்களுக்கு உபதேசம்செய்யும் துணிசல் நம்மிலில்லாதுபோய் விட்டாலும், அல்லது மனைவியின்மீது நமக்கேற்படும் அபரிமித அன்பின் காரணமாய் அவன் ஒரு காரியம் செய்வதற்கு கையை அசைப்பதற்குக் கூட நமது மனம் இடங்கொடாத நிலைமையில் நாமிருந்தபோதினும், இதன் பயனாய் என்னென்ன கேடுகள் பிற்காலத்தில் நமக்குச் சம்பவிக்கும் என்பதைக் கூட நாம் பொருட்படுத்துவதில்லை என்றல்லவா ஏற்படுகிறது. இதன் பயனாய் அதிசீக்கிரம் புருடன் மனைவி இருவரும் தாங்கள் அறியாமற்செய்த மடத்தனத்தின் பயன்களை அடைந்தே தீரவேண்டும். இதன்பின் நமது விவாக ஆனந்தங்களுக்கும் சுகவாழ்க்கைகளுக்கும் உலை வைக்கப்பட்டுப் போய் விடுமென்பது திண்ணம்.

இதுவன்றி நாம் மனைவியர்களுடன் எவ்வளவு தூரம் சாந்தமுறையில் நடந்துகொண்டு வந்தபோதினும், ஏதாகிலும் ஒரு சமயத்தில் கோபமானவும் அவளுடைய விருப்பத்திற்கு மாற்றமானவுமான ஏதாகிலும் வார்த்தைகள் நம்முடைய நாவிலிருந்து வெளியாகி விடுமாயின், அஃது அவளுடைய ஹிருதயத்தில் அம்பைப்போல் பாய்ந்து விடுமென்பதை நாம் நன்கு ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்.

விவாகமேற்பட்ட பின் புருடனுடைய மனதில் அன்பின் உணர்ச்சி நாளுக்குநாள் சுறுப்புடன் அதிகரித்துக்கொண்டே போகிறது. இதன் பயனாய் அவன் சமய சந்தர்ப்பங்களையும் கவனியாது தன் மனையின் மீது பூர்ண நம்பிக்கைக்கொண்டு விடுகிறான். ஆனால், மனைவியோ தன் பர்தா அன்பின் பிரீதியை வெளியாக்குவதை மட்டும் பார்த்து மயங்கிவிடாது நாளடைவில் தன்னுடன் அவன் நடந்துகொள்ளும் முறையை ஆழ்ந்து நோக்கிக்கொண்டிருக்கிறாள். எனவே அவனுடைய நித்திய நடவடிக்கைகளையும் இதர விஷயங்களையும் நோட்டமிட்டுக் கொண்டே வந்து பர்தா தம்மீது உண்மையான அன்பு கொண்டிருக்கின்றான் என்ற முடிவுக்கு வந்து புருடனுடைய பிரீதிக்குத் தக்கவாறு தமது அன்பை வளர்த்துக் கொண்டே போகிறாள். ஆனால், இவர்களுக்கு மகவு ஏற்பட்டு விடுமாயின் புருடனுடைய அன்பின் பெரும்பாகம் அம்மகவின் பக்கல் திரும்பி விடுகிறது. மகவின்மீது ஏற்படும் இவ்வன்பு வெளியாவதற்கு முன்பே புருடன் தன் மனைவியுடன் சதாவும் சற்குணத்தோடு சீரிய முறையில் நடந்துகொள்ள வேண்டும்; அவளது மனதிற்கு சங்கடத்தைக்கொடுக்கும் எவ்வாறான வார்த்தையும் அறவே உபயோக்கி

கக் கூடாது. அசம்பாவிதமாய் இவ்வாறான காரியங்களே தாகிலு மேற்பட்டு விடுமாயின் அவளுக்கு பர்த்தாவின் மீது ஏற்பட்டுள்ள அன்புக்கும் ஹானி உண்டாகி, புருடன் மனைவியர்களின் வாழ்க்கை சீர்கேடடைந்து விடும். அதன்பின் ஒருவரோடொருவர் நேசபான்மை அன்பு பூண்டு உல்லாசமாய் காலங்கழிப்பதற்கு முட்டுக்கட்டை ஏற்பட்டுவிடும்.

மனிதன் தனக்கு விவாகமான காலம் முதற்கொண்டு தன் ஆயுள் முழுதிலும் தன் மனைவியுடன் சதாவும் அன்பு பிரீதியோடு காலங்கழிக்க வேண்டும். இதனால், அவளுக்கு அடிமையாக கீழ்படிந்து நடக்கவேண்டுமென்பதும், அவள் புரியும் மடத்தனமான சகல செய்கைகளையும் கண்டு பாராமுகமாக இருக்கவேண்டுமென்பதும் கருத்தல்ல. உண்மையில் அவளுக்கு எது பிரயோசனமாக இருக்குமோ, இன்னும் எதன் காரணமாய் அவளின் பிரீதி விருப்பம் நீடித்திருக்குமோ, அவளுக்கு மனோ நிம்மதியும் சாந்தமும் ஏற்பட்டிருக்குமோ அக்காரியங்களை நிறைவேற்றுவதி லீடுபட வேண்டும். இதுவன்றி, புருடன் சகல விஷயங்களிலும் இயன்றவரை உண்மை எதார்த்தம் சத்தியத்தைக் கடைப்பிடித் தொழுகி அவன் தம்மீது உண்மையாகவே பிரீதி அன்பு கொண்டிருக்கின்றான் என்னும் நம்பிக்கை அவள் மனதில் பதியும்படி நடந்து கொள்ள வேண்டும்.

புருடன் தன் மனைவியை அன்பான, பிரீதி வெளியாகும்படியான வார்த்தைகளை கூறி அழைப்பதுமட்டும் போதாது; இவனுடைய நடவடிக்கைகளை அவளுடைய மனதில் இவ்வாறான உணர்ச்சியை உண்டுபண்ணி வைத்து விட வேண்டியது அவசியமாக இருக்கிறது. சுருங்கக்கூறின், மனைவியின் சுவாத்தியம் அவளுடைய உயிர் அவளுடைய சந்தோஷம் இவைகளைவிட விருப்பமான அருமையான வஸ்து இவ்வுலகில் வேறொன்றுமில்லை என இவன் கருதுவதான உறுதி அவளுக்கேற்பட்டு விடவேண்டும். இதற்கு ஓர் உதாரணம் கூறப்படுவதை நண்பர்கள் நன்கு கவனிப்பார்களாக.

ஒருவனுடைய பெண்சாதி ஒருசமயம் வியாதியால் பிடிக்கப்பட்டுப் போனாள். இதன் காரணமாய் 48 மணி நேரம் அவளுக்கு தூக்கமென்பதே கிடையாது. மூன்றாம்நாள் இரவு நேரத்தில் அவன் தன் பெண்சாதியினது படுக்கைக்குச் சமீபத்தில் உட்கார்ந்து கொண்டிருந்தான். அதுபொழுது மனைவி தன் பர்த்தாவை நோக்கி, இதுபொழுது நித்திரை என்னை மிகைக்கின்றது; ஆனால் துஷ்ட நாய்கள் வெளியில் கூக்குரல் செய்துகொண்டிருப்பது எனது நித்திரைக்கு பங்கமேற்படுகிறது; இதனால் யான் மிகக் கஷ்டமடைகின்றேன் எனக் கூறினாள். அதுபொழுது இரவு 11 மணி சுமாரிருக்கும். கோடை காலம். உஷ்ணம் அதிகமாய்க் காணப்பட்டது. இந்நிலைமையில் அவன் வீட்டைவிட்டு வெளியில் வந்து இரவு முழுதும் நாய்களை விரட்டிக்கொண்டே இருந்தான். இதன் பயனாக அம்மாது அயர்ந்த நித்திரையிலீடுபட்டு இரவு முழுதையும் தூக்கத்திலேயே கழித்து காலை 8 மணிக்கு விழித்தெழுந்தாள். புருடனோ அதிகாலை 6 மணிக்கெல்லாம் தனது உத்தியோகத்திற்குச் சென்று மாலையில் திரும்ப வீடு வந்தான். அவன் மனைவி விழித்தெழுந்த பிறகு பக்கத்து வீடுகளில் வசிக்கும் பெண்மணிகள் அவளிடம் வந்து சுகச் செய்தியை விசாரித்துவிட்டு, உமது ஊர் உமது இனத்தைச் சேர்ந்த புருடர்களெல்லோரும் தம்முடைய பர்தாவைப் போல தான் சுக துக்கங்களில் பங்கெடுத்துக் கொள்பவர்களாக இருப்பார்களோவென விசாரிப்பதற்கிடையே, உமக்குச் சௌகரியமளிப்பதற்காக உமது பர்த்தா இரவு முழுவதும் தூங்காது விழித்திருந்ததாகக் கேள்விப்படுகிறோம் என அறிவித்தனர். அதுபொழுது அம்மாது, தன் புருடன் உண்மையான அன்பு பிரீதிஇவைகளை வெளிப்படுத்தி காண்பிப்பதில் புகழுக் குரித்தானவராக இருக்கின்றார்; ஒவ்வொரு புருடரும் சமயம் சந்தர்ப்பம் வாய்க்குந்தோறெல்லாம் இவ்வாறே நடந்து தங்களது பிரீதியை செய்கையில் வெளிப்படுத்திக் காண்பிக்க வேண்டும். என் பர்தாவோ சற்குணம் அன்பின்மேலிட்டால் வீட்டுக் காரியாதிகளிலும் எனக்கு பற்பல வகையிலும் உதவி புரிந்து விட்டு தனது தொழிலுக்குச் சென்று பகல்முழுவதும் வேலை செய்கின்றார்; அங்கிருந்து திரும்பி வந்தவுடன் தனது முழுநேரத்தையும் வீட்டுக் காரியாதிகளை கவனிப்பதிலேயே ஈடுபடுத்துகின்றார்; வீண்விவகாரங்களிலும் பலவாறான பராக்குகளிலும் ஈடுபடுவதை மிகமிக வெறுப்பவராயிருக்கின்றார்; யான் மின்னலையும் இடியையும் கண்டு பயப்படுவேனாதலால் மின்னலின் அறிகுறி தென்படுமாகில் அவர் முக்கிய வேலைகளைக்

கூட விட்டுவிட்டு சீக்கிரமாக வீடுவந்துவிடுவார். நான் தனிமையாக இருக்கும் நிலைமையில் இடி மின்னல் ஏற்படுவதுகொண்டு என் மனதில் ஏற்படும் பயம் அவர் வந்தபின் என்மனதை விட்டு நீங்கி தைரியமேற்பட்டுப் போய்விடும். மனதில் எவ்வாறான பயமுமிருக்க மாட்டாது. அவர் என்னை எங்கும் உலாவுவதற்கோ சினிமா போலொற்ற வேடிக்கை ஸ்தலங்களுக்கோ அழைத்துச் செல்லமாட்டார். அன்பும் உண்மையான அனுதாபமும் கிரயம் கொடுத்து வாங்கக் கூடியவைகளல்ல. உண்மை அனுதாபமும் பிரீதியும் நாளடைவிலேற்படும் வாஞ்ஜைபான நடப்புகளைக் கொண்டு உண்டாகுபவைகளாகும். இதுவிஷயமாய் யான் எவ்வளவு பெருமை பாராட்டினும் அஃது மிகையாகாது. இவ்வாறான முறையில் அவர் என்விடம் உண்மை மனதோடு பிரீதிகொண்டு எதார்த்தமான அனுதாப முடையவராகவே இருக்கின்றார் எனத் தெரிவித்தாள்.

ஒருவர் தன் மனைவி நன்றியறிதலுள்ளவளாகத் திகழ்வதை பின்வருமாறு அறிவிக்கின்றார்:—

யான் ஒரு வியாசம் வரைந்து வெளியிட்டதற்காக 2 வருஷ தண்டனையும், 5 ஆயிர ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டதுடன் அதன்பின் 7 வருட காலம் நன்நடத்தையுடனிருப்பதாக முச்சலிக்கா எழுதிக் கொடுக்க வேண்டு மென்றும் உத்திரவிடப்பட்டேன். இதன் பயனாய் யான் என் சுய பதியை விட்டு 70 மைல் தூரத்திலுள்ள ஓர் சிறைச்சாலைக்கனுப்பப்பட்டேன். என் மனைவியோ, இவ்வளவு தூரத்திலிருந்து கொண்டு என் சுகச் செய்தியை விசாரித்துக் கொள்வதில் தாமிதமும் சங்கடங்களுமேற்படு மென்பதைக் கருதி சுய பதியைவிட்டு சிறைச்சாலை இருக்கும் ஊரிலேயே ஒரு வீட்டை வாடகைக்கு அமர்த்தி அதில் குடியி[illegible]து கொண்டு என் விஷயங்களையும், சுகச் செய்திகளையும் தெரிந்துகொண்டேயிருந்தாள். அவள் தூரத்திலிருப்பாளாகில் இக் கஷ்டத்தை ஒருபோதும் சகித்துக்கொள்ள மாட்டாள். இந்நிலைமையில் எங்களுடைய ஒரு குழந்தையும் தவறி விட்டது. ஆனால் அவளோ அது சமயம் பொறுமையைக் கைக்கொண்டு உறுதியுடன் நடந்து கொண்டாள்' எனக்கு கஷ்ட சங்கடமேற்பட்டு அவளுக்கும் சோதனை காலம் வந்தபோது அவள் நிதானம் தவறாது என்மீது அன்பு உண்மை விசுவாசத்துடன் நடந்து கொண்டது மிக மிகப் போற்றத்தக்கதாகும். நான் விடுதலையடைந்து வந்தபின் அவளுக்கு மார்க்கச் சட்டப்படி கிடைக்க வேண்டிய பாத்தியதைகளைவிட அதிக சொத்து சுதந்திரங்களைக் குறிப்பிட்டு ஒரு தஸ்தாவேஜு எழுதிவைத்து விட்டேன் என, அவர் அறிவித்து இதினின்று நம் இள வாலிபர்கள் பாடங்கற்றுக் கொள்ள வேண்டியது மிக மிக ஆவசியமாகுமென குறிப்பிட்டிருக்கிறார்.

அருமைநேயர்காள்!

நீங்கள் எப்போதும் அதிகாலையில் விழித்தெழும்பும் பழக்கத்தைக் கைகொள்ளுங்கள். அதிகப் பிரயாசையுடன் ஒவ்வொரு காரியங்களிலு மீடுபடுங்கள். உள்ளதைக் கொண்டு போதுமாக்கிக் கொள்ளும் விதத்தில் சிக்கனமான முறையில் காலத்தைக் கழியுங்கள். மனைவிகளை சதாவும் கூடவே வெளியிற் அழைத்துக் கொண்டு திரியாதீர்கள். அவர்களை தியேடர் சினிமா சாலைகளுக்கு அனுப்பி வைக்காதீர்கள்; அவர்களுக்கு உங்கள் தகுதிக்கு மேல் அதிக விலையுயர்ந்த ஆபரணங்கள்செய்து கொடாதீர்கள். இதனாலெல்லாம் மனைவியர்கட்கு பர்தாக்கள் மீது உண்மையான பிரீதி ஏற்பட்டுப் போய்விடுகிறதில்லை. உண்மையில் நீங்கள் முழுமனதோடு அன்பு கொண்டு அவைகளை நித்திய வாழ்க்கையில், கிரியாம்சையில் செய்து காட்டுவதினால் மட்டுமே உண்மை அன்பு எதார்த்த விசுவாசம் ஏற்படுகிறதென்பதை நன்கு தெரிந்து கொண்டு அவ்வாறே செய்ய முற்படுவீர்களாக.

அறிவிப்பு

நம் ஹிபாஜத்துல் இஸ்லாம் சார்பாக சிலோன் சென்றிருந்த டெபுடேஷன் அங்கத்தினர்கள் சுயபதி திரும்பி வந்துவிட்டார்கள். அவர்கள் அங்கு சென்று வந்ததின் விபரங்களடங்கிய ரிபோர்ட் அடுத்த மாசிகையில் வெளிவரு மென்பதை நண்பர்கட்குத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இஸ்லாமிய ஒற்றுமையும் ஜனுப் ஜின்னுவும்

(ஹாபிஸ் E. M. A. R. தென்காசி திரட்டியது)

சோதரீர்! நமது இஸ்லாமிய கட்டுப்பாடும், ஒழுங்கும், ஒற்றுமையும், எத்தகைய தென்பதை கொஞ்ச காலமாக நாம் மறந்தும் அதைப்பற்றி அறிவுறுத்தப்படாமலே நாமிருந்ததால் நம்மிலே பல பிரிவுகள் தோன்றி அதனுல் சச்சரவுகள் நிகழ்ந்து வந்தது. இது தான் தக்க சமயமெனக் கொண்ட ஹிந்துக்க ளின் சக்தியானது இஸ்லாத்தின்மீது தாக்க வாரம்பித்ததால் முஸ்லிம்கள் பல கஷ்ட நஷ் டங்களுக்கு ஆளாகவும் நேர்ந்தது. இதற்கெல் லாம் காரணம் நமது இஸ்லாமிய ஒற்றுமையை நாம் மறந்துபோனதேயாகும். இதையே நம் அகில இந்திய "முஸ்லிம் லீக்" தலைவர் முஹம் மது அலீ ஜின்னுஹ் அவர்கள் நமக்கு ஞாபக மூட்டுகிருர்கள். அதில் இஸ்லாமிய சக்தி, ஒற்றுமை, முஸ்லிம்களுக்கு வேண்டறபாலது எது? என்பனவைகள் தெள்ளத் தெளிய எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. இவ்விஷயம் "அல் அமான்" என்ற உருது பத்திரிகையில் வெளிவந்ததை நம் சகோதர முஸ்லிம்களின் பார்வைக்குக் கொண்டுவருவதற்காக அதன் சாராம்சத்தை கீழே தருகிறேன். அதை நன்கு ஊன்றி கவனிப்பீர்களாக.

ஒரு மரத்தின் சிறிய கிளைகளுக்கு தனித் தனியே அபாரமான சக்தி கிடையாது. அக் கிளைகளை ஒரு சிறு குழந்தைகூட ஒடித்துவிட முடியும். ஆனுல் அதைப்போன்ற பல கிளை களை ஒன்ருகச் சேர்த்து ஒடிக்கவேண்டுமானுல், குழந்தை என்ன? பெரிய வீரனுலும் முடி யாது. இந்த ஓர் சிறிய உதாரணத்தினுல் தெரிந்துகொள்வதென்னவென்ருல், ஒவ்வொரு சக்தியின் ஆதியும் ஒற்றுமையின்மீதே இருக் கின்றது; இவ்வாருன ஒற்றுமையுள்ள சக்தி யின்மீதே உலகத்திலுண்டான ஒவ்வொரு சக்தியின் அசலுமிருக்கின்றது என்பதே. இதற்கேற்பவே குர்ஆன்ஷரீபு முஸ்லிம்களை ஒற்றுமை என்ற பந்தத்வத்தில் ஒன்ருக இருக் கும்படி கட்டளை பிறப்பிக்கின்றது. அதா வது:—நீங்கள் ஆண்டவனின் கயிற்றை கெட்டியாகப் பிடித்துக்கொள்ளுங்கள்; பிரிந்து போகவேண்டாம். ஏனெனில், ஒரு சமுகத்தின் வாழ்க்கை ஒற்றுமையிலும், கட்டுப்பாட்டி லுமே யிருக்கிறது என போதிக்கின்றது.

வேற்றுமையினுல் பலவாருகப் பிரிந்து நிற்கக்கூடிய சமூகத்துக்கு எந்த விதமான ஸ்திரமுமிருக்க முடியாது அதுவே அழிவைக் கொடுக்கக்கூடிய நெருப்புமாகும். இதன் சுடர் களின்மீது எப்பொழுதும் அந்த சமூகத் தின் வாழ்வு ஒழுங்குபெற இயலாது. இதையே இறைவன் தனது திரு மறையில், "நீங்கள் நெருப்புக்குழியின் ஓரத்திலிருந்தீர்கள்; அவன் (அல்லாஹ்) உங்களைக் காப்பாற்றினுன்; இவ்வாருகவே தனது திருஷ்டாந்தங்களை நீங்கள் நேர்வழி பெறுவான்வேண்டி துலக்குகிருன்" என கூறி யிருக்கின்ருன். எனவே எந்த சமூகமோ, அல் லது எந்த அரசாங்கமோ ஒற்றுமை வாழ்வில் அமைவது மகா சிரேஷ்டமுடையதாகும். அது ஆண்டவனது அருளினுலும், உதவியினுலுமே ஏற்படுகிறது. மனிதனுக்கு இவைகள் எது வரை கிட்டவில்லையோ அதுவரை அவன் எந்த முயற்சியிலும் வெற்றிபெற முடியாது. இவை யெல்லாம் இறைவனது அருள், சக்தி, உதவி இவைகளிலேயே அடங்கி யிருக்கின்றது. அவனே பிரிந்த அணுக்களை ஒன்ருகச் சேர்க்க வேண்டும். பரந்த வஸ்துக்களை ஒன்ருகச் சேக ரிக்க வேண்டும். இதையே இறைவனும் தனது திருமறையில் "நீர் பூமியின் பொக்கிஷமனைத் தையும் செலவு செய்தாலும் பல பிரிவுள்ள மனதுகளை ஒன்று சேர்த்தல் முடியாது; அது ஆண்டவனின் உதவியினுலேயே ஏற்படக்கூடிய தாக இருக்கின்றது, அவனே ஒன்று சேர்க்கக் கூடியவன்" எனப் பகர்ந்துள்ளான். ஆதலால், மனித வாழ்க்கை சீர்பெறுவது ஒற்றுமையின் வாயிலாகவேயாகும். வேற்றுமையும், பல பிரிவும் வாழ்க்கையைக் குலைக்கக்கூடிய நஞ்சா கவே யிருக்கிறது. இக்கருத்தையே திரு மறையும் அநேக இடங்களில் எச்சரித்திருக் கின்றது. ஓரிடத்தில் "நீங்கள் ஒருவருக்கொரு வர் சண்டை போட்டுக்கொள்ள வேண்டாம்; (அவ்வாறு செய்யின்) நீங்கள் நலிந்தவர்களாகி, உங்களது கியாதியும் போய்விடும்" என கூறி யிருக்கின்றது. இன்னும் பல இடங்களிலும் ஒற்றுமையே மிகவும் அவசியம், அதுவே மேன்மையளிக்க வல்லது என்றும், வேற்று மையால் பகைமைத்தனமும் அநீதமுமே ஏற்

படும் என்று பொருள்படவும் கூறி யிருக்கிறது.

ஆகவே, எந்தவிதத்திலும் இஸ்லாமும் இஸ்லாமிய வாழ்க்கையும் ஒற்றுமையையே போதிக்கின்றது. இஸ்லாமிய எந்த சட்டங்களை எடுத்துக்கொண்டாலும், வணக்கங்களை எடுத்துக் கொண்டாலும் ஒற்றுமை மணமே வீசுகின்றது. உதாரணமாக, திருமறையின் ஆரம்ப சூராவான "ஸூரயேபாதிஹா"வில் பிரார்த்தனை, வணக்கம் முதலியவைகளை பன்மை வாக்கியங்களைக் கொண்டே அமைக்கப்பட்டிருக்கின்றது. அதாவது "உன்னையே வணங்குகிறோம், உன்னிடத்திலேயே உதவி தேடுகிறோம், எங்களுக்கு நீயே நேர்வழி காட்டு" என்ற இடங்களில் "நாங்கள்" "எங்களுக்கு" என்ற பன்மை வார்த்தைகள் காணப்படுகிறதே தவிர "எனக்கு" "நான்" என்ற ஒற்றையைக் குறிக்கக்கூடிய வார்த்தைகள் கூறப்படவில்லை. உலக முஸ்லிம்களனைவரும் ஒரே அடிப்படையின் மீது இருப்பதால் ஒருவன் எங்கிருந்து பிரார்த்தனை புரிந்தாலும் அது மற்ற ஏனைய முஸ்லிம்களையும் சேர்த்துக்கொள்கிறது. இறைவன் நமக்கு கற்றுக்கொடுத்த ஒரு பிரார்த்தனையில் "இறைவா, எங்களுக்கு இவ்வுலகிலும், அவ்வுலகிலும் நலவையே கொடு" என்று பன்மையாக எல்லோரையும் சேர்த்துக்கொண்டே பிரார்த்திக்க வேண்டியதிருக்கிறதே தவிர, "எனக்கு" என்று ஒற்றைப்பட அல்ல. ஆகவே, இவையெல்லாம் இஸ்லாமிய ஒற்றுமையையே நமக்கு உணர்த்திக் கொண்டிருக்கிறது.

ஒற்றுமையைப் பற்றி நாயகம் (ஸல்) அவர்களின் வாக்கியங்கள்

இறைவனிடத்தில் இஸ்லாமும், இஸ்லாமிய வாழ்க்கையும் ஒற்றுமைக்கே பெயராகவிருக்கிறது. எவன் ஒற்றுமையிலிருந்து விலகி தனியாகவிருக்கிறானே அவன், ரசூலின் வாக்குப்படி நரகபதியை அடைவான். அதாவது, எவன் ஒற்றுமையிலிருந்து விலகி பிரிந்து விடுகிறானே அவன் நரகையடைவான். ஆதலால் நீங்கள் பெருங் கூட்டத்தைக் கடைப்பிடித்துக் கொள்ளுங்கள் என்றும், ஆண்டவனது கரம் (உதவி) கூட்டத்தின் மீதேயிருக்கிறது, நீங்கள் கூட்டத்தைப் பிடித்துக் கொள்ளுங்கள், ஏனெனில், ஷைத்தான் வேற்றுமையாளரிடமேயிருக்கின்றான்" என்றும் திருவுளம் பற்றியிருக்கிறார்கள்.

இஸ்லாம் என்பதற்கு ஒற்றுமை வாழ்வு என்று மற்றொரு பொருளிருக்கிறது. ஆதலால், ஒவ்வொரு முஸ்லிமும் அவன் பிரார்த்தனை செய்யும் சமயம் அவன் தனியாயிருந்தாலும், மற்றைய முஸ்லிம்களையும் சேர்த்துக் கொள்ளுவான் வேண்டி பன்மையான பதத்தைக்கொண்டே பிரார்த்தனை செய்ய வேண்டியவனாகின்றான். தவிரவும், ஒருவருக்கொருவர் சந்திக்கும் சமயங்களில், முகமன் கூறும்போது, "அஸ்ஸலாமு அலைக்க" என்ற ஒற்றைப்பட உள்ள இடத்தில் "அஸ்ஸலாமு அலைக்கும்" என்று பன்மையான பதம் உபயோகப்படுத்தப்படுகிறது. உண்மை விஸ்வாசிகளான மூமின்கள் அவர்களுக்கிடையே ஒற்றுமையாகவும், வாஞ்சையாகவும் இருப்பதானது திரேகத்திலுண்டான ஒரு உறுப்பு மற்றொரு உறுப்புக்கு எவ்வளவு அனுசரணையாகவிருக்கின்றனவோ அதே போன்றிருக்கிறார்கள். ஆதலால், இறைவனது வாக்கியங்கள், நபிகள் (ஸல்.) அவர்களின் பொன் மொழிகள் இவைகளினால் இஸ்லாமானது ஒற்றுமையும், ஒழுங்கும், கட்டுப்பாடும் அமைந்த மதமென்று நன்கு தெரியக்கிடக்கின்றது. இவ்வாறான ஒற்றுமை நாம் காங்கிரஸில் சேர்வதுகொண்டு கிடைக்குமா? என்பதே இப்போதைய பிரச்னை.

காங்கிரஸ் ஓர் ஹிந்து சபையே

இஸ்லாமிய நெறிகளையும், அதனால் அடையும் பலாபலன்களையும் அறியாமல் வயிற்றுப் பிழைப்பையோ, பதவியாசையையோ பிரதானமாகக் கொண்ட சில சுயநல முஸ்லிம்கள் காங்கிரஸ் என்ற ஹிந்து சமூகத்துடன் சேர்ந்து கொண்டதுமல்லாமல் அது ஹிந்து சமூகமல்ல, அதிலும் சில முஸ்லிம் பெரியார்கள், அறிவாளிகள், உலமாக்கள் இருக்கிறார்கள் என்று மனப்பால் குடித்து வருகிறார்கள். தவிர காங்கிரஸ் மௌலவி எனப்படுவோரும் தாங்கள் மோசம் போனது மல்லாமல் மற்றைய முஸ்லிம்களையும் அதில் சேர்க்க முயலுவதும், அந்த காங்கிரஸே முஸ்லிம்களுக்கு விடுதலை அளிக்கவல்லது என்று கூசாமல் கூறித்திரிவதும் பேராச்சரியமாகும். ஆனால், இன்னார் மேற்கூறப்பட்ட திருமறை வாக்கியங்கள், ரசூலின் பொன் மொழிகள் இவைகளின் தத்துவத்தை உணர்ந்துதான் கூறுகிறார்களா? இல்லையா என்பதுதான் புலனாகவில்லை. இவர்கள் அவைகளின் உண்மைக் கருத்துகளை உணர்ந்து

கொண்டு அப்பால் முஸ்லிம்களைப் பொறுத்த வரை காங்கிரஸ் பிரயோசனமளிக்கவல்லதா? அல்லவா? என்பதை வரையறுக்கட்டும்.

எந்த முஸ்லிம்களின் இறைவன் ஒன்ருகவும், ரசூல் ஒன்ருகவும், மார்க்கம் ஒன்ருகவும், "கிப்லா" ஒன்ருகவும், சட்ட திட்டங்கள் ஒன்ருகவும், வாழ்க்கைகள் ஒன்ருகவும், இன்னும் மற்றைய இலௌகீக வைதீக விஷயங்கள் ஒன்ருகவுமிருக்கின்றனவோ, அவ்வாருன இஸ்லாமிய சமூகம், பல தெய்வங்களையும், பல அவதாரங்களைக் கடவுளாகவும், பல பிரிவுகளையும் பல கருத்துக்களையும், பல நடத்தைகளையும் கொண்ட மற்ருெரு சமூகத்துடன் சேர்ந்து ஒத்துழைப்பதென்பது முடியாத காரியமே. இவ்வாருன சமூகத்துடன் முஸ்லிம் சமூகமும் சேர்ந்து உழைப்பதும், அதனுல் முஸ்லிம் சமூகத்துக்கு விடுதலை கிடைக்கும் என்பதும் ஒருவராலும் ஏற்றுக்கொள்ள முடியாத விஷயம். எந்த ஜனங்கள்மீது திருமறை ரொம்ப ஈனமாக கூறியிருக்கின்றதோ அந்த ஜனங்களுடன் முஸ்லிம்களும் சேர்ந்துகொண்டு தாளம் போடவேண்டுமென்பது எந்த மார்க்கக் கட்டளை? காங்கிரஸ் மௌலவிகளுக்கு மட்டும் ஒரு தனிப்பட்ட மார்க்கக் கட்டளை இருக்கலாம்! ஆதலால், அதை (காங்கிரஸை) ஒரு ஹிந்து சமூகமில்லை யென்று கூறுவது சுத்தத் தவறு என்பதில் கொஞ்சமேனும் சந்தேகமில்லை. காங்கிரஸிலுள்ள பெரிய பெரிய லீடர்களெல்லாம் அது ஹிந்து சமூகமே என பகிரங்கமாக ஒப்புக்கொண்டிருக்கிருர்களே. பண்டித மோதிலால் நெஹ்ரு கான்பூரில் ஒரு பிரசங்கம் புரியும்போது "நான் ஹிந்து அல்ல என்பது ஆதாரமற்றது. நான் பண்டித மாளவியாவைப் போன்ற ஒரு ஹிந்துதான். நான் முன் நின்று சொல்கிறேன். காங்கிரஸ் ஒரு ஹிந்து சமூகமே. 1920-21-ம் வருஷத்தில் சில முஸ்லிம்கள் இதில் இருந்தார்கள். ஆனுல், இது ஆரம்ப முதலே ஒரு ஹிந்து ஸ்தாபனந்தான்" எனக் கூறி யிருக்கிருர். ("ஷேரே பஞ்சாப்" டிசம்பர், 1926) ஆகவே காங்கிரஸ் ஒரு ஹிந்து ஸ்தாபனந்தான் என்பதர்க்கு இன்னும் இது போன்ற எத்தனையோ ஆதாரங்கள் காட்டலாம். இவ்வளவு பகிரங்கமாக தெரிந்ததற்கப்பால் ஒரு சில மௌலானுக்கள் சேர்ந்திருந்ததனுல் அது ஒரு ஹிந்து ஸ்தாபனமல்ல, பொது ஸ்தாபனந்தான் என்று கூறிவிட முடியாது.

ஆகவே, முஸ்லிம்களைப் பொறுத்தவரையில் மதவுரிமை, அரசியல் உரிமைகளைப் பெறுவதற்கும், வருங்கால வாழ்க்கையில் முஸ்லிம்கள் உச்சஸ்தானம் அடைவதற்கும், இன்னும் சமூக வாழ்வு சீர்படுவதற்கும் ஒரு சபை அவசியமென்ருல், அது "முஸ்லிம் லீக்" தான். முஸ்லிம்களுக்கு விடுதலையடைய எண்ணமிருக்கும்பட்சத்தில் தங்களது ஸ்தாபனமான முஸ்லிம் லீகில் சேரவேண்டியது அவசியம். யார் முஸ்லிம்களை இந்த சமூகத்துடன் சேர்ந்து ஒத்துழைக்கக் கூறுகிருர்களோ அவர்கள் தாங்கள் ஏமாந்தது மன்னியில் மற்றவர்களையும் ஏமாற்றவே பார்க்கிருர்கள். ஆதலால் முஸ்லிம்களே! உஷாராக யிருந்துகொள்ளுங்கள்.

எனவே, நமது தலைவர் ஜனுப் ஜின்ணு அவர்கள் நம் முஸ்லிம்களை ஒற்றுமையுடனிருக்குமாறு கூறுகின்ருர்; நாம் அனைவரும் முஸ்லிம் லீக்கில் ஒன்றுபட பகிரதப் பிரயத்தினப்படுகிருர். ஆகவே, நாம் அவ்வாறு ஒற்றுமைப் பட்டு நமது கோரிக்கையில் பெற்றி பெற்று சீரும் சிறப்பும் பெற்று வாழ்வோமாக.

ஹிபாஜத்துல் இஸ்லாம் டெபுடேஷன் இந்தியா பிரயாணம்.

கொழும்பு, 25-7-38.

தூதுவக் கூட்டத்தினரான மௌலானு மௌலவி அல்ஹாஜ் S. A. முகம்மது அலீ சாஹிப், மௌலானு மௌலவி அபுல் பயான் M. முகம்மது மியான் சாஹிப் இவர்கள் சிலோன் மேல் பகுதிகளின் சுற்றுப் பிரயாணத்தை முடித்துக்கொண்டு கொழும்புவந்து 25-ந் தேதி பின்னேரம் இந்தியாவுக்குப் பிரயாணமானுர்கள். மௌலானுக்களை வழியனுப்ப வியாபாரிகள், உலமாக்கள் மற்றும் பிரபலஸ்தர்கள் ஏராளமாக வந்து குழுமி யிருந்தனர். அவர்களில் முக்கியஸ்தர்கள் மீறட் மௌலானு மௌலவி முகம்மது அப்துல் அலீம் சாஹிப் ஸித்தீகி, மௌலானு செய்யித் ரவூப்பாகூஷா சாஹிப், B.A., ஜனுப்கள் S. T. R. சாலே முகம்மது சாஹிப், ஷெ அப்துற்றஹ்மான்பாய், O. H. P. & Co. ஏஜண்டு, M. H. முகம்மது இஸ்மாயீல், ஜுனைத்சாஹிப், ஹாஜி A. M. K. முகம்மது ஷரீப் மரைக்காயர் முதலியவர்களாவர். மௌலானுக்கள் எல்லோருடனும் முகமன் முஸாபஹாச்செய்து விடைபெற்றுக் கொண்டனர். அல்லாஹ் அக்பர் என்ற கோஷத்தினிடையே புகைரதம் பிரயாணமாயிற்று.

(விசேஷ நிருபர்.)

ஆங்கில அரிய நூல்கள்

மீரட், ஹிஸ் ஹோலினஸ் மௌலானு மௌலவீ முஹம்மது அப்துல் அலீம் சாகிப் ஸித்தீக்கி அவர்கள் அரபியிற்றேர்ந்த பண்டிதராக இருப்பதுமல்லாமல் ஆங்கிலக் கல்வியிலும் உயர்தரப் பட்டப் பரீக்ஷையிற்றேர்ந்த மேதாவி என்பதும், ஜப்பான், சைனு, ஆஸ்டிரேலியா, தென் ஆப்பிரிக்கா, மலாயா முதலிய தூர தேசங்கள் சென்று மார்க்கோபன்யாசம் புரிந்து வருவதும், இவர்களது அரிய உபன்யாசங்களைக் கேட்ட நூற்றுக் கணக்கான மேதாவிகள் இஸ்லாத்திற் சேர்ந்து வருவதும் உலகப் பிரசித்தம். மௌலானு அவர்கள் இஸ்லாத்தின் சிறப்புகளையும் தத்துவங்களையும்பற்றி ஆங்கிலத்தில் பல நூல்களை எழுதியுள்ளார்கள். இந்நூற்கள் ஆங்கிலங் கற்றவர்களுக்கு தக்க பிரயோஜனம் அளிப்பதாக இருப்பதால், அன்பர்கள் இவைகளை வாங்கிப் படித்துப் பிரயோஜனம் அடைவார்களென்று எதிர்பார்க்கிறோம்.

	புத்தகங்களின் விபரம்.	Rs.	A.
1.	The Elementary Teachings of Islam	0	8
2.	A New Muslim World in making	0	8
3.	A Shavian meets a Theologian	0	3
4.	Deeni Omoomi (Urdu)	0	2

கிடைக்குமிடம் :— மானேஜர்,

ஹிபாஜத்துல் இஸ்லாம்,

43, போஸ்டாபீஸ் தெரு,

G. T., மதராஸ்.

சென்னை-600 008

சந்தா நேயர்கட்கு

ஒவ்வொரு ஆண்டுக்குமுள்ள சந்தா ரூபாயை வருட ஆரம்பத்தில் கொடுத்து அரும் மாசிகையை அன்போடு ஆதரிக்கவேண்டியது முக்கியமாக இருக்க, அநேகர் சென்ற வருடங்களின் பழைய பாக்கிகளை அனுப்பிக் கொடுக்காமலே இருக்கின்றனர். நமது மாசிகைக்கு ஏற்பட்டுள்ள சந்தா ரூபாய் வெகு சொற்பமாகையால் இதற்காக அடிக்கடி தபால் எழுதுவது கொண்டு வீண் செலவேற்படுகிறது. ஆதலால், அன்பர்கள் தங்கள் பாக்கிகளையும், புதிய ஆண்டுக்குரிய சந்தா ரூபாயையும் உடனே அனுப்பி வைக்குமாறு கோறுகிறோம்.

சிலோன் சந்தா நேயர்கள் :—சிலோன் பகுதிகளுக்கு வி. பி. அனுப்புவதானால் அதிகமான வீண் செலவேற்படுகிறது. சந்தா நேயர்கள் அதிகமான ரூபாய் கொடுத்து வி. பி. பெற்றுக் கொள்ளும்படி நேரிடுகிறது. ஆகவே, கொழும்பு, கண்டி, மாத்தளை, நீர்கொழும்பு, கம்பளை முதலிய இடங்களிலுள்ளவர்கள் தங்கள் பாக்கிகளை நமது ஏஜண்டுகள் மெஸ்ஸர்ஸ் **A.M.K.** ஹாஜி ஸ்டோர் (220, 2-ம் குறுக்கு தெரு, கொழும்பு) அல்லது ஜனாப் **M. I.** ஷம்ஸு மொய்தீன் (65 பிரிஸ்டல் புல்டிங் கோட்டை கொழும்பு) இவர்களிடமாவது கொடுத்து ரசீது பெற்றுக் கொள்ளும்படி கோருகிறோம்.

பர்மா :—ரெங்கூன், மாந்தலே முதலிய பர்மா பகுதிகளுக்கு தபா கட்டணம் அதிகமாய்விட்டதால் ஒவ்வொரு சந்தாதாருக்கும் தனித்தனியே தபால் எழுதுவது கொண்டு அதிகச் செலவேற்படுகிறது. ஆகவே, அவ்விடங்களிலுள்ள சந்தா நேயர்கள் சென்றவருட பாக்கியையும் நடைபெறும் இவ்வருடத்திற்குரியவைகளையும் உடனே அனுப்பிவைப்பார்களென்று எதிர்பார்க்கிறோம்.

பினாங், மலாயா :—இவ்விடங்களிலுள்ளவர்கள் சென்ற வருஷத்திய தங்கள் பாக்கிகளையும், புதிய வருடத்திய சந்தாவையும் கிள்ளான் ஆலி ஜனாப் அல்ஹாஜ் **K. A.** பகீர் முகம்மது சாஹிப் அவர்களிடம் நேரிலோ, தபால் மூலம் அனுப்பியோ ரசீது பெற்றுக்கொள்ளுமாறு கோருகிறோம்.

சிங்கை :—இவ்விடத்திய சந்தாநேயர்கள் சென்ற வருடத்திற்குரிய தங்கள் சந்தா பாக்கியையும், புதிய வருடத்திற்குரிய சந்தாவையும் ஜனாப் **L. A.** முகம்மது யாஸீன் அவர்கள் (249, தஞ்சாங்பகர்ரோட், சிங்கை) இடம் கொடுத்து ரசீது பெற்றுக்கொள்ளுமாறு கோருகிறோம்.

மானேஜர்.

Printed by V. Sundram Iyer at the Kesari Printing Works, 150, Anna Pillai St., Madra
Edited & Published by Moulvi A. R. Abdur Rahim Saheb, Manager, Hifazath-ul-I
43, Post Office St., G. T. Madras.